கல்கி

குடும்பத்துடன் படிக்க...


KALKI
20.1.2008 ரூ.8.00
80 பக்கங்கள்





To be used as directed by the Physician


பொன்னு விளையற பூமி
பொன்பூமியில் விளையும்
தங்க நெக்லஸ் அனைத்தும் பொக்கிஷம்
தி சென்னை சில்க்ஸ்
ஜுவல்லரி மஹால்
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகை
தி.நகர், சென்னை - 17. Ph : 044-24330888
Shop online at www.ktmjewellery.com



மூளையின் செயல்பாடுகளை

போன வாரம்தான் எனக்குப் பிரசவம் ஆனது. என் குழந்தையின் தொப்புளை நான் துணிபோட்டு மூட வேண்டுமா, இல்லையா? அப்படி மூடவில்லையென்றால் அதன் வழியாகக் காற்று உள்ளே போய்விடும், குழந்தைக்கு அதனால் பலவிதத் தொந்தரவுகள் உண்டாகும் என்று சிலர் பயமுறுத்துகிறார்களே?

குழந்தை நல மருத்துவர் டாக்டர் நிகிலா ஷர்மா : தொப்புள் பகுதி உட்புறமாக நன்கு காய்ந்து அடைபட்டுவிடுகிறது. எனவே காற்று ஒருபோதும் தொப்புள் வழியாக, குழந்தையின் உடலுக்குள் செல்வதில்லை.

குழந்தையின் தொப்புள் தொடர்பாக வேறொரு சந்தேகமும் பல அம்மாக்களுக்கு எழுவதுண்டு. குழந்தையின் தொப்புள் பகுதி மிகவும் சிவப்பாக இருப்பதாகவும் பார்ப்பதற்கே பயத்தை உண்டாக்கும்படியும் இருக்கிறது என்பதுதான் அது.

உங்களுக்குத் தெரியும், அம்மாவையும் குழந்தையையும் இணைக்கும் தொப்புள் கொடி பிரசவத்தின்போது துண்டிக்கப்படுகிறது என்பது. குழந்தையின் தொப்புள் பகுதி ஆறுவதற்கும், அதிகப்படியாக ஒட்டிக்கொண்டிருக்கும் பகுதி கீழே விழுவதற்கும் சுமார் இரண்டு வாரங்கள் வரை தேவைப்படும். சில சமயம் இப்படி ஆறும் சமயத்தில் மெல்லிய திரவம்கூட ஓரளவு அந்தப் பகுதியில் சுரக்கக்கூடும். தொப்புளைச் சுற்றியுள்ள பகுதி இளஞ்சிவப்பு நிறத்தில் மாறலாம். இவையெல்லாம் சாதாரணமாக நடப்பதுதான். பதற்றப்பட எதுவுமில்லை.

ஆனால், குழந்தையின் தொப்புளைச் சுற்றியுள்ள தோல் பளிச்சென்ற சிவப்பு நிறத்துக்கு மாறினாலோ, தொப்புளைச் சுற்றி துர்நாற்றம் வீசினாலோ அல்லது கொழகொழவென்ற திரவம் ஏதாவது குழந்தையின் தொப்புள் பகுதியிலிருந்து வெளியேறினாலோ டாக்டரை அணுகுங்கள். ஏனென்றால், இவை அந்தப் பகுதியில் தொற்றுநோய் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகளாக இருக்க வாய்ப்புண்டு.

குழந்தையின் வயிற்றுப் பகுதியை சுத்தமாகவும் ஈரமில்லாமலும் வைத்துக்கொண்டால், தொப்புள் பகுதியில் தொற்றுக் கிருமிகள் உருவாகவோ, பரவவோ வாய்ப்பில்லை. குழந்தையின் தொப்புள் பகுதி ஆறுவதற்குக் கொஞ்ச நாட்கள் தேவைப்படும். அதுவரை நல்ல பஞ்சில் ஆல்கஹாலைத் தொட்டு தினமும் இரண்டு முறை தொப்புளைச் சுத்தப்படுத்தலாம். மற்றபடி தொப்புள் பகுதியில் வசம்பு

போடுவதற்கெல்லாம் அவசியமில்லை.

மூளையின் செயல்பாடுகளை சரியாக அளவிடும் தொழில்நுட்பம் ஏன் இன்னமும் அறிமுகமாகவில்லை?

மனநல மருத்துவர் டாக்டர் ஆனந்தன் : ரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவைக் கணித்து எந்த அளவு நீரிழிவு நோய் என்று சொல்வதைப் போல, மூளையின் ஹார்மோன்கள் போன்றவற்றை அளவிடும் முறை இல்லையா என்று கேட்கிறீர்கள்...

உடல் குறைபாடுகளை 'ஸ்ட்ரக்சுரல்', 'ஃபங்ஷனல்' என்று பிரிப்பதுண்டு. ஒரு குறிப்பிட்ட உறுப்பின் அளவு, வடிவம் போன்றவற்றில் குறைபாடு ஏற்பட்டால் அதை ஸ்ட்ரக்சுரல் குறைபாடு என்றும், அதன் செயல்பாட்டில் குறை இருந்தால் அதை ஃபங்ஷனல் குறைபாடு என்றும் குறிப்பிடுவோம். மனம் என்று நாம் குறிப்பிடுவது மூளையின் செயல்பாடுகளைத்தான்.

அளவிட முடியுமா?



* டாக்டர் ஆனந்தன்



* டாக்டர் நிர்மலா ஷர்மா

நம் நோயாளிகளுக்கு மூளையின் செயலை அன்றாடம் அளந்து பயன்படுத்துமளவுக்கு தொழில்நுட்பம் வளரவில்லை என்பது உண்மை தான். ஆனால், அந்தக் காலம் வெகு தொலைவில் இல்லை. 'சார், உங்களுக்கு டோபமைன் இவ்வளவு இருக்கு. அதனால்தான் இந்தச் சிக்கல்' என்று அடுத்த தலைமுறை டாக்டர்களால் கூற முடியலாம். அந்தக் கட்டத்தில் மனவியல் என்ற துறையே மறைந்துபோய் 'நரம்பியல் மனவியல்' என்ற துறை மலரலாம். சொல்லப் போனால் சில மேலை நாடுகளில் இந்த மாற்றம் நடக்கத் தொடங்கிவிட்டது.

— ஜி.எஸ்.எஸ்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com


சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



கலைஞருக்கு

ஆளும்கட்சியை நோக்கி நாளுக்கொரு குண்டு போட்டுக்கொண்டிருக்கும் டாக்டர் ராமதாஸை சந்தித்தபோது, தம் மனத்தில் உள்ளவற்றை எல்லாம் கொட்டித் தீர்த்தார் :

திடீரென்று மது விலக்குப் பிரச்னையைக் கையிலெடுத்தது ஏன்?

''சமூகத்தில் ஒழுக்கம், அமைதி நிலவி, ஏழ்மை ஒழிந்து, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்றால், மதுவை ஒழித்தே தீர வேண்டும். அறிவார்ந்த சமுதாயம் உருவாவதை விரும்பாதவர்கள்தான் மதுக் கடைகளைத் திறந்து வைப்பார்கள். இது பெண்களை நேரடியாகப் பாதிக்கும் பிரச்னை. பெண்கள் அமைதியாக வாழ முடியவில்லையென்றால், மொத்த சமுதாயமும் முன்னேற முடியாது. காந்தி, நேரு, ராஜாஜி, பெரியார், காமராசர், அண்ணா ஆகியோர் குடிப் பழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று போராடியவர்கள். முதல் கட்டமாக கலைஞர் அவர்கள், கடைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். பார்களை மூட வேண்டும். கடைகளின் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும். இதை வலியுறுத்தித்தான் குமரியிலிருந்து சென்னை வரை நடைப்பயணம் செல்லவிருக்கிறேன். நாட்டு நலன் மீது பற்று கொண்டோரின் ஆதரவை வேண்டுகிறேன். குடியை ஒழிக்க வேண்டுமென்று இதுவரை பதினான்கு இளைஞர் மாநாடுகள் நடத்தி இருக்கிறேன்.''

கடந்த மூன்று வருடங்களில் 110 கோடி லிட்டர் மது, அரசு கடைகளில் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

மது விலக்கை அமல்படுத்தினால் கள்ளச் சாராயம் ஆறாக ஓடும் என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறதே!

''சுத்த பைத்தியக்காரத்தனம்! தெளிவான, துணிவான நடவடிக்கைகள் மூலமாக கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும். ஒரு காவல் துறை அதிகாரியை என்னிடம் அனுப்பட்டும். கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் வழிகளை நான் சொல்லித் தருகிறேன். இது ஒரு பக்கம் இருக்க, கடந்த மூன்று வருடங்களில் 110 கோடி லிட்டர் மது, அரசு கடைகளில் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. மது வெள்ளமாய்ப் பாய்ந்து லட்சக் கணக்கான குடும்பங்களை அழித்துக் கொண்டிருக்கிறது. அடிப்படையில் ஒரு

குட்டைப?

-ராமதாஸ் பேட்டி

சமூக ஊழியனான நான், தேர்தல் ஆதாயங்களை மனதில்கொண்டு பேசாமல் இருக்க முடியாது. பா.ம.க. ஆட்சிக்கு வந்தால் குடி அறவே ஒழிக்கப்படும்.''

கலைஞருக்கு குட்டை சொல்லிவிட்டீர்களா?

''யார் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் 2011ம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சிக்கு எங்கள் ஆதரவு தொடரும். 2009ல் பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் அணியில் இருப்போம்.''

தி.மு.க. அரசின் செயல்பாடுகளை விமர்சித்து பச்சை மிளகாய் அறிக்கைகள் கொடுக்கும் நீங்கள், தி.மு.க.வுடன் ஒரே அணியில் இருக்க முடியுமா?

''கூட்டணியில் நீடிக்க வேண்டுமென்பதற்காக மக்கள் பிரச்னைகளைப் பேசாமல் இருக்க முடியுமா? ஆக்கபூர்வமான எங்கள் விமர்சனம் தொடரும். நிதி அமைச்சர் சிதம்பரம் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர்களும்கூட, தி.மு.க. அரசை விமர்சிக்கிறார்களே! விமர்சனங்களை வரவேற்கும் தன்மை கலைஞரிடம் இன்னமும் இருக்கிறது என்று நம்புகிறேன். இப்போது ஏற்பட்டுள்ள கசப்புணர்வு கடந்து செல்லும் மேகம் போன்றதுதான்.''

ஆற்காடு வீராசாமி, துரைமுருகன் போன்றோர் உங்களை எதிர்த்து கடுமையான அறிக்கைகள் விட்டதோடு, நீங்கள் வளர்ச்சிக்கு எதிரானவர் என்று குற்றம் சுமத்துகிறார்களே?

''2020ல் தமிழகம் விவசாயம், தொழில், வேலைவாய்ப்பு, இளைஞர் நலன் என்று எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க, ஆக்கபூர்வமான திட்டங்களை மக்கள் முன் வைத்திருக்கும் எங்களைப் பார்த்து வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என்று சொல்பவர்கள், அறியாதவர்கள், தெரியாதவர்கள், புரியாதவர்கள். அல்லது புரிந்தும் புரியாமல் நடிப்பவர்கள். அவர்களைக் கண்டு கொள்ளத் தேவையில்லை.''

போதை பாக்கு, லாட்டரிக்கு எதிரான உங்கள் போராட்டம் என்னவாயிற்று என்று தி.மு.க. அமைச்சர்கள் கேட்கிறார்களே?

''நான் ஆட்சியில் இருந்தால் கேள்வி கேட்கலாம். அதிகாரத்தில் அவர்கள் அல்லவா இருக்கிறார்கள். லாட்டரியை ஒழிக்கும் நோக்கில் மார்ட்டின் என்ற லாட்டரி அதிபரைக் கைது செய்ய முனைவதாகச் சொல்லி, இன்னமும் 'உலகம்' முழுக்கத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இதன் அரசியல் பின்னணியும் மர்மமும் என்னவென்பதை விளக்குவார்களா?''

நல்ல திட்டங்களை சர்வாதிகார போக்கோடு செயல்படுத்தியதாக மத்திய அமைச்சர் அன்புமணியின் மீது





“எங்கள் கட்சியில் நடிகர்களைச் சேர்ப்பதில்லை. மற்றபடி சில நபர்களைப் பற்றி நான் பேசுவதில்லை!”

குற்றச்சாட்டு வைக்கப்படுகிறதே!

“புகையிலை பயன்பாடு உடலுக்குக் கேடு என்பதில் சமரசம் இருக்க முடியுமா? புகையிலை அதிபர்கள், அன்புமணியை அப்படிச் சித்திரிக்கும் வகையில் பிரசாரம் செய்கிறார்கள். இந்த விஷயத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைகள்தான் செயல்படுத்தப்படுகின்றன. உலக அளவில் பாராட்டுகள் கிடைக்கின்றன. அதுபோல மருத்துவ மாணவர்கள் கிராமப்புற சேவை விவகாரத்தில், அமைச்சர் ஒரு யோசனைதான் சொன்னார். அது மக்கள் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டது. இது தொடர்பாக வரைவு மசோதாவோ, உத்தரவுகளோ இல்லை. இது எப்படி சர்வாதிகார திணிப்பாகும்? மருத்துவ மாணவர்கள் விஷயத்தில் தமிழகத்தில் மட்டும்தான் போராட்டம் நடந்தது. அமைச்சர் அன்புமணிக்குக் கெட்ட பெயர் வரட்டும் என்ற நோக்கிலேயே இந்தப் போராட்டம் துவக்கத்திலேயே அடக்கப்படாமல், தூண்டிவிடப்பட்டு நீண்ட நாள் அனுமதிக்கப்பட்டது.”

மக்கள் தொலைக்காட்சியில் நல்ல தமிழ்த் திரைப்படங்களையும், இயக்குநர்கள் பேட்டிகளையும் ஒளிபரப்பலாமே?

“திரைப்படம் என்பது வேறு; தொலைக்காட்சி மீடியம் என்பது வேறு. தமிழகத்தில்தான் தொலைக்காட்சி, சினிமா காட்சியாகப் போயிருக்கிறது. தகவல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு என்பதே நோக்கமாக இருக்க வேண்டும். திரைப்படம் பார்க்க வேண்டுமென்றால் தியேட்டரில் போய்ப் பார்க்கட்டும். அந்த நேரத்தில் வேறு பயனுள்ள நிகழ்ச்சிகளைப் போடலாமே. மக்கள் தொலைக்காட்சி துவங்கும்போது இரண்டு உறுதிமொழிகளுடன் துவக்கினோம். ஒன்று, சினிமாத்தனம் இல்லாமல் நடத்துவது. மற்றொன்று எந்தத் தொடரையும் ஆறு மாதத்துக்கு மேல் ஒளிப்பரப்பக் கூடாது. இறுதிவரை இது அமல்படுத்தப்படும். ஒரு புள்ளி விவரப்படி தொலைக்காட்சி நேயர்கள் 40 சதம் சினிமாத்தனத்தை விரும்புவதில்லை. அதைத்தான் நாங்கள் டார்கெட் செய்கிறோம்.”

சரி, திரைப்படங்களுக்கு நீங்கள் எதிரியா?

“கண்டிப்பாக நல்ல திரைப்படங்களுக்கு நான் எதிரி அல்ல. சுமார் ஒன்றரை மணி நேரத்தில் வன்முறை, ஆபாசம், குத்துப் பாட்டு, புகை, மது குடித்தல் இல்லாமல் ஒரு கருத்துள்ள படம் வந்தால், என் ஆதரவு உண்டு. சமீபத்தில் ‘தாரே ஜமீன் பார்’ என்று ஓர் இந்திப் படம் வந்திருக்கிறது. நல்ல படத்துக்கான சகல அம்சங்களும் அதில் இருக்கிறது.”

நடிகர்கள் கட்சியுடன் கூட்டணி உண்டா?

“எங்கள் கட்சியில் நடிகர்களைச் சேர்ப்பதில்லை. மற்றபடி சில நபர்களைப் பற்றி நான் பேசுவதில்லை.”

– ப்ரியன்

கிரேஸியைக் கேளுங்கள்

● **மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்**

ஹலோ கிரேஸி... எங்கக் கவர்ச்சி நடிகையின் தொப்புளில் பம்பரம் விட, உங்களுக்கு ஆசை...?

பஸ்மாசுரனை அழிக்க கவர்ச்சிகரமான மோகினியாக நடித்த மகாவிஷ்ணுவின் நாபிக் கமலத்தில். ஆனால், அங்கு ஏற்கெனவே நம்மையெல்லாம் பம்பரமாக ஆட்டிப் படைக்கும் பிரம்மா குடியிருக்கிறார். தூங்கிக் கொண்டிருக்கும் மகாவிஷ்ணுவை எழுப்பி, நான் பம்பரம் விட்டதை பிரம்மா அவரிடம் போட்டுக் கொடுத்துவிடுவார். அப்புறம், தொப்புளில் பம்பரம் விட்ட என் தலையில் மகா விஷ்ணு சக்கரம் விட்டு எனக்குச் சங்கு ஊதிவிடுவார்; ஏன் வம்பு...!



● **டி.ஜெய்சிங், கோயம்புத்தூர்**

திருவிளையாடல் படத்தை மீண்டும் எடுத்தால், நடிகர் திலகம் சிவாஜி வேடத்துக்குப் பொருத்தமானவர் யார்...?

ஒருமுறை 'சார்லி சாப்ளின்' மாறுவேடப் போட்டிக்கு, ஒரிஜினல் சார்லி சாப்லினே மாறுவேடத்தில் போய் போட்டியில் பங்கேற்றாராம். போட்டியில் அவருக்குக் கிடைத்தது இரண்டாவது பரிசு. அதே போல, அறுபத்தைந்தாவது திருவிளையாடலாக அந்த ஒரிஜினல் பரமசிவனே நடிகராக வந்து 'திருவிளையாடல்' ரீமேக்கில் நடித்தாலும், நான் தைரியமாக, 'நீர் நெற்றிக்கண்ணைத் திறப்பினும் நடிகர் திலகமே உம்முடைய ரோலுக்குப் பொருத்தமானவர்' என்று சிம்மக் குரலில் கர்ஜிப்பேன்!

● **காளமேகம், நெல்லை**

'தசாவதார' நாயகனுக்குப் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்தீரா...?

கமல் ஒரு கவிதை. கேள்வி கேட்ட நீங்களோ காளமேகம். எஸ்.எம்.எஸ்.ஸில் அவருக்கு நான் அனுப்பிய செல்-வெண்பா...

'அசாதாரணமாக ஐயிரண்டு வேடத்தை
தசாவ தாரத்தில் ஏற்றோய் - விசேஷமாய்,
பத்தாண்ட திண்தோள் பரந்தாமன் போலநீர்,
புத்தாண்டில் வாழ்க பழுத்து...'

● **அ. ராஜா ரஹ்மான், கம்பம்**

எம்.ஜி.ஆர். - சிவாஜி, ரஜினி - கமல் என்ன வித்தியாசம்...?

பத்மஸ்ரீ ஜெமினி கணேசன்!

● **நீ.முத்துக்குமார், திருச்சி**

ஹீரோவா உங்களை வெச்சு சினிமா எடுக்கப் போறேன். கால்ஷீட் கிடைக்குமா...?

நான் கால்ஷீட் கொடுத்துருவேன். சினிமா எடுத்து அப்புறம் நீங்கதான் பெட்ஷீட் விரிச்சுப் படுக்க வேண்டி வரும், பரவாயில்லையா...? ஏன் ரிஸ்க்... கால்ஷீட்டுக்குப் பதிலா, முழு-ஷீட் மூணு கொயர் தாங்க. முழு நீள நகைச்சுவை

சினிமாவுக்கான கதை-திரைக்கதை- வசனத்தை எழுதித் தர்றேன்.

● **எஸ்.ராஜா, மதுரை**

ரஜனி சாரைப் பற்றி மூன்று வரிகள்...?

ரஜினி சாருக்கு 'மூன்று முகம்.' ஒரு முகம் ஆல்வேஸ் ஆன் மிக முகம். அதனால் இரண்டாவது முகம் எப்போதும் வெற்றி முகம். மூன்றாவது முகம் சுபாவமான அவரது சுமுகம்.




ரவிகுமாரின் பைபாஸ் வெற்றி!

● **ரா.சரண்யா, பெங்களூர்**

நீங்கள் பார்த்து பிரமித்த இயக்குனர் யார்...?

வியக்குனர்... அதாவது நான் வியக்கும் இயக்குனர் கே.எஸ்.ரவிகுமார். வெற்றி, தோல்வி யார் வந்து கதவைத் தட்டினாலும் 'போயிட்டு அப்புறம் வாங்க... நான் கதை டிஸ்கஷன்ல இருக்கேன்' என்று சொல்லும் அளவுக்குக் கருமமே கண்ணாயினார். இவர் இயக்கும் படங்களில் சென்டி மெண்ட்ஸ் ஜனங்களிடம் ஒர்க்-அவுட் ஆவதற்கு முக்கிய காரணம், இவரே ஒரு சென்டிமெண்டான மனிதர். 'அவ்வை சண்முகி'யில் வசனம் எழுதும்போது, கதாநாயகன் கமலுக்கு 'காளி' என்று பெயர் வைத்து எழுதினேன். சென்டிமெண்டாக 'காளி'க்குப் பதிலாக வேறு பெயர் வைக்கும்படி ரவிகுமார் கூறினார். சரி, ஷூட்டிங்கின்போது பார்த்துக்கொள்ளலாம் என்று நான் சும்மா இருந்துவிட்டேன். தேவாவுடன் மியூஸிக்கம்போசிங்போது 'எங்கோ பிறந்தவ'ராம்'... எப்படியோ வளர்ந்தவ'ராம்'... பாட்டில் ராம் ராம் என்று வருவதுபோல, ஹீரோவின் பெயர் வந்தால் நன்றாக இருக்கும்' என்று கமல் சொன்னார். நான் உடனே ''சார், ஹீரோ பேர் பாண்டினு வெச்சுப்போம். இருப் பாண்டி, கொடுப்பாண்டினு பாட்டுல கொண்டு வர முடியுமான்னு வாலி சார் கிட்ட கேப்போம்'' என்று 'பேர்' ஆசை யில் பாய்ந்து கூறினேன். ரவிகுமார் சென்டிமெண்டுக்கு முக்கியத்துவம் கொடுக்க, அன்று காளி என் நாக்கில் அமர்ந்து பாண்டி ஆடிவிட்டாள். கே.எஸ்.ரவிகுமார் பாதையில் போனால் வெற்றி நிச்சயம். அப்படியே மறந்து நாம் வேறு பாதையில் போனாலும், அவர், வெற்றியை பை-பாஸில் அழைத்துக் கொண்டு வந்துவிடுவார். ●


பழனிக்குப் பஞ்சாமிர்தம் மாதிரி பரத்துன்னா சின்ன தளபதின்னு கேக்க நல்லாத்தான் இருக்கு. பேரரசு அண்ணாச்சி மனசு வைக்கணுமே!
பொங்கல்
தங்கர்பச்சான் படத்தைத் தாண்டினா கிடைக்கும் தங்கம்... இல்லேன்னா வந்துடும்ங்க பங்கம்!
பிடிச்சிருக்குன்னு பேர் வச்சா போதாதுங்கோ... ஜனங்களுக்குப் பிடிக்கிற மாதிரி பின்னிப் பெடலெடுத்திருக்கணும்!



பீமா, கோமா ஸ்டேஜுக்குப் போயிடுவான்னுதான் நினைச்சோம்... பரவால்ல, வந்துட்டானே காமா...!
ரீலீஸ்...
கமெண்ட்ஸ்: காவ்யா
புலிகேசி ரூட்டுல தினம் உழை... அழகப்பன் காட்டுல வரும் அடை மழை...!
காதல் கோட்டை கட்டின அகத்தியன், நம்ம நெஞ்சத்தைக் கிள்ளாமலா போயிடுவாரு?

2



புள்ளிகள்... கோலங்கள்...

பருதலம் சுகுமாரன்

''இது அநியாயம், அக்கிரமம். பொறுத்துக்கொள்ள முடியாத சதி. இதை இப்படியே விட்டால், என் தங்கச்சிக்கு ஏற்பட்ட நிலைமைதான் மத்த அப்பாவிப் பெண்களுக்கும். இதைப் பார்த்துட்டு என்னால பொறுமையாய் இருக்க முடியலை சிவா, ஏதாவது பண்ணியாகணும்.''

கதாநாயகி, க்ளோஸ்-அப்பில் கோபப்பட்டாள். முழுமையாக அவளைக் கதறவிட்டு, காட்சிக்குள் நுழைந்தான் சிவா. (சீரியல் டைரக்டர் பூபதிதான், சிவா).

அழுபவளைப் பரிவுடன் பார்த்தான்.

''கவலைப்படாதீங்க கவி. நிச்சயமா தீர்வு பண்ணலாம். அதுக்கு நிறைய வழிகள் இருக்கு. உங்களுடைய சகோதரிக்குத் தீங்கு செஞ்சவங்களை சுலபமா சட்டத்தின் பிடியில் கொண்டு வந்துடலாம். நீங்க மனம் தளரக் கூடாது. கவி... ப்ளீஸ்...'' என்று தேற்றிக்கொண்டிருக்கையில்,

பொன்ராஜின் செல்ஃபோன் சங்கீதக் குரல் கொடுத்தது. டி.வி. ஒலியைக் குறைத்து, செல்லில் நோக்கினார். பரிச்சயமான எண்.

''ம்... சொல்லுங்க தரகரே...'' என்றார்.

''நாளைக்கே சுலேகாவைப் பெண் பார்க்க, மாப்பிள்ளை வீட்டார் வர்றோம்னு சொல்றாங்க...''

''அப்படியா... ஞாயித்துக்கிழமைன்னு சொன்னதா ஞாபகம்...''

''மாப்பிள்ளைப் பையன் நாளை மறுநாள் முக்கிய விஷயமா யு.எஸ். கிளம்பறார். திரும்ப ஒரு மாசமாகும். இன்னைக்குப் பெண் பார்த்துட்டால் மத்த விஷயங்களை பேரண்ட்ஸ்கிட்டே விட்டுட்டு, அடுத்த மாசம் நேரா முகூர்த்தத்துக்கு வந்து சேர்ந்துடலாம்னு அபிப்ராயப்படறார்.''

''சரி வாங்க'' என்றார் பொன்ராஜ்.

செல்லை அணைத்ததும், லேண்ட் லைன் அலறியது. ரிசீவரை எடுத்து காதில் வைக்க...

''உங்கள் மகள் சுலேகாவைப் பத்திப் பேசணும்...'' - கரகரத்தது ஒரு குரல்.

''யார் நீ... என்ன பேசணும்...?''

''போன்ல விவரமா பேசறது புத்திசாலித்தனமில்லைன்னு எனக்குத் தெரியும்... இன்னும் ஒருமணி நேரத்துல, கடற்கரைச் சாலை, நேப்பியார் பாலத்துகிட்ட வாங்க... பேசுவோம்...''

பொன்ராஜ் முகம் மாறியது.

யோசனையுடன் ரிசீவரை வைத்தார்...

'சுலேகாவிடம் என்ன பிரச்னை?'

(தொடரும்)

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று வித்தியாசம் பாராமல் யார், என்ன தவறு செய்தாலும் துணிந்து சுட்டிக்காட்டிய கல்கிக்கு 2007-ஆம் ஆண்டின் வில்லங்க விருது : 'கலியுக நக்கீரன்!'

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

உள்ளும் புறமும் - மருதனின் கட்டுரைகள் ஒவ்வொன்றும் மறக்க முடியாதவை!

- என்.சண்முகம், திருவண்ணாமலை

'யார் கோட்டைக்குப் போனாலும் மக்கள் குடிசையில்தான்' - தராசு பதில் ஒரு ஹைகூ.

- மல்லிகா அன்பழகன், சென்னை

பொட்டிலடித்தாற்போல் இருந்தது ரீமிக்ஸ் வன்முறை கட்டுரை.

- ஜி.லக்ஷ்மிபதி, சென்னை



கலியுக நக்கீரன்!

கலைஞர் தொலைக்காட்சியில் வரும் எங்களின் 'வைர நெஞ்சம்' தொடரை தங்களின் இதழில் வெளிச்சம் போட்டு மக்கள் பார்வைக்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. பெண் என்றாலே அழுபவள் என்பதை மாற்றி, பிரச்னைகளைக் கண்டு கலங்காமல் நெஞ்சுறுதியுடன் எதிர்கொள்ளும் எதையும் தாங்கும் இதயம் கொண்ட பெண்ணைப் பற்றிய கதை இது. கவியரசு வைரமுத்துவிடம் பாடல் கேட்கும்போது, அவர் அதை முதல்வர் கலைஞர் அவர்களிடம் தெரிவிக்க, அவர் வைத்த பெயரே வைர நெஞ்சம்.

- ஏவி.எம்.சரவணன், சென்னை

ஸ்பீடு போஸ்ட்

கலாசார சீரழிவை ஏற்படுத்தக் கூடிய சீரியல்களை தொலைக்காட்சிகள் ஒளிபரப்புவதை தணிக்கை செய்யாத அரசுக்கு எதிராக போராட்டம் எப்பொழுது என்று ரவீந்திர தாஸை கேட்டுச் சொல்லுங்கள்.

- வானவில் மூர்த்தி

இரட்டை இலையின்மேல் தாமரை கார்ட்டூன் சிம்ப்லி சூப்பர்!

- இரா.சக்கரபாணி, மதுரை


திருத்தம்

கல்கி 6.1.2008 இதழில் வெளியான 'என்னதான் நடக்கிறது ஈழத்தில்' என்ற கட்டுரையில் ஒரு திருத்தம். 'சிங்களர்களைக் குடியேற்றும் முகமாக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி எதுவும் நாங்கள் பார்க்கவில்லை. பத்திரிகைகளில் அவ்வாறு வெளியான செய்திகளையே ராணுவ அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டி விளக்கம் கேட்டேன். அதற்கு ராணுவ அதிகாரிகள், அவர்கள் வாக்கரை வந்தபோது, எல்லா ரெவின்யூ ஆவணங்களும் எரிக்கப்பட்டுவிட்டதைக் கண்டதாகவும் அதனால் உரியவர்களிடம் வீடுகளையும் நிலங்களையும் ஒப்படைக்கச் சிரமம் ஏற்படுவதாகவும் சொன்னார்கள்.

- டாக்டர் பி.சந்திரசேகரன், பெங்களூரு



கல்கி



2008 ஜனவரி 20
சர்வஜித் தை 6
மலர் : 66
இதழ் : 25


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.


உட்கட்சி ஜனநாயகத்துக்கு உயிரூட்டுங்கள்!

ராஜீவ் காந்தியின் மனைவி என்கிற ஒரே காரணத்தால் சோனியா காந்தி காங்கிரஸ் தலைவி ஆக முடிகிறது. ராஜீவ் காந்தியின் மகன் என்பதற்காக ராகுல் காந்தி எம்.பி. ஆகிறார்; கட்சியின் செயலாளராகவும் நியமிக்கப்படுகிறார். பேனசீர் மகன் என்பதாலேயே பிலாவல் புட்டோ கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார் - பத்தொன்பது வயதில்!

ஸ்டாலின், சிந்தியா, கார்த்திக் சிதம்பரம், ராதிகா செல்வி, பூங்கோதை ஆலடி அருணா, கனிமொழி, அன்புமணி என்று அரசியலுக்கு வாரிசு மார்க்கத்தில் வந்தவர்கள் இங்கு ஏராளமாக இருக்க, அமெரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மனைவி ஹிலாரி, ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக நியமனம் பெறவே பெரும் போட்டியைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்!

அமெரிக்கத் தேர்தல் முறையின் அமைப்பே உட்கட்சி ஜனநாயகத்தைப் பேணி வளர்ப்பது குறிப்பிடத்தக்கது. அந்நாட்டு ஜனாதிபதி தேர்தலில் நிற்க விரும்பும் நபர், தமது வேட்பாளர் நியமனத்தையே மக்கள் முன் வைத்து ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஜனநாயகக் கட்சியிலிருந்து யார் வேட்பாளராக வேண்டும் என்பதை ஒவ்வொரு மாநிலத்திலும் அக்கட்சி அபிமானிகளே நேரடியாகத் தீர்மானிக்கிறார்கள். அக்கட்சியைச் சேர்ந்த கறுப்பின வேட்பாளர் பாராக் ஒபாமா, சமீப நாட்களாக, தாம் செல்லும் மாநிலங்கள் தோறும் திரளான ஆதரவு பெற்று முன்னணியில் இருக்கிறார். ஐயோவா





மாநிலத்தில் முதல் கட்ட தேர்தல்களில் ஹிலாரி கிளின்டன் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அவர் ஒபாமாவுக்கு விட்டுக்கொடுத்து விலகி விடுவார் என்றுகூட பேச்சு அடிபட்டிருக்கிறது. ஹிலாரி இதனை மறுத்து, இறுதிவரை போராடப்போவதாக உறுதி செய்திருக்கிறார். ''இந்தச் சோதனை சுலபமானதல்ல'' என்று கூறியிருக்கிறார்.

முதல் பெண் ஜனாதிபதி என்ற தகுதிக்கு ஹிலாரியும் முதல் கறுப்பின ஜனாதிபதி என்ற பதவிக்கு பாராக் ஒபாமாவும் போட்டி போடுவது ஒரே கட்சியிலிருந்து என்பதைத்தான், உட்கட்சி ஜனநாயத்தை அறவே மறந்துபோன இந்திய அரசியல் கட்சிகள் கவனிக்க வேண்டும்.

இங்கே கட்சித் தேர்தல்களே நடத்தப்படுவதில்லை. அப்படியே நடந்தாலும் கண்துடைப்பாகவே நடத்தப்படுகின்றன.

குடும்ப வாரிசுகளும் பண - பலம் அல்லது அடியாள் பலத்தால் செல்வாக்கு வளர்த்துக் கொண்டவர்களும்தான் அரசியல் கட்சிகளின் முக்கிய பொறுப்புகளில் அமர்கிறார்கள்; அவர்களே வேட்பாளர்களாகிறார்கள் அல்லது வேட்பாளர் நியமனத்தை நிர்ணயிக்கிறார்கள்.

வாக்காளர்களும் வேறு வழியின்றி, தங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் தங்கள் மீது திணிக்கப்பட்ட வேட்பாளர்களுள் ஒருவரைத் தேர்வு செய்ய வேண்டியிருக்கிறது. முன் பின் தெரியாதவர்களும் தகுதியற்ற வேட்பாளர்களும் தேர்தலில் நிறுத்தப்படும்போது, வாக்களிக்கும் ஆர்வமும் குறைந்துபோய்விடுகிறது; ஜனநாயக அமைப்பின் மீது நம்பிக்கை தேய்கிறது.

இந்தியாவில் உண்மையான ஜனநாயகம் தழைக்க வேண்டுமானால், நமது அரசியல் கட்சிகள் உட்கட்சி ஜனநாயகத்துக்கு மதிப்பளிப்பது முக்கியமாகிறது. கட்சிக்குள் எல்லாப் பதவிகளுக்கும் நியமனங்கள் என்ற முறை மாறி, அடிமட்டத்திலிருந்து அகில இந்தியத் தலைமை வரை எல்லா நிலைகளிலும் கட்சி உறுப்பினர்கள் பங்கேற்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ●

மின்னல் கதைகள்



ஆசை

இது போலிச் சாமியார் சீன் போலும்! யாரோ போலி சாமியார் என்று தகவல் கொடுத்ததில், ஒரு போலீஸ் தனிப் படையோடு இன்ஸ்பெக்டர் வடிவேல் அந்த மலையடிவார சாமியார் குடிலுக்குள் தடாலடியாக நுழைந்தார்.

பக்தர்கள் கூட்டமோ, அமர்க்களமான பூஜை அறையோ, பாதாள ரகசிய அறையோ என போலி சாமியார் மடத்துக்குண்டான லட்சணங்கள் எதுவும் தென்படாமல், ஒரு எண்பது வயது கிழம், தாடியும் மீசையுமாக சாதுவாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் போலீஸ் படைக்கு ஏமாற்றம்.

''ஏய் நீ போலி சாமியார்தானே?'' என்ற போலீஸ் மிரட்டலுக்குக் கிழ சாமியார்,

''ஆமாம்'' என்றதும், போலீஸ் திகைத்து நின்றது. சாமியார் தொடர்ந்தார்... ''அந்த பாழாய்ப் போனதுக்கு ஆசைப்பட்டு கேட்டதுக்குத்தான் என் மருமகள், 'இத்தனை வயசாச்சு, இன்னும் ஆசை விடலையே'ன்னு படு கேவலமாப் பேசிட்டா. அன்னிலேர்ந்து காவி கட்டிட்டு சாமியாரா ஆசையை அடக்கிட்டு வாழ்ந்திட்டு இருக்கேன். மருமகள்கிட்டே 'போளி' செஞ்சு குடுன்னு ஆசைபட்டுக் கேட்டு, அவமானப்பட்டுப் போய் சாமியாரான என்னை 'போளி சாமியார் போளி சாமியார்'னே எல்லோரும் கூப்பிட ஆரம்பிச்சுட்டாங்க'' என்று சொல்லி முடிக்க, போலீஸ் கூட்டம் மயங்கி விழாத குறை.

- அகிலா கார்த்திகேயன்

அவளா சொன்னாள்?

சென்ற மாதம் திருமணமாகி திருநெல்வேலி சென்றிருந்த கடைசித் தங்கை சித்ராவிடமிருந்து செல்போனில் அழைப்பு வர, ஆவலுடன் எடுத்தேன். ''அக்கா! என் கணவர் பி.எட். படிக்கச் சொல்றாரு. அம்மா வீட்டில் இருக்கும் என் சர்ட்டிஃபிகேட்டுகளை உடனே அனுப்பி வைங்க'' என்றதும், எனக்கு பிரஷர் எகிறியது.

''திருமணத்துக்கு முன் நானும் அம்மாவும் சொன்னபோது கேட்காத நீ, புதுக் கணவன் சொன்னதும் சரின்னுட்டியாக்கும்'' என்று நான் எகிற, ''பி.எட்.டுக்கு ஃபீஸ், புக்ஸ்னு செலவாகும். நிறைய லீவு எடுக்கணும். சம்பளமும் கட் ஆகியிருக்கும். என் சம்பளத்தை எதிர்பார்த்திருந்த நம் குடும்பப் பொருளாதார நிலை உங்களுக்குத் தெரியாதா?'' என்று சித்ரா குரல் கரகரக்க, என் கண்களிலும் காவிரி!

– ச.மங்கையர்க்கரசி



சினிமா ஸ்பெஷல்



EIGHT BELOW

மனிதனும் மிருகமும்

அண்டார்டிகாவின் எட்டு அதிசய நாய்கள்

அண்டார்டிகாவில் பனிச் சறுக்கு வண்டிகள் இழுக்கக்கூடிய எட்டு நாய்களுக்கும் அவற்றின் உரிமையாளரான பால் வால்கருக்கும் இடையே நடக்கும் நேசப் போராட்டம் தான் கதை. அண்டார்டிகா கண்டத்தை ஆராய வரும் விஞ்ஞானிகளுக்கு பனிச்சறுக்கு வண்டிகள்தான் போக்கு வரத்துக்கு. இதுபோல் வரும் ஓர் ஆராய்ச்சியாளருடன் வால்கரும் எட்டு நாய்களும் மிகுந்த பிரயத்தனத்துக்கிடையில் வெகுதூரம் சென்று திரும்பியவுடன், பனிப்புயல் வந்துவிடுகிறது. கண்டத்தை விட்டு எல்லோரும் கிளம்புகின்றனர். ஹெலிகாப்டரில் இடமில்லாததால் - மனசில்லாமல், பிறகு வந்து கூட்டிச் செல்லலாம் என்ற எண்ணத்துடன் வால்கர் ஊர் திரும்புகிறார். திரும்பவும் அவரால் அங்கே போக முடியாதபடி சூழல்கள் உருவாகிவிடுகின்றன. நாய்களைக் காப்பாற்ற அவர் எடுக்கும் முயற்சிகளும் தவிடுபொடியாகிவிடுகின்றன. ஆறு மாதங்கள் ஓடிவிட, அண்டார்டிகாவில் ஆறு நாய்கள் மட்டும் உயிர் பிழைத்திருக்கின்றன. வால்கர் அவற்றை மீட்டாரா என்பதை பதைபதைப்புடனும் நெகிழ்வுடனும் சொல்லியிருக்கிறார்கள்.

வால்கரின் நடிப்பும் நாய்களின் பங்களிப்பும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. வால்கர் அதிகாரிகளிடம் நாய்களுக்காக வாதாடியும் அவர்கள் அலட்சியப்படுத்தும்போது, சோகம் அப்பிக் கொள்கிறது. ஒளிப்பதிவும் பின்னணி இசையும் அபாரம். 1957-ல் அண்டார்டிகாவுக்குச் சென்ற ஒரு ஜப்பானியக் குழுவில் நடந்த உண்மைச் சம்பவத்தைத்தான் படமாக எடுத்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சிக் குழுவைச் சார்ந்த 15 நாய்களை எப்படியாவது காப்பாற்றிவிடலாம் என்று புறப்பட்டவர்களால், எரிபொருள் பற்றாக்குறையால் அங்கிருந்து திரும்ப முடியவில்லை. ஒரு வருடம் கழித்துச் சென்று பார்த்தபோது இரண்டு நாய்கள் மட்டும் அங்கே எப்படியோ பிழைத்திருந்தன. பல வருடங்களுக்குப் பிறகு இயற்கையாக இறந்த அந்த நாய்களின் உடல்கள் ஜப்பானில் இன்றைக்கும் பதப்படுத்தி வைக்கப் பட்டுள்ளன.

'மனிதனும் மிருகமும்' என்கிற பெயரில் தமிழிலும் ரிலீஸாகியுள்ள இந்தப் படத்தை குழந்தைகள் மிக விரும்பிப் பார்க்கக்கூடும். முகம் சுளிக்க வைக்கும் காட்சிகள், ஆபாச வசனங்கள் என்று எதுவுமில்லாமலிருப்பது படத்தின் பெரிய ஆறுதல்.

– அனாமிகா

70 முதல் 7 வரை....

பம்பாய் கண்ணனுக்கு சதாபிஷேகம். இரண்டு மாதங்கள் முன்னதாகவே அழைப்பிதழ் வந்துவிட்டது. ஆனாலும், அந்தத் தேதியில் (டிசம்பர் 5, 2007) அமரர் கல்கி நினைவு நாள் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றதால், என்னால் பம்பாய் செல்ல முடியவில்லை.

கண்ணனை வளர்த்து ஆளாக்கியவர் சதாசிவம்தான். அவரிடம் வேலை தேடி எத்தனையோ பேர் வருவார்கள். அவரும் அலுத்துக்கொள்ளாமல் பலருக்கும் சிபாரிசு செய்து, தம்மை நாடி வந்தவர்களை ஏதாவது ஒரு வேலையில் அமர்த்திவிடுவார்.

நண்பரான ஒரு தொழிலதிபர் ஒரு சமயம் சதாசிவத்துக்கு ஃபோன் செய்தார். ''நீங்கள் அனுப்பிவைத்த பையன் எஸ்.எஸ்.எல்.ஸி.கூட (பள்ளி இறுதி வகுப்பு) தேறவில்லையே, நான் எப்படி வேலை போட்டுத் தர முடியும்?''

''சிவ, சிவா!'' என்றார் சதாசிவம். ''அவனிடம் காசு பணம் இருந்து, ரொம்ப புத்திசாலியாகவும் விளங்கி, நிறையப் படித்து பெரிய டிகிரியெல்லாம் வாங்க முடியுமென்றால், என்னிடம் எதற்கு சிபாரிசு கேட்டு வருகிறான்? நான்தான் எதற்கு உங்களிடம் அனுப்பப் போகிறேன்? அவனுக்குப் படிப்பும் இல்லை, படிக்க வசதியுமில்லை என்பதால்தானே உதவச் சொல்கிறேன்!''

அந்த நண்பர் சிரித்துவிட்டு, ''டிபிகல் அஃப் சதாசிவம்'' என்றார். சதாசிவம் அனுப்பிவைத்த பையனுக்கு, அவனுக்கு ஏற்ற விதத்தில் ஒரு வேலையும் போட்டுக் கொடுத்துவிட்டார்.


இம்மாதிரி சதாசிவம் எண்ணிலடங்காத பேருக்கு எத்தனையோ விதங்களில் உதவியிருக்கிறார். வேலை கிடைக்க சிபாரிசு செய்யாமல் தம்மிடமே வேலைக்கு வைத்துக்கொண்ட பலருள் கண்ணன் ஒருவர். சுதந்திரப் போராட்டக் காலத்தில், பாரதியார் பாடல்களை வீதி வீதியாக உணர்ச்சியோடு பாடிச் சென்ற சதாசிவத்துக்கு, கண்ணன் வேலை தேடி வந்தபோது, 'கண்ணன்-என் சேவகன்' பாட்டு நினைவுக்கு வந்திருந்தால் அதிசயமில்லை. அதற்கேற்ப கண்ணனும் நடந்து கொண்டான். குளியலறை வழுக்கிவிடாதிருக்க துடைத்து வைத்துக்கொள்வதிலிருந்து, இஸ்திரி போடுவது, கார் ஓட்டுவது, சைக்கிளில் கடை கண்ணிக்குப் போய் வருவது, காய்கறி நறுக்கிக் கொடுப்பது என்று எந்த வேலை தரப்பட்டாலும், முகம் சுளிக்காமல் செய்வான்.

11 கண்ணன்

கல்கி - சதாசிவம் இருவருக்குமே, உடலை வருத்தி உழைக்கத் தயாராயிருப்பவர்களை ரொம்பப் பிடிக்கும். கண்ணன் ஒரு படி மேலே சென்று சதாசிவத்தைக் கவர்ந்ததற்குக் காரணம், வீட்டு உபயோகத்துக்கான கருவி எதுவானாலும் பழுதுபட்டால், எலக்டிரீஷியன், பிளம்பர், மெகானிக் என்று கூப்பிடாமல் தானே ஆராய்ந்து பார்த்து, உள்ளுணர்வால் குற்றம் நாடி, அதைச் சரி செய்தும் விடுவான்.

ஹிந்தி மீரா ஷூட்டிங் - ரிகார்டிங் பம்பாயில் நடந்தபோது, கண்ணனை உதவிக்கு உடன் அழைத்துப் போனார் சதாசிவம். எல்லாம் நல்லபடியாக முடிந்து, எடிட்டிங் நடக்கும் சமயம், ''நாங்கள் சென்னை திரும்புகிறோம்; நீ இங்கேயே இருந்து பிரிண்ட் எடுத்துக்கொண்டு வந்து சேர்'' என்று உத்தரவு போட்டார். கண்ணனின் பம்பாய் வாழ்க்கை அந்தக் கணத்தில்

* அயல்நாட்டுப் பயணங்களின்போது டீம் மேனேஜர்! - இடது ஓரத்தில் லக்ஷ்மி, அவர் அருகே கழுத்தில் மாலையுடன் கண்ணன்!



என் சேவகன்!

தொடங்கிவிட்டது.

ஃபோனிலேயே சதாசிவத்தின் உத்தரவுகள் பிறக்கும். 'மீரா திரைப்படம் ரிலீஸ் தொடர்பாக இன்னாரைப் பார்; கல்கிக்கு விளம்பரம் இன்னாரிடம் கேட்டிருக்கிறேன், வாங்கி அனுப்பு' என்றெல்லாம் ஆணையிடுவார். மீரா திரைப்படம் ரிலீஸான பிறகும் பம்பாயில் சதாசிவத்தின் பிரதிநிதியாக கண்ணன் செயல்படத் தொடங்கினார். பம்பாயில் நிகழவிருக்கும் எம்.எஸ். அவர்களின் கச்சேரிகள் தொடர்பான காரியங்களைக் கவனிப்பார். கச்சேரிக் குழுவுடன் எம்.எஸ். - சதாசிவம் தம்பதி அயல்நாடுகளுக்குச் சென்றால், கண்ணன் தான் டீம் மானேஜர்! கல்கி பிரதிநிதியாக விளம்பர ஏஜென்ஸிகளுக்கு விஜயம் செய்வது தவிர, சதாசிவம் - எம்.எஸ். தம்பதியின் பிரதிநிதியாக, ஜெஜோடியா என்ன, பால்கிவாலா என்ன, பிர்லா என்ன... எல்லோருடைய வீட்டுக் கதவுகளும் கண்ணனுக்கு உடனடியாகத் திறக்கும்.

இப்படி ஒரு சகஜபாவத்தை அனைவரிடமும் அவர் வளர்த்துக்கொண்டதற்குப் பெரிதும் உதவியது அவருடைய அணுகுமுறை. 'கல்கிக்கு விளம்பரம் கொடுங்கள்' என்றோ, 'இந்த நல்ல காரியத்துக்கு உதவுங்கள்' என்றோ பேச்சை ஆரம்பிக்கமாட்டார். 'நான் என்ன செய்யணும்? உங்களுக்கு ஏதாவது விதத்தில் நான் உதவ முடியுமா?' என்பது போல்தான் பேச்சை ஆரம்பிப்பார். சின்னச் சின்ன உதவிகளைக்கூட மகிழ்ச்சியுடன் செய்து தருவார். இந்த அணுகுமுறை அவருக்குப் பல வெற்றிகளைத் தேடித் தந்தது.

கல்கி ராஜேந்திரன்



* பாம்பே பிரமுகர்கள் நாராயண மேனன், பால்கிவாலாவுடன் எம்.எஸ்.-சதாசிவம் தம்பதி. இடது ஓரத்தில் கண்ணன்

கண்ணனுக்கு வாய்த்த மனைவி லக்ஷ்மியும் எம்.எஸ். - சதாசிவம் தம்பதியிடம் தேவதா விசுவாசம் கொண்டவராக விளங்கியதில் வியப்பில்லை. எம்.எஸ். ஸின் இசையில் லயித்த யார்தான் வேறு விதமாக இருக்க முடியும்? கச்சேரிக்காக பம்பாய் செல்லும்போதெல்லாம் சதாசிவம் - எம்.எஸ். தம்பதி மட்டுமின்றி பக்கவாத்தியக் கலைஞர்கள்கூட கண்ணன் வீட்டில் (ஃபிளாட்) தான் தங்குவார்கள். கண்ணனும் லக்ஷ்மியும் தங்கள் வசதிகளைக் குறைத்துக்கொண்டு, விருந்தினரின் சௌகரியத்தையே முக்கியமாகக் கருதி அறைகளை ஒழித்துக் கொடுத்துவிடுவார்கள். கச்சேரி ஆரம்பிப்பதற்கு சில நிமிஷங்கள் முன் பல பிரமுகர்கள் வந்து சதாசிவத்தைச் சந்திப்பார்கள். கொஞ்சமும் தயங்காமல், யோசிக்காமல் எல்லோரையும் சாப்பிட அழைத்துவிடுவார் சதாசிவம்: ''கச்சேரி முடிந்து கண்ணன் வீட்டுக்கு வந்து, ஒரு பிடி சாப்பிட்டுவிட்டுப் போகலாமே!'' இதைக் கவனித்துவிட்ட லக்ஷ்மி, கச்சேரி கேட்கும் ஆவலைக் கட்டுப்படுத்திக்கொண்டு பாதிக் கச்சேரியில் வீடு திரும்பிவிடுவார். எல்லோரும் வந்து சேர்வதற்கு முன் அறுசுவை உணவு தயாராயிருக்கும்.

'பம்பாய் கண்ணன்' என்று அந்நகருக்கு வெளியேயும், 'கல்கி கண்ணன்' என்று பம்பாய் நகரிலும் மிகப் பிரபலமாகிவிட்ட கண்ணன், மீராவாக நடித்த எம்.எஸ். அவர்களின் உயிர்காத்த கண்ணனாகவும் செயல்பட்டிருக்கிறார்! மீரா திரைப்படத்தில் பாலைவனம் கடந்து செல்லும் மீரா, தாகத்தில் தவித்து, தரையில் சரிந்துவிடுவாள். அப்போது மாயக் கண்ணன், ஆயர்குல வாலிபனாக உருமாறி வந்து தன் திருக்கரங்களால் தண்ணீர் அள்ளி ஏந்தி, மீராவின் வாயில் ஊற்றுவான். திரைப்படத்தில் தோன்றும் அந்த ஆயர்குல யுவன் (பம்பாய்) கண்ணனேதான்!

ராஜாஜி சுதந்திரா கட்சி தொடங்கிய பிறகு, மசானி, மோடி, முன்ஷி போன்ற பிரமுகர்களை ராஜாஜி சார்பில் போய்ப் பார்த்துப் பேசிவிட்டு, சென்னைக்குத் தகவல் கொடுப்பார் கண்ணன். ஒரு சமயம் ராஜாஜி பிரசாரத்துக்காக நாக்பூர் சென்று, அங்கிருந்து பம்பாய்க்கு ரயிலில் வந்து, சுதந்திரா கட்சிப் பிரமுகர்கள் சிலரைச் சந்தித்துவிட்டு, சென்னைக்கு விமானம் ஏறுவதாகப் பயணத் திட்டம் அமைந்திருந்தது. ''ராஜாஜியை ஜாக்கிரதையா கவனிச்சுக்கோ'' என்று சதாசிவம் உத்தரவு போட்டுவிட, கண்ணன் நாக்பூரிலேயே ராஜாஜியைச் சந்தித்து, அவருடனேயே ரயிலில் பம்பாய் நோக்கிப் பயணப்பட்டார். ரயில் தாமதமாக ஓடிக்கொண்டிருந்தது. பம்பாயில் ராஜாஜி ஏற வேண்டிய விமானத்தைப் பிடிக்க முடியுமா என்பது சந்தேகமாகிவிட்டது. கண்ணன், இடையில் ஒரு ஸ்டேஷனில் இறங்கி, ரயிலின் கார்டு, இஞ்சின் டிரைவர் ஆகியோரைப் பார்த்துப் பேசிவிட்டு வந்தார். சாந்தா குரூஸ் ஸ்டேஷனை (சென்னையில் மீனம்பாக்கம்போல பம்பாயில் விமானத் தளம் அமைந்துள்ள பகுதி) நெருங்கியதும், ரயில் ஒரு லெவல் கிராஸிங் பக்கத்தில் இரண்டு நிமிஷம் நின்றது. லெவல் கிராஸிங்குக்கு அப்பால் சாலையில் கார் ஒன்று தயாராக ராஜாஜிக்காகக் காத்திருந்தது.

''இந்த மாதிரி ரயிலை நம் இஷ்டத்

துக்கு நிறுத்தறது ரொம்பத் தப்பு. நீங்க வழியில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் இறங்கி யாரிடமோ பேசி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கீங்க. பெரிய குற்றம்'' என்று கோபமாகப் பேசினார் ராஜாஜி.

''உண்மைதான்'' என்று கண்ணன் ஒப்புக்கொண்டார். ''ஆனால், இந்த ரயில் ஏற்கெனவே சில மணி நேரம் தாமதமாக ஓடிக்கொண்டிருக்கிறது. கூடுதல் இரண்டு நிமிஷத்தால் யாருக்கும் பெரிய பாதிப்பு ஏதுமில்லை. அதே சமயம், 'ராஜாஜி இன்னும் வரக் காணோமே' என்ற கவலையுடன் இந்தியன் ஏர்லைன்ஸ் அதிகாரிகள் சற்று நேரம் விமானத்தை நிறுத்தி வைத்தாலும் மற்ற விமானப் பயணிகள் எல்லோருக்கும் புதிதாக ஒரு கஷ்டம் உருவாகும். எது தேவலாம்?''

முன்னாள் கவர்னர் ஜெனரலுக்காக விமானம் புறப்படுவதைத் தாமதப்படுத்துவது என்பது நடக்கக்கூடும் என்பதை உணர்ந்த ராஜாஜி, ஒத்துழைத்தார். பிளாட்ஃபாரம் இல்லாத அந்த இடத்தில் கண்ணன் உதவியுடன் மெல்ல இறங்கி, லெவல்கிராஸிங்கைத் தாண்டி, காத்திருந்த காரில் ஏறிக்கொண்டார். கண்ணனும் உடன் வர, கார் விமான நிலையத்தை அடைந்தது. சுதந்திரா கட்சி பிரமுகர்களைச் சந்தித்து உரையாட ராஜாஜிக்குப் பத்து நிமிஷம் அவகாசமும் இருந்தது. விக்டோரியா டெர்மினஸ்ஸில் போய் இறங்கியிருந்தால் எதுவுமே சாத்தியப்பட்டிராது.

இதுபோன்று சாமர்த்தியமாக நடந்து கொள்ளும் கண்ணனிடம் நாளுக்குநாள் சதாசிவம் தம்பதிக்கு அன்பு அதிகரித்து வந்ததில் வியப்பில்லை. சதாசிவத்தின் சதாபிஷேகத்தை சென்னையில் நடத்த நாங்கள் எல்லோரும் தீர்மானித்தபோது, ''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்'' என்று கூறிவிட்டு, சதாசிவம் - எம்.எஸ். தம்பதி பாபாவைக் காண புட்டபர்த்தி சென்றுவிட்டனர். அடுத்த வருஷம், அதே மாதம், அதே நட்சத்திரத்தில் அவர்கள் பம்பாயில் இருக்க நேர்ந்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கண்ணன் சதாசிவத்தின் சதாபிஷேகத்தை சாஸ்திரோத்தமாகவும் மிகச் சிறப்பாகவும் நடத்தி வைத்து மகிழ்ந்தார். சென்னையில் நடத்த முடியாமல் போனது பம்பாயில் நடந்தது எனில், அது கண்ணனுடைய உழைப்புக்கும் விசுவாசத்துக்கும் கிடைத்த வெகுமதி மட்டுமல்ல; அவருடைய அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றி!

எடுபிடி ஆளாகத் தம்மிடம் வந்து சேர்ந்த கண்ணனை அந்த நிலையிலேயே நிரந்தரமாக வைத்துவிடாமல் வளர்த்து விட்டவர் சதாசிவம். 'கல்கி கண்ணன் - நம்முடைய கண்ணன்' என்று பம்பாய்த் தமிழர் நினைக்குமளவுக்கு



* 'கண்ணன் வீட்டில் அறுசுவை விருந்து காத்திருக்கும்...' - எம்.எஸ். அருகே அவரது குடும்ப நண்பர் நாராயணி அம்மாள்

எல்லோரது அன்பையும் பெற்று உயர்ந்தார் கண்ணன். இதில் சதாசிவம் கொடுத்த ஆதரவு முக்கியமா அல்லது அந்த ஆதரவைப் பயன்படுத்திக்கொண்டு மேன்மையுற்ற கண்ணனின் ஆற்றல் முக்கியமா என்றால், தொன்னைக்கு நெய் ஆதாரமா அல்லது நெய்க்குத் தொன்னை ஆதாரமா என்ற கதைதான்!

(பேசுவோம்)

-வெ.தமிழழகன்



பூத்துக் குலுங்கிய மனம்!

''அதெல்லாம் முடியாது. பூ சீசன் முடியற வரைக்கும் நீ இருந்துதான் ஆகணும்'' தீர்மானமாய்ச் சொல்லிவிட்டாள் ராசாத்தி. குரலில் கண்டிப்பு.

பெரியசாமியால் ஒன்றும் பேச முடியவில்லை. உள்ளுக்குள் குமைந்தான். சிறு வயதில் வந்து ராசாத்தியின் தோட்டத்தில் வேலைக்குச் சேர்ந்தவன்! இளமை முறுக்குத் திரும்பிய ஆண் மகனாக வளர்ந்துவிட்டான். ராசாத்தியின் மகன், மகள் எல்லாம் வெளிநாட்டில் படிக்கிறார்கள்.

கிட்டத்தட்ட ஏழு ஏக்கர் நிலத்திலும் ரோஜாச் செடி வைத்து, வியர்வை சிந்தி... இதோ மலர்த் தோப்பாய்க் காட்சி தருகிறது.

மாத ஊதியம் என்றுகூட இல்லாமல் வருஷத்துக்குப் பத்தாயிரம் என ஒப்பந்தம் பேசி, உழைப்பையெல்லாம் இவர்களுக்காகவே செலவழிக்கிறோமே என எண்ணி வருந்தினான். டவுனில் அவனது மாமா பெரிய அளவில் திறந்திருக்கும் ஸ்டேஷனரி கடையைப் பார்த்துக்கொள்ளவும், பராமரிக்கவும் நல்ல ஆள் தேவைப்பட்டதால், ''நீ உடனே வந்திரு'' என்றார் மாமா.

அதைத்தான் ராசாத்தியிடம் சொல்லி, ''நான் இந்த வேலையைவிட்டு நின்றுவிடுகிறேன். உடனே என் மாமாவின் கடைக்குப் போகணும்'' என்றான் பெரியசாமி.

ஆனால் ராசாத்தி அனுமதிக்கவில்லை. ''ரோசாப்பூ சீசன் முடியட்டும். பிறகு போகலாம். அதுவரை பொறு'' என்றாள்.

அன்று முதல் ஆர்வமின்றியும் சுரத்தின்றியும் ரோஜாத் தோட்டத்தில் வேலை செய்தான். சீசனும் முடிந்தது. இனியாவது நல்ல வேலையில் சேர வேண்டும் என்ற யோசனையுடன் வந்தவனிடம் - ஒரு பையைக் கொடுத்தாள் ராசாத்தி. அதை வாங்கிப் பார்த்தான். கட்டுக் கட்டாய் பணம்!

''அம்மா! என்ன இதெல்லாம்? இவ்வளவு பணம் எதுக்கு?''

''இதெல்லாம் உன் பணமப்பா. உனக்குத்தான்''

''நீங்க... என்ன சொல்றீங்க?''

''நம்ம தோட்டத்து ரோசாப்பூ ஒவ்வொண்ணும் உன் வேர்வைல பூத்ததுப்பா! உன் உழைப்பில் மலர்ந்தது. இத்தனை வருஷ காலமா உன்னை நான் புள்ளையாவும், நிலத்தை நீ புள்ளையாவும் பார்த்துக்கிட்டோம். வேற வேலைக்குப் போற புள்ளைய சும்மா அனுப்பலாமா?''

''....................''


''அதுக்காகத்தான் இது. இந்த சீசன்ல பூ போட்ட பணம் எல்லாத்தையும் சேர்த்து வெச்சிருக்கேன். மகராசனா போயிட்டு வாப்பா!'' என்றாள் ராசாத்தி.

பெரியசாமிக்கு உடம்பு சிலிர்த்தது. மனம் நெகிழ்ந்தது. கண்கள் தளும்பியது. உணர்ச்சிவசப்பட்டவனாய்ச் சொன்னான்.

''அம்மா... செடிய வளர்த்த எனக்கே இந்தப் பரிசுன்னா... சின்ன வயசுலேருந்து என்னை வளர்த்த உங்களுக்கு என்னம்மா பரிசு தரப்போறேன்? நான் எங்கேயும் போகலம்மா... உங்களோடவே கடைசி வரைக்கும் இருக்க அனுமதிப்பீங்களா?''

பணப் பையைத் திருப்பித் தந்தான் பெரியசாமி. தழுதழுத்தவனை பிள்ளையின் வாஞ்சையோடு தேற்றினாள் ராசாத்தி.

ஸ்ரீ வி. நாராயணஸ்வாமி - ஸ்ரீமதி பத்மாக்ஷி



"நாணு" என்று அன்புடன் அழைக்கப்படும் நாராயணஸ்வாமி "கல்கி" கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சகோதரி மகன். கல்கி காரியாலயத்தில் உதவியாளராகத் தமது பணிக் காலத்தைத் தொடங்கியவர், பத்தாண்டு அனுபவத்துக்குப் பிறகு, மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறையில் சேர்ந்து அரும்பணியாற்றினார். பின்னர் குடியரசுத் தலைவர் திரு.ஆர்.வேங்கடராமன் அவர்களின் உதவியாளராகச் சிறப்புப் பணியாற்றி ஓய்வு பெற்றார். திரு நாராயணஸ்வாமியின் சதாபிஷேக வைபவம் 23.12.07ல் மிகச் சிறப்பாக கோயமுத்தூரில் நடைபெற்றது. ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் வந்திருந்து நாராயணஸ்வாமி - பத்மாக்ஷி தம்பதியரை வாழ்த்தினர்

அருள்வாக்கு



தெரியாத ஞானம்!

நடைமுறையில் செய்து காட்டி நல்லதை விளைவிக்கும் ஒழுங்கு முறைதான் தர்மம் என்பது. இந்த நடைமுறைக்கு ஆதார தத்துவமாக ஓர் அடிப்படை இருக்க வேண்டும். ஓர் ஒழுங்கு என்றால், அது அப்படிப்பட்ட ஒழுங்கிலே இருக்கிறது என்பதை உணர்த்துவதாக ஓர் அடிப்படை உண்மை இருக்க வேண்டும். தீபாலங்காரம் செய்யும்போது வட்டமாக, சதுரமாக, கோணமாகப் பல வரிசைகளில் தீபங்களை வைத்தால், அந்த ஒழுங்கிலே மனசுக்கு ஒரு நிறைவு தெரிகிறது. ஏதோ ஒரு ஒழுங்கிலே வளைத்தும் நீட்டியும் கோலம் போட்டிருந்தால், அதைப் பார்க்கிற போது ஒரு சந்தோஷம், எதுவோ ஒன்று ரொம்ப சரியாயிருக்கிறது என்ற ரசிப்பு உண்டாகிறது. வட்டமோ, சதுரமோ, வளைவோ, கோணமோ கொஞ்சம் கோணலாக இருந்தால், மனசுக்கு என்னமோபோல் இருக்கிறது. எதனாலென்றால், இந்த வெளி ஒழுங்குகளுக்கு ஆதாரமாக ஏதோ ஓர் உள்ளொழுங்கான தத்துவம் இருக்கிறது. கண்ணுக்கு வெளி ஒழுங்கு தெரிகிற மாதிரி, நம் உள்ளுக்குள்ளே, உள்ளத்துக்குள்ளே அந்தத் தத்துவத்தைப்பற்றி நமக்குத் தெரியாமலே ஒரு ஞானம் இருக்கிறது. எனவே அதற்கு இது - வெளியிலே ஒழுங்கு செய்திருப்பது - ஒத்துப் போகிறபோது மனசில் நிறைவு உண்டாகிறது.

இதே மாதிரி, சுத்தமான அந்தஃகரணமுள்ள ரிஷிகள் முதலான மகான்களுக்கு உள்ளுக்குள்ளே ஸ்வச்சமாகத் தெரிந்த ஓர் அடிப்படைக்கு ஒத்துப்போவதாக வெளியிலே பின்பற்ற வேண்டிய அநேக ஒழுங்குகளைத்தான் ஒழுக்கம் என்று வைத்து, தர்ம வாழ்க்கையை அமைத்திருக்கிறது. இதற்கு அடிப்படையாய் உள்ளே ஒரு தத்துவம் இருக்கிறது என்றேனே, அது என்னவென்றால், அதுதான் சத்தியம் என்பது. நம்முடைய வெளி அறிவுக்கும் புரிகிற மாதிரி இந்தச் சத்தியத்தை எடுத்துச் சொல்பவையே வேத, உபநிஷத, சாஸ்த்ரங்கள்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

தமிழ், தமிழ் சினிமா என்று என்ன பேசினாலும் அதன் அவலங்களைக் கண்டு கொந்தளிக்கிறார் இயக்குநர் சீமான். அவர் இயக்கி மாதவன், பாவனா நடித்துள்ள 'வாழ்த்துகள்' வெளியாகவிருக்கும் இச்சமயத்தில் பல பிரச்னைகள் குறித்து நம்மிடம் பேசினார்.



'வாழ்த்துகள்' படத்தின் வசனங்கள் முழுக்க முழுக்க ஆங்கிலம் கலக்காமல் எழுதியது பற்றி?


''படப்பிடிப்பின்போது நாங்கள் முழுக்க முழுக்கத் தமிழில் பேசுவது கதாநாயகி பாவனாவுக்கு முதலில் வேடிக்கையாகவும் கடினமாகவும் இருந்தது. 'போய் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். அறையில் உடை மாற்றிக் கொள்ளுங்கள். ஒப்பனை செய்யுங்கள். வெளிச்சத்துக்கு வாங்க' என்று சொல்லும்போது தடுமாற்றம் அடைந்தார். ஆனால் பிறகு, 'பதியலாமா', 'பார்க்கலாமா' என்று கேட்கும்போது, 'பதியலாம்' என்று சொல்லும் அளவுக்கு பாவனாவுக்கும் தமிழ் பழகிவிட்டது.

படத்தில் ஒரேயொரு ஆங்கில வார்த்தை உண்டு. ஆங்கிலத்துக்கு நான் எதிரி

எந்த ஹீரோவுக்குத்

கிடையாது என்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட வார்த்தை அது. எல்லோரும் ஆங்கிலம் கலந்து பேசுகிறார்கள் என்பதற்காக ஒரு தவறு சரியாகிவிடாது. சுத்தத் தமிழெல்லாம் நடைமுறைக்கு ஒவ்வாது என்று சொல்பவர்கள் ஓர் இனம். என்னைப் போல தமிழுக்காகப் போராடுபவர்கள் இன்னொரு இனம். இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான் முன்பு தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகள் உருவாயின என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மொழி குறித்த சிந்தனை, கவலை இங்கே யாருக்கும் கிடையாது. எல்லோருக்கும் ஜாதி தேவைப்படுகிறது. ஆனால், மொழி தேவையில்லை. 'நான் இந்த ஜாதிக்காரன்' என்று சொல்லிக் கொள்கிறவர், தான் ஒரு தமிழன் என்பதில் எந்தப் பெருமையும் அடைவதில்லை.

நைட் மீட் பண்றதை 'இரவு சந்திக்கலாமே'... மார்னிங் கால் பண்ணுவதை 'காலையில் அழைக்கலாம்' இல்லையா? இதனால் தமிழை



தைரியம் இருக்கு...?

-சீறும் சீமான்!

அழிவிலிருந்து மீட்கலாமே! அப்படிச் செய்தால், அது ஒரு பெரிய புரட்சியாகும். இன அழிவிலிருந்து ஓர் இனத்தை மீட்பதை விடப் பெரிய புரட்சி எதுவும் கிடையாது.''

சினிமாவில் இருந்துகொண்டு சினிமாவை எதிர்ப்பதை யாரும் விரும்புவதில்லையே?

''நான் சொல்வது குறை அல்ல. பிழை திருத்தம். திரையுலகம் ஒன்றும் சொர்க்க பூமி அல்ல. இங்கே சினிமாக்காரர்களை கூத்தாடிகளாகத்தான் மக்கள் பார்க்கிறார்கள். எல்லா நல்லது கெட்டதுக்கும் நடிகர்களை அழைப்பார்கள். கடை திறக்க, புத்தகம் வெளியிட, நடிகர், நடிகைகளின் வருகை என்றால் மிகப்பெரிய கௌரவம். ஆனால், வாழ்வதற்கு வீடு கேட்டால் யாரும் தர மாட்டார்கள். மக்கள் நடிகர்களை விளம்பரப் பொருளாகவே பார்க்கிறார்கள்.

எங்களுக்கு முன்னால் சமுதாய மாற்றத்துக்கு பெரியார் வித்திட்டார். திரையில் என்.எஸ்.கிருஷ்ணனும் எம்.ஆர்.ராதாவும் புரட்சி செய்தார்கள். இப்போது நாங்கள். இதனால் எனக்கு இழப்புதான். எல்லோரும் கிண்டல் செய்கிறார்கள். ஆனால், எனக்கு வருமானத்தைவிட இன மானம் பெரிது. என்னால் மக்களைத் திருத்த முடியாது என்று நினைப்பதில்லை. எல்லா மாற்றங்களும் தனி மனிதனின் மூளையில் இருந்து உருவானவைதான்.''

தமிழ் தலைப்புக்கு அரசு அளிக்கும் வரிவிலக்கை ஏற்றுக்கொள்கிறீர்களா?


''இது ஒருவிதமான கையூட்டு. அவலம். அன்று நாங்கள் தமிழில் பேர் வைக்கக் கெஞ்சினோம். யாரும் காது கொடுக்கவில்லை. சலுகை கொடுக்காமல் இருந்தால், யாராவது தமிழில் தலைப்பு வைப்பார்களா அல்லது இந்தச் சலுகையைப் பறித்துவிட்டால்தான் தொடர்ந்து தமிழில் தலைப்பு வைக்கப் போகிறார்களா? சினிமாக்காரர்களிடம் மொழிப் பற்று கிடையாது. பணப்பற்று மட்டும்தான்.''

'இன்று மசாலா படம் எடுத்து பணம் சேர்த்துவிட்டு, நாளை நல்ல சினிமா எடுப்போம்' என்று சொல்லும் இயக்குநர்கள் பற்றி?

''முதலில் நூறு பேரைக் கொன்றுவிடுகிறேன். பிறகு, ஒருவரை வாழவைக்கிறேன் என்று சொல்வதற்குச் சமம் இது. அமீர்கானுக்கு உள்ள தைரியம், இங்கு எந்த ஹீரோவுக்கும் கிடையாது. ஹிந்தியில் 'தாரே ஜமீன் பார்' என்றொரு படத்தை அமீர்கான் தயாரித்து, இயக்கி நடித்திருக்கிறார். ஈரானியப் படமான 'சில்ட்ரன் ஆஃப் ஹெவன்'க்கு நிகரான படம் அது. அப்படியொரு முயற்சியை வணிக ரீதியில் உயர்ந்த நிலையில் இருக்கும் தமிழ் நடிகர்களும் முயற்சிக்க வேண்டும். 'நான் இந்த நல்ல கதையைப் படித்தேன். நிச்சயம் இதைப் படமாக்க வேண்டும்' என்று எந்த நடிகரும் இங்கு சொல்வது கிடையாது. 'இந்த ஆங்கிலப் படம் பார்த்தேன். அதையே மாற்றிப் பண்ணிவிடலாம்' என்றுதான் சொல்கிறார் கள்.

- சநகன்

அட்டையில்: **'தாரே ஜமீன் பார்' படக் காட்சி...**



"சினிமா இல்லாமல் முடியாதா?"

சேனல்

அரசியல் கட்சிகளுக்கு ஆளுக்கொரு டி.வி. வரிசையில், காங்கிரஸ் ஆதரவு சேனலாக மெகா டி.வி. தொடங்கப்பட்டிருக்கிறது. தமிழக காங்கிரஸ் பிரமுகரான தங்கபாலுவின் மனைவி ஜெயந்திதான் இந்த சேனலின் நிர்வாகி.

'ஏற்கெனவே தமிழில் ஏகப்பட்ட சேனல்கள் இருக்கும்போது, இன்னொரு புதிய சேனல் ஆரம்பிக்கும் எண்ணம் எப்படி ஏற்பட்டது?' என்றால்,

''எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், ஏற்கெனவே பலர் இருந்தாலும் கூடப் புதியவர்கள் வந்துகொண்டுதான் இருப்பார்கள். இதற்கு டி.வி. சேனல் விதிவிலக்கு இல்லை. காலப்போக்கில் சிறப்பாகச் செயல்படக் கூடியவர்களால் மட்டுமே தொழிலில் தாக்குப்பிடிக்க முடியும். எங்களது திறமை மீது எங்களுக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. அகில இந்தியாவிலும், மாபெரும் கட்சியான காங்கிரஸுக்கென்று ஒரு டி.வி. சேனல்கூட இல்லை. இதுவும் மெகா டி.வி. ஆரம்பிக்க ஒரு காரணம்'' என்கிறார்.


'அரசியல் கட்சி ஆதரவு சேனல் என்றாலே உங்களுடைய நடுநிலைமை கேள்விக்குரியதாகிவிடுமே?' ''மெகா டி.வி.யில் செய்திகள் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்த்தால், நாங்கள் எந்த ஓர் அரசியல் கட்சியையும் ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ சேனலை நடத்தவில்லை என்பது புரியும். ஆரம்பித்த குறுகிய காலத்துக்குள்ளாகவே நாங்கள் எங்கள் நடுநிலைமையை நிரூபித்து இருக்கிறோம்''

'நீங்களும் சீரியலைத்தான் நம்ப வேண்டுமா?'

''எங்கள் சீரியல்களில் அரைத்த மாவையே அரைக்காமல், புதுமையாக அணுகி இருக்கிறோம். தொடர்களிலும் சரி, மற்ற நிகழ்ச்சிகளிலும் சரி நெகடிவான விஷயங்களோ, குரூரமான காட்சிகளோ கண்டிப்பாக இருக்காது. எங்களுடைய 'லோகோ'விலேயே பாரதம், பண்பாடு, பாரம் பரியம், தமிழ், தமிழர், தமிழகம், ஒற்றுமையை வளர்ப்போம்; தேசத்தைக் காப்போம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம். அதனை முழுமையாகக் கடைபிடிப்பதே எங்கள் கொள்கை.

மற்ற சேனல்களோடு போட்டி போடும் எண்ணமும் எங்களுக்கில்லை. அவர்கள் செய்வதுபோல் சினிமாவை ஒளிபரப்பித்தான் ஆக வேண்டும் என்பதில்லை. அதிக விலை கொடுத்து படங்களை வாங்கி 'இந்தியத் தொலைக்காட்சிகளில் முதன் முறையாக' என்றெல்லாம் முழங்குவதில் எங்களுக்கு உடன்பாடில்லை. சினிமா இல்லாவிட்டால் சேனல் நடத்த முடியாதா என்ன? அந்த நேரத்தில் வேறு நல்ல நிகழ்ச்சிகளைக்கூட ஒளிபரப்பலாமில்லையா? தனித்தன்மைதான் எங்களின் ஸ்பெஷல். அதை என்றும் கைவிட மாட்டோம்.'' என்கிறார் ஜெயந்தி தங்கபாலு.

✱ ஜெயந்தி



- கௌதம் ராம்







அடையாளம் தொலைத்த இரவு...

உமாஷக்தி

மெல்லிய ப்ரியங்களையும்
நெஞ்சார்ந்த நெருக்கங்களையும்
எந்தவொரு காரணமும் இன்றி
புறக்கணிக்கப் பழகிவிட்டோம்
செடியிலிருந்து ஓர் இலை
விழுவதைப் போல
எல்லாமே நமக்கு இயல்பாகிவிட்டது
நிராகரிப்பின் வேர்கள்
நம்மைத் தீண்டும் வரையிலும்
புரிந்துகொள்ளவே இயலாது
அன்பின் நீள அகலங்களை
தினம் தினம்
இழந்து கொண்டிருக்கும்
நேசங்களைப் பற்றிய
அக்கறை இல்லாமல்
வெற்றிகரமாய்
பதித்துக் கொண்டிருக்கிறோம்
வெற்றுத் தடங்களை

❖

கடக்கவியலாத
அந்த இரவின்
தனிமைச் சிறையிலிருந்து
என்னை
மீட்கவல்ல சக்தி
உனக்கிருந்தபோது
அருகில் வர மறுத்தாய்
அதற்குப் பின்
எத்தனையோ இரவுகளைக்
கடந்தபோதிலும்
உன் இருப்பின்
அடையாளங்களைத்
தொலைத்த அந்த
இரவின் கொடுமையை
மறக்க முடிவதில்லை

❖



சேவாலயா

முரளிதரன்



மனமெனும் மந்திர சக்தி!

தந்தையின் மறைவுக்குப் பின், வருமானம் இல்லாமல் போய், வறுமையின் பிடியில் விவேகானந்தரின் குடும்பம் சிக்கியிருந்த காலகட்டம். இருந்த சொத்து அத்தனையும், உறவினர்களிடம் வாங்கிய கடனை அடைக்கச் சரியாகப் போய்விட்டது. கையில் Bio-dataவுடன் வேலை தேடி, செருப்புகூட இல்லாமல் அலைந்து திரிந்ததில், விவேகானந்தரின் கால்களில் கொப்பளங்கள் தோன்றிவிட்டன. மனம் வெறுத்துப் போய், 'துயரம் இருக்கும் என்றால் கடவுள் எங்கே இருக்கிறார்?' என்று நாத்திகம் பேசவும் ஆரம்பித்துவிட்டார். ஆனால், இராமகிருஷ்ணர் மீது இருந்த பற்று மட்டும் குறையவில்லை. ஒருநாள் அவரிடம் போய், ''நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேனே... என் வறுமையைப் போக்க உங்கள் காளியிடம் சிபாரிசு செய்யக் கூடாதா?'' என்று கெஞ்சினார். இராமகிருஷ்ணரோ, ''இதை நீயே நேரடியாக காளியிடம் கேள். என் சிபாரிசு தேவையில்லை'' என்று கூறிவிட்டார். விவேகானந்தர் காளி கோயிலுக்குச் சென்று, தம் வறுமையைப் போக்க வேண்டும் என்று கேட்க நினைத்துத்தான் உள்ளே போனார். ஆனால், அவர் காளியிடம் கேட்டது 'ஞானமும் பக்தியும்'தான். வெளியே வந்ததும் இராமகிருஷ்ணர், ''என்னப்பா, காளியிடம் கேட்டாயா?'' என்றதற்கு, ''அடடா! மறந்தே போனேன். நான் வறுமையைப் பற்றி கேட்கவே இல்லை'' என்று மீண்டும் இரண்டு முறை உள்ளே சென்று காளியை வழிபட்டு, மீண்டும் மீண்டும் ஞானத்தையும், பக்தியையுமே

வையத் தலைமை கொள் - 11

கேட்டுவிட்டு வெளியே வந்துவிட்டார். உலகத்து நாயகியான காளியிடம் போய், என் ஒருவன் வறுமையைப் போக்கு என்று கேட்பது எவ்வளவு சின்னத்தனம்? மிகப் பெரிய விஷயங்களை வேண்டும் என்று தானே கேட்க வேண்டும்! சிறு குழந்தைகள் தான், இலட்ச ரூபாய் சம்பாதிக்கும் தந்தையிடம் ஐம்பது பைசா சாக்லேட் கேட்டு அழும்!

இதே காளியிடம் பாரதி கேட்டது என்ன? 'பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்றுதானே கேட்டார்! 'சின்னக் கவலைகள் தின்னத் தகாத' பாரதி வேடிக்கை மனிதர்கள் போல் வீழ்வதா? அவர் காளியைக் கேட்பதெல்லாம்

''நின்னைச் சில வரங்கள் கேட்பேன் - அவை
நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி
என்னைப் புதிய வுயிராக்கி எனக்
கேதுங் கவலையறச் செய்து - மதி
தன்னை மிகத் தெளிவு செய்து என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்!''

மேலும், 'இந்த நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக் கலி சாடும் திறம்' வேண்டும் என்றும் கேட்டார். ஒரு தனி மனிதன் வேண்டுவதால், நாடு முழுவதும் கீர்த்தி பெற்று, கலிகாலமே முடிந்துவிடுமா என்றால் யாரைக் கேட்கிறார்? 'அடி தாயே! உனக்கரியதுண்டோ?' என்று எதுவும் அரியதாக இல்லாத காளியைத்தானே கேட்கிறார்?

நம் கோயில்களில் எல்லாம் பிரசாதம் கொடுக்கும்போது, 'தனம், தான்யம், பசு புத்ர லாபம்' என்று சொல்லிக்கொண்டே கொடுப்பதைப் பார்க்கிறோம். பலரும் வேண்டுவது இப்படியான பொருள் விஷயத்தைத்தான்! இதற்கெல்லாம் மீறி பெரிய விஷயங்களை அல்லவா நாம் கேட்க வேண்டும்? பாரதியும், விவேகானந்தரும் தங்கள் காளி பிரார்த்தனைகளில் இதைத் தான் நமக்குக் காட்டுகிறார்கள்!

மனமென்னும் காளியின் மந்திர சக்தி புரியாமல் நாம் பல சின்னச் சின்ன விஷயங்களை மட்டுமே நம் மனத்திடம் கேட்டுக்கொண்டும், சொல்லிக்கொண்டும் இருக்கிறோம். நாம் கேட்டதைக் கொடுக்கும் வலிமை நம் மனத்திடமே உள்ளது என்பதை பலமுறை படித்தாலும், நம்பிக்கை முழுமையாக இல்லாததால் அது பலனற்றுப் போகிறது.

'சந்திரனில் கால் பதிப்போம்' என்று அமெரிக்க குடியரசுத் தலைவர் முதன்முதலில் அறிவித்தபோது, அதைக் கிண்டல் செய்து எழுதிய பத்திரிகைகள்தான் ஏராளம்! இது சாத்தியமே இல்லை என்று கருத்து பரவியது. அதை நடத்திக்காட்டிய பிறகு, அதே பத்திரிகைகள் பாராட்டு மழை பொழிந்தன. 'பெரிதினும் பெரிது கேள்' என்பது 'Thinking Big' என்னும் தலைமைப் பண்பைப் பற்றியது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால், நான் என் அலுவல் காரணமாக அமெரிக்கா

பெரிய காரியங்களைச் சாதிக்கும் பெரிய தலைவர்கள் யாரும் சின்னச் சின்னதாய் யோசிப்பது இல்லை.



வில் உள்ள பிட்ஸ்பர்க்குக்குச் சென்நிருந்தபோது, பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் பயிலும் இந்திய மாணவர்கள் சேவாலயாவைப் பற்றி நான் பேசுவதற்கென ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். முதலில் எனக்கு அவர்கள் பல்கலைக்கழகத்தைச் சுற்றிக் காண்பித்தார்கள். நடந்து சுற்றி வரச் சாத்தியம் இல்லாத அளவு பெரியது என்பதால், காரில் சுமார் அரை மணி நேரம் சுற்றினோம். ஒவ்வொரு வானளாவிய கட்டடத்தையும் காண்பித்து, இது இந்தத் துறை என்று சொல்லிக்கொண்டே போனார்கள். கடைசியாய், கூட்டம் நடைபெறும் ஹாலுக்கு வந்தோம். நான் பேசி முடித்ததும் வந்த முதல் கேள்வி, 'சேவாலயாவின் எதிர்காலத் திட்டம் என்ன?' நான், 'இன்று எனக்குச் சுற்றிக் காண்பித்தீர்களே, இதே போல ஒரு பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தை கசுவா கிராமத்தில் கட்டப் போகிறோம். நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டு மிக அதிகமான தொகை செலுத்தி இங்கே படிக்கிறீர்கள். ஆனால், நாங்கள் கட்டும் பல்கலைக்கழகம் ஏழை எளியவர்களுக்கு முழுவதும் இலவசமாக இருக்கும்' என்று கூறினேன். அன்றைய தேதியில், பள்ளிக் கட்டடம் அப்போதுதான் கட்ட ஆரம்பித்து இருந்தோம். அன்று இருந்த பொருளாதாரச் சூழ்நிலையில் அந்த ஒரு கட்டடத்தைக் கட்டி முடிக்க முடியுமா என்பதே சந்தேகம்தான்! ஆனால், இன்று அந்தப் பள்ளிக்கூடம் முழுமை பெற்று, அடுத்த கட்டடத்துக்கு வரைபடம் தயார் செய்துகொண்டு இருக்கிறோம்.

நாம் எதை நினைக்கிறோமோ அதை நடத்தும் சக்தி நம்மிடம் இருக்கிறது. 'நினைப்பது நடக்கும்' என்றும் புதிய ஆத்திச்சூடியில் பாரதி சொல்கிறார். ஆனால், சும்மா நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால், எதுவும் நடக்காது. அதற்காக உழைக்க வேண்டும். 'நாளெல்லாம் வினை செய்' என்றும் கூறுகிறார் பாரதி. வினை செய்வதற்கு முன்னால், நல்ல காரியம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் முதலில் வர வேண்டும். எனவேதான் 'புதிய ஆத்திச்சூடி'யில்

'நன்று கருது
நாளெலாம் வினை செய்
நினைப்பது முடியும்'

என்று சரியான வரிசையில் தருகிறார் பாரதி.

பெரிய காரியங்களைச் சாதிக்கும் பெரிய தலைவர்கள் யாரும் சின்னச் சின்னதாய் யோசிப்பது இல்லை. அவர்கள் யோசனையே விஸ்வரூபம் எடுத்ததாய் இருக்கும். அந்த யோசனையின் பிரம்மாண்டமே நம்மை முன்நோக்கித் தள்ளும் வலிமை பெற்றது. நம்முடைய இன்றைய நிலை நம் எண்ணங்களைச் சிறைப்படுத்த அனுமதிக்கக் கூடாது. மாறாக, நம் பெரிய கற்பனைகள், பெரிய திட்டங்கள், நம்மை இன்றைய நிலையில் இருந்து சிறை மீட்கும். ஆனால், இதில் முழு நம்பிக்கையுடன் இறங்க வேண்டும். 99% நம்பிக்கை உதவாது. நம்மால் முடியும் என்ற முழு நம்பிக்கை நமக்கு வந்துவிட்டால், உலகம் நம்முடன் கைகோத்துக்கொண்டு, நம் கனவு நிறைவேற, தானும் உழைக்கும்.

(பேசுவோம்)

வாரம் ஒரு பாசுரம்
பாகம் – 2

இவனா சிறுவன்!

சுஜாதா

கண்ணனை சிறுகுழந்தையாக்கி அவனது தளர்நடையை ரசித்தவர் பெரியாழ்வார். இவரது பாசுரங்களைப் படிக்கும் போது நிஜமாகவே தித்திப்பை உணர்வோம். அந்த அளவுக்கு சொற்களின் எளிமையையும் அழகையும் விதவிதமான சப்தங்களையும் பயன்படுத்துவார். ஓர் உதாரணம் பார்க்கலாம்.

''கன்னற்குடம் திறந்தால் ஒத்து ஊறிக்
கணகண சிரித்து உவந்து
முன்வந்து நின்று முத்தம் தரும் என்
முகில்வண்ணன் திருமார்வன்
தன்னைப் பெற்றேற்குத் தன் வாய்
அமுதம்
தந்து என்னைத் தளிர்ப்பிக்கின்றான்;
தன் எற்று மாற்றலர் தலைகள் மீதே
தளர் நடை நடவானோ!''

(தளிர்ப்பிக்கின்றான் - சந்தோஷத்தாலே பூரிக்கப் பண்ணினான்)

குடம் நிறைய கரும்புச்சாறு திறந்து கொட்டினதுபோல் கணகணவென்று சிரித்து மகிழ்ந்து முன்னால் வந்து முத்தம் தரும் மேகவர்ணக் கண்ணன், தன் பெற்றோருக்கு தன் வாயின் அமுதம் தந்து பூரிப்படையச் செய்கின்றான். தன் சத்துருக்கள் தலைமீது அனாயாசமாக நடந்துசெல்லவும் கூடியவன் அவன்.

குழந்தை என்றாலும் எதிரிகளிடமிருந்து நம்மைக் காக்கவும் செய்வான் கண்ணன் என்பதை பெரியாழ்வார் அடிக்கடி சொல்கிறார்.

''சிறியன் என்று என் இளஞ்
சிங்கத்தை இகழேல் கண்டாய்,
சிறுமையின் வார்த்தையை
மாவலியிடைச் சென்று கேள்''

சின்னப் பையன் என்று பரிகாசம் செய்யாதே. மகாபலியிடம் போய்க் கேள். இவன் நிஜமாகவே சிறுவனா என்று!



தஞ்சை பரத்வாஜ்

சென்ற இதழ் தொடர்ச்சி...

தனுசு

இந்த வருட ஆரம்பமே மகிழ்ச்சியூட்டும் விதமாக இருக்கும். வெளியூர் பிரயாணங்கள் வந்து சேரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த கருத்து வேற்றுமை மாறி, ஒற்றுமையுடன் சேர்ந்து வாழ்வார்கள். தடைபட்டு வந்த திருமணம் சட்டென்று கூடிவரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள்.



நீண்டகால பிரார்த்தனைகள் செய்து முடிப்பீர்கள். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். குழந்தைகள் பற்றின மனக் கவலை தீரும். புதிய வீடு / மனை வாங்க உகந்த காலம். வழக்கு வெற்றி பெறும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். 2008 ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு யாரிடமும் அதிக பேச்சு வைத்துக் கொள்ளக் கூடாது. வாகனத்தில் செல்லும் போது உஷார். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்தில் அதிக லாபம் கிட்டும். அரசியல்வாதிகளுக்கு நல்ல காலம். வெள்ளி, செவ்வாய் தோறும் ராகு / கேதுவுக்கு தீபம் ஏற்றி வழிபட்டு வர, நற்பலன் கிட்டும்.

மகரம்

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சில சோதனைகள் இருந்தாலும், ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு சில அனுகூலமான நன்மைகள் நடக்கும். எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது. கணவன், மனைவிக்குள் விட்டுக் கொடுத்து அனுசரணையுடன் நடந்துகொள்வது நல்லது. யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். கைப்பொருள் மீது கவனம் தேவை. கூட

இருக்கும் நபர்கள் நமக்குக் குழி வெட்டப் பார்ப்பார்கள், உஷார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உணவுக் கட்டுப்பாடு அவசியம். எதற்கும் ஆசைப்படாமல் இருப்பது நல்லது. கல்வியில் அதிக அக்கறை செலுத்தி படிக்கவும். வியாபாரம் சற்று மந்தமாக இருக்கும். வீடு / மனை வாங்குவதை சற்றுத் தள்ளிப் போடவும். ராகு / கேது / குரு/ சனி வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

கும்பம்

இந்த ஆண்டின் துவக்கமே பொன்னான ஆண்டாக உள்ளது. கடந்த வருடத்தில் பட்ட கஷ்டங்களைவிட, தற்பொழுது நற்பலன் அளிக்கும் ஆண்டாக உள்ளது. புதிய திட்டங்கள் கைகொடுக்கும். ஆடை, ஆபரண அலங்காரப் பொருட்கள் சேரும். வீடு / மனை வாங்கும் யோகம் வந்து சேரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். கணவன் - மனைவிக்குள் இருந்துவந்த கருத்து வேற்றுமை விலகி, குடும்பம் சந்தோஷமாக இருக்கும். திருமணம் கைகூடும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். பணக் கஷ்டம் இருக்காது. கல்வி வளம் மேலோங்கும். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் ஏற்படும். மனத்தில் தைரியம், தன்னம்பிக்கை, அதிகம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும். சமூக சேவகர்கள் நற்பெயர் அடைவார்கள். எழுத்து, அச்சு, கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல பொற்காலம். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆண்டாக இருக்கும். சனி பகவானை வழிபட்டு வர, நற்பலனை அளிப்பார்.

மீனம்

இந்த வருடம், நற்பலனை அளிக்கும் ஆண்டாகவே இருக்கும். மதிப்பும் மரியாதையும் பெருகும். கௌரவப் பட்டங்கள் வந்து சேரும். சில பொறுப்பான பதவி கிட்டும். மனசஞ்சலம் விலகும். வேலையில் உயர்வு ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். திருமணம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். வீடு / மனை வாங்க உகந்த நேரம். நாணயம் காப்பாற்றப்படும். கடன் சுமை தீரும். கூட்டுக் குடித்தனத்தில் உள்ளவர்கள் தனிக்குடித்தனம் செல்வார்கள். மன தைரியம் ஏற்படும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். வெளிநாடு செல்லும் பாக்கியம் உண்டாகும். கலைஞர்களுக்கு ஏற்றமான ஆண்டாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் நல்ல ஆதாயம் கிட்டும். வியாழன்தோறும் குரு பகவானை வழிபட்டு வருதல் நற்பலனை அளிக்கும். ராகு / கேது வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும். ●

புத்தாண்டு பலன்கள் — 2008

பார்த்திபன் கனவு பரிசுப்போட்டி 3-க்கு ஏகப்பட்ட ரெஸ்பான்ஸ். கலந்துகொண்டு பரிசு பெறும் சிறந்த 'திக்திக்' அனுபவங்கள் இதோ :

என் மகளுக்கு முதல் குழந்தை உண்டாகி இருந்தபோது, திடீரென்று மூன்றாவது மாதத்தில் கருச்சிதைவு ஏற்பட்டுவிட்டது. மருத்துவமனையில் சிகிச்சைக்குப் பின் இரவு வீடு திரும்பினோம். வீட்டினர் எல்லோரும் சோக நினைவுகளைப் பகிர்ந்துகொண்டு படுக்கச் சென்றோம். நட்ட நடுநிசி. என் மகள் கட்டிலில் படுத்திருந்தாள். ஜன்னல் வழியாக ஒரு ரீப்பர் கட்டை அவள் மீது படும்படியாக நீட்டப்பட்டது. அவள் பயந்து அம்மா என அழைக்க - அருகில் படுத்திருந்த நான் விழித்து, 'ஐயோ! என் பிள்ளை' என்று கத்திக்கொண்டே அவளைக் கட்டிப்பிடித்தேன். என் இதயம் ஒரு வினாடி துடிப்பை மறந்தது. என் மகன் ஆட்களோடு கம்பு, கம்பி இவற்றை எடுத்துக்கொண்டு திருடனைப் பிடிக்க ஓடினான். அவன் நிற்கவா செய்வான்? அதன்பின் இரவில் ஜன்னல்களைத் திறப்பதே இல்லை.

- **வி.திலகம்,**
திருநெல்வேலி

என் கணவர் வெளியூர் போயிருந்தார். நானும் எனது மூன்று குழந்தைகளும் தனியாக இருந்தோம். இரவு சாப்பாடு முடிந்ததும், கிச்சனை வெளியில் இழுத்துத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு படுக்கச் சென்றேன். குழந்தைகள் தூங்கிவிட்டார்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு கிச்சனில் சாமான்களை உருட்டும் சத்தம் வர விழித்துக்கொண்ட நான், திக்திக் நெஞ்சுடன் கூர்ந்து கேட்டேன். யாரோ சமையல் அறையினுள் நுழைந்து சாமான்களை 'பாக்' செய்வது போலிருந்தது. தட்டுத் தடுமாறி பக்கத்து வீட்டுக்குச் சென்று ரகசியமாக அவர்களிடம் விஷயம் சொல்லி, அழைத்து வந்தேன். அவர்களுக்கும் உள்ளே போய்ப் பார்க்க பயம். அதனால் அக்கம் பக்கம் எல்லோரையும் எழுப்பிக்கொண்டு கத்தி, கம்பு என்று எல்லா ஆண்களும் சமையலறைக் கதவைத் திறக்க, யாரும் எதிர்பார்க்கும் முன்னால் மின்னலென ஏதோ பாய்ந்தோட, அது என்ன உருவம் என்றே யாராலும் சிறிது நேரம் நிர்ணயிக்க முடியவில்லை. கடைசியில் எதிர்வீட்டுக்காரர்தான் தைரியமாகப்

சமையலறையில் ஒரு



கனவின் நுழைவாயில்

பிடித்தார். பார்த்தால், மோர் செம்பினுள் தலையை மாட்டிக்கொண்ட பூனைதான் அந்த இரவு பூராவும் எங்களை திகிலடையச் செய்தது என்று தெரிந்ததும், அதை எண்ணியெண்ணிச் சிரித்தோம். அந்த நேரத்தில் அவதிப்பட்டது நெஞ்சம் என்பது மறக்க முடியாத திக்திக் அனுபவம் தான்!

- சரஸ்வதி இராசேந்திரன், மன்னார்குடி

சத்தம்!

என் வீடு சிங்கிள் பெட் ரூம் மாடலில் தனி வீடு. குட்டிக் குட்டியாக அருகருகே வீடுகள். என் தங்கை பி.ஏ. பரீட்சை எழுதுவதற்காக என் வீட்டுக்கு அவளுடைய மூன்று வயது மகளுடன் வந்திருந்தாள். பரீட்சையின்போது அவள் மகளைப் பார்த்துக்கொள்வது என் வேலை.

இரண்டு நாட்கள் நன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். மூன்றாவது நாள்தான் சிக்கல். நான், குழந்தை, காது கேளாத பாட்டி மூவரும் வீட்டில் இருந்தோம். வாசல் கதவு திறந்திருந்தது. வீட்டின் முன் பஸ், லாரி செல்லும் முக்கிய சாலை. நான் குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். பாத்ரூமுக்குள் கால், கை அலம்ப நான் செல்ல, பாட்டி சமையல் அறையில் இருந்தார். குழந்தை என் பின்னே வருவது தெரியாது. வந்தவள் சடாரென்று வெளியே தாழ்ப்பாள் போட்டுவிட் டாள். அவளுக்குத் திறக்கத் தெரியவில்லை. சிறிய இருண்ட பாத்ரூமில் நான், வெளியே குழந்தை, சமையலறையில் காது கேளாத பாட்டி. திறந்த கதவு, பக்கத்து வீடு காலியாகி ஆளில்லாமல் பூட்டிய நிலை. குழந்தை வாசலுக்கு ஓடினால், என் நிலை என்ன? யாராவது வீட்டில் நுழைந்தால் என்ன செய்வது? 'பாட்டி, பாட்டி' என்று ஓங்கிக் கத்தினேன், கதவைத் தட்டினேன். குழந்தையின் குரலும் கேட்கவில்லை. என்ன செய்வது? 'திக்திக்'கென்று பத்து நிமிடம் ஓடியது. கடவுள் தயவினால் எதேச்சையாக என் குரல் கேட்ட பாட்டி, கதவைத் திறந்தார்.

வெளியே குழந்தையைப் பார்த்தால் சுவரில் பல்லிபோல் ஒட்டிக்கொண்டு நடுங்கிக்கொண்டிருந்தாள். 'கடவுளே காப்பாற்றினாய்... பாட்டியின் காதில் நீதான் கேட்கச் செய்தாய்' என நன்றி கூறினேன்.

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

ஐந்து வருடங்களுக்கு முன்பு நாங்கள் பஞ்சாப் மாநிலத்தில் வசித்தபோது, ஒரு விடுமுறை நாளில் சுற்றுலா கிளம்பினோம். நடுவில் காட்டுப்பகுதி இருப்பதால், இரவுக்குள் வீடு திரும்புவதாகத் திட்டமிட்டோம். சுற்றுலா எல்லாம் குறித்த நேரத்தில் இனிதே முடிந்து திரும்பும்போது, காரில் பழுது ஏற்பட்டு பாதியில் நின்றுவிட்டது. பின்பு சரி செய்து புறப்பட்டபோது மாலை நேரம் நெருங்கிவிட்டது. ஆங்காங்கே, விலங்குகளின் விதவிதமான ஓசைகளும், நடமாட்டமும் எங்களை கதிகலங்க வைத்துக்கொண்டிருக்கையில், திடீரென்று பிரேக் போட்டார் என் கணவர். என்னவென்று பார்த்தால், மலைப் பாம்பு ஒன்று இரையைத் தின்றுவிட்டு சாலையின் குறுக்கே படுத்திருந்தது. திகில்பிடித்த அந்தத் தருணத்தில், ஆபத்பாந்தவனாக வந்த இரண்டு மலைவாசி மக்கள், 'நெருப்பு மூட்டினால் போதும், அது நகர்ந்துவிடும்' என்று சர்வசாதாரணமாகச் சொல்லிவிட்டு, எங்களுக்கு உதவினர்.

- சுஜாதா, சென்னை

போட்டி முடிவு

13. கபால பைரவர்

ஒற்றைக் கை மனிதனையும் காணவில்லை! அவன் ஒரு கையினால் தூக்கிச் சென்ற அருள்மொழி ராணியையும் காணவில்லை!

அருள்மொழிதேவி ''குழந்தாய்! விக்கிரமா! இதோ வந்துவிட்டேன்!'' என்று அலறிக் கொண்டு அலை கடலிலே பாய்ந்தாள் என்ற விவரத்தைக் கேட்டபோது விக்கிரமனுடைய கண்களில் நீர் ததும்பி வழிய ஆரம்பித்துவிட்டது. அச்சமயம் கடலுக்கப்பால் எங்கேயோ தான் இருக்கும் விஷயம் தன் தாயின் நினைவுக்கு வந்து, அதன் பயனாகத்தான் அப்படி அவள் வெறிகொண்டு பாய்ந்திருக்க வேண்டும் என்று விக்கிரமன் எண்ணினான்.

பொன்னன், தானும் பரஞ்சோதி அடிகளும் தேவியைத் தேடியதைப் பற்றிச் சொல்லி வந்தபோது விக்கிரமன், ''பொன்னா! சீக்கிரம் சொல்லேன்? மகாராணி அகப்பட்டாரா?'' என்று கதறினான்.

''இல்லையே, மகாராஜா! அகப்படத்தானே இல்லை! அப்புறம் மகாராணியைத் தரிசிப்பதற்கு இந்தப் பாழும் கண்கள் கொடுத்து வைக்கவில்லையே!'' என்று பொன்னனும் கண்ணீர் விட்டான்.

''பின்னே மகாராணி உயிரோடுதான் இருக்கிறார் என்று சற்று முன்பு சொன்னாயே? எனக்கு ஆறுதலுக்காகச் சொன்னாயா? ஐயோ! இந்தச் செய்தியைக் கேட்கவா நான் கப்பலேறிக் கடல் கடந்து வந்தேன்!'' என்று விக்கிரமன் புலம்பினான்.



அப்போது பொன்னன், ''பொறுங்கள் மகாராஜா! குறையையும் கேளுங்கள். மகாராணி உயிரோடுதான் இருக்கிறார்; சந்தேகமில்லை, அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கத்தான் முயன்று கொண்டிருக்கிறேன். நீங்களும் வந்துவிட்டீர்கள், இனிமேல் என்ன கவலை?'' என்றான் பொன்னன்.

பிறகு நடந்த சம்பவங்களையும் தான் அறிந்த வரையில் விவரமாகக் கூறலுற்றான்:

அலைகளுக்கு மத்தியில் அடர்ந்த இருளில் பரஞ்சோதி அடிகளும் பொன்னனும் அருள்மொழி ராணியை வெகு நேரம் தேடினார்கள். மகாராணி அகப்படவில்லை.

''பொன்னா! தேவியை சமுத்திர ராஜன் கொண்டு போய்விட்டான்!'' என்று பரஞ்சோதி அடிகள் துக்கம் ததும்பும் குரலில் கூறினார். பொன்னன் 'ஓ'

பார்த்திபன்

என்று அழுதான்.

இனிமேல் ஒருவேளை அகப்பட்டாலும் உயிரற்ற உடல்தான் அகப்படுமென்று இரண்டு பேருடைய மனத்திலும் பட்டுவிட்டது. உயிரற்ற உடலை அலைகளே கரையில் கொண்டு வந்து தள்ளிவிடும். இனியும் தேடுவதில் ஒரு உபயோகமுமில்லை. இவ்வாறு மனத்தில் எண்ணிக்கொண்டு இரண்டு பேரும் கரை ஏறினார்கள். அவர்கள் கரைக்கு வந்த சமயத்தில் கிரகணம் விட ஆரம்பித்திருந்தது. கொஞ்சங் கொஞ்சமாக அந்தகாரத்தை அகற்றிக்கொண்டு சூரியனுடைய ஒளி நாலா திக்குகளிலும் ஸ்தாபித்து வந்தது. மாரிக்காலத்து மாலை வேளையைப்போல் தோன்றிய அச்சமயத்தில், பரஞ்சோதியாரும் பொன்னனும் கரையேறியபோது, அங்கே வெடவெடவென்று குளிரில் நடுங்கிக் கொண்டு நின்ற பரஞ்சோதியாரின் பத்தினியும் வள்ளியும், "வாருங்கள்! சீக்கிரம் வாருங்கள்!" என்று கூவினார்கள். அவர்கள் விரைந்து அருகில் நெருங்கியதும், யாரோ ஓர் ஒற்றைக் கை மனிதன் அப்போதுதான் கடலிலிருந்து கரையேறியதாகவும், அவன் அந்த ஒற்றைக் கையினால் ஒரு ஸ்திரீயைத் தூக்கிக்கொண்டு போனதாகவும், மங்கிய வெளிச்சத்தில் பார்த்தபோது அருள்மொழி ராணி மாதிரி இருந்ததென்றும், தாங்கள் கையைத் தட்டிக் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கும் போதே அம் மனிதன் ஜனக் கூட்டத்தில் சட்டென்று மறைந்து போய் விட்டதாகவும் சொன்னார்கள். ஒரே படபடப்புடன் பேசிய அவர்களிடமிருந்து மேற்கண்ட விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கே சற்று நேரம் ஆகிவிட்டது. முன்னால் அலை கடலில் அருள்மொழி ராணியைத் தேடிய பொன்னனும் பரஞ்சோதியாரும் இப்போது மறுபடியும் ஜனசமுத்திரத்தில் ராணியைத் தேடத் தொடங்கினார்கள். இதுவும் நிஷ்பலனே ஆயிற்று. மாநிலத்திலுள்ள மாந்தர் யாவரும் திரண்டு வந்திருந்ததுபோல் தோன்றிய அந்தப் பெரிய ஜனக் கூட்டத்தில் ஒற்றைக் கை மனிதனையும் அவர்கள் காணவில்லை! அவன் ஒரு கையினால் தூக்கிச் சென்ற அருள்மொழி ராணியையும் காணவில்லை. எவ்வளவோ தேடியும் அகப்படாமற் போகவே, திருவெண்காட்டு நங்கையும் வள்ளியும் பார்த்ததாகச் சொன்னதிலேயே அவர்களுக்கு அவநம்பிக்கை உண்டாயிற்று. அது ஒரு வேளை அவர்களுடைய பிரமையாயிருக்கலாமென்று நினைத்தார்கள். ஆனால், அம்மூதாட்டியும் வள்ளியுமோ தாங்கள் நிச்சயமாய்ப் பார்த்ததாக ஆணையிட்டுக் கூறினார்கள்.

மேற்கண்ட வரலாற்றைச் சொல்லி முடித்த பிறகு, அருள்மொழி ராணி இன்னும் உயிரோடுதானிருக்கிறார் என்று





தான் நம்புவதற்குக் காரணம் என்னவென்பதையும் பொன்னன் கூறினான். வள்ளியும் அவனும் சில தினங்கள் வரையில் திருச்செங்காட்டாங்குடியிலிருந்துவிட்டு, அருள்மொழி ராணியைப் பற்றிய மர்மத்தைத் தெரிந்துகொள்ளாமலே திரும்பி உறையூர் சென்றார்கள். அங்கே போய்ச் சில நாளைக்கெல்லாம் சிவனடியார் வந்து சேர்ந்தார். மகாராணியைப் பற்றிய வரலாற்றைக் கேட்டு அவர் பெருந்துயரம் அடைந்தார். ஒற்றைக் கை மனிதனைப் பற்றிய விவரம் அவருக்குப் பெரும் வியப்பையளித்தது. வள்ளியைத் திரும்பத் திரும்ப அவளுக்கு ஞாபகம் இருக்கும் விவரத்தையெல்லாம் சொல்லும்படி கேட்டார். கடைசியில் அவர், ''பொன்னா! வள்ளி சொல்லுவதில் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. ராணியை ஒற்றைக் கை மனிதன்தான் கொண்டு போயிருக்கிறான். ராணி உயிருடன் இருக்கிறாள் என்பதிலும் சந்தேகமில்லை. அவள் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு'' என்றார். பிறகு அவர், ''அந்த ஒற்றைக் கை மனிதன் யார் தெரியுமா?'' என்று கேட்டார். ''தெரியாதே சுவாமி!'' என்று



> **அந்த நிர்மானுஷ்யமான காட்டில் மனிதக் குரலை திடீரென்று கேட்டதில் பொன்னனுக்கு திகிலுண்டாயிற்று!**

பொன்னன் சொன்ன போது சிவனடியார், ''அவன்தான் கபால ருத்திர பைரவன். கபாலிக மதக் கூட்டத்தின் தலைமைப் பூசாரி. தமிழகத்தில் நரபலி என்னும் பயங்கரத்தை அவன் பரப்பிக் கொண்டு வருகிறான். அதைத் தடுப்பதற்குத்தான் நான் பிரயத்தனப்பட்டுக் கொண்டு வருகிறேன். எங்கேயோ ஒரு இரகசியமான இடத்தில் அவன் ரண பத்திர காளி கோயில் கட்டியிருக்கிறானாம். அந்த இடத்தைக் கண்டுபிடித்தோமானால், அங்கே அநேகமாக நமது ராணியைக் காணலாம்'' என்றார்.

இதைக் கேட்டு பொன்னன் நடு நடுங்கிப் போனான். ''ஐயோ! மகாராணியை ஒருவேளை காளிக்குப் பலி கொடுத்திருந்தால்...'' என்று அலறினான்.

''இல்லை பொன்னா, இல்லை! கேவலம் ஒரு பலிக்காக கபால பைரவன் இவ்வளவு சிரமம் உள்ள ஒரு காரியத்தில் தலையிட்டிருக்க மாட்டான். வேறு ஏதோ முக்கிய அந்தரங்க நோக்கம் இருக்கிறது. ஆகையால், ராணியை உயிரோடு பத்திரமாய் வைத்திருப்பான். ரணபத்திர காளி கோயில் இருக்குமிடத்தை நாம் கண்டு பிடிக்க வேண்டும்'' என்றார் சிவனடியார்.

இதன் மேல் பல்லவ, சோழ நாடுகளை பொன்னனும் சிவனடியாரும் இரண்டு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பகுதியை ஒவ்வொருவர் தேடுவது என்று தீர்மானித்துக் கொண்டார்கள். பொன்னன் வள்ளியைத் தன்னுடைய அத்தை வீட்டில் விட்டுவிட்டு, சோழநாடு முழுவதும் தேடி அலைந்தான். பிறகு, காவேரியின் அக்கரைக்கு வந்து தேடத் தொடங்கினான்.



மாதக்கணக்காகத் தேடி அலைந்ததற்குக் கடைசியாக நாலு நாளைக்கு முன்புதான் பலன் கிடைத்தது. அந்தக் காட்டாற்றின் கரையோடு பொன்னன் மேற்கே மூன்று, நாலு காத தூரம் போன பிறகு, ஒரு பெரிய மலையின் அடிவாரத்துக்கு வந்து சேர்ந்தான். அந்த மலை அடிவாரத்தில் வெகு தூரம் அடர்த்தியான காடு சூழ்ந்திருந்தது. அவன் வழி பிடித்துக் கொண்டு வந்த காட்டாறானது, அந்த மலை உச்சியிலிருந்துதான் புறப்பட்டிருக்க வேண்டுமென்றும், அந்த மலை கொல்லிமலையின் ஒரு பகுதியாயிருக்கலாமென்றும் பொன்னன் ஊகித்தான்.

அந்த வனப்பிரதேசத்தைப் பார்த்தவுடனேயே, இதற்குள் எங்கேயாவதுதான் ரணபத்திர காளியின் கோயில் இருக்க வேண்டுமென்று பொன்னனுக்குத் தோன்றியது. அந்த மலைக்கு உட்புறத்தில் காட்டுமிராண்டி ஜனங்கள் வசிப்பதாக பொன்னன் கேள்விப்பட்டிருந்தான். அவர்கள் சில சமயம் மலைக்கு வெளியில் வந்து, நரபலி கொடுப்பதற்காக மனிதர்களைக் கொண்டு

போவதுண்டு என்றும் கேள்விப்பட்டிருந்தான். ஆகவே, பொன்னன் அந்த வனப் பிரதேசத்தில் நாலாபுறத்திலும் தேடி அலைய ஆரம்பித்தான். ஆனால், எந்தப் பக்கத்திலும் அதிக தூரம் காட்டுக்குள் புகுந்து போவதற்குச் சாத்தியப்படவில்லை.

கடைசியாக, காட்டாறு பெருகி வந்த வழியைப் பிடித்துக்கொண்டு போனான். போகப் போக ஆறானது குறுகிச் சிறு அருவியாயிற்று. அந்த அருவியின் வழியாக மலை மேல் ஏறிச் செல்வது அவ்வளவு சுலபமான காரியமாக இல்லை. சில இடங்களில் பெரிய பெரிய பாறைகள் கிடந்தன. சில இடங்களில் ஆழமான மடுக்கள் இருந்தன. இன்னும் சில இடங்களில் முள் மரங்கள் அடர்த்தியாகப் படர்ந்து, புகுந்து போக முடியாமல் செய்தன. வேறு சில இடங்களில் பாறையில் செங்குத்தாக ஏற வேண்டியதாயிருந்தது. பொன்னன் இதற்கெல்லாம் சிறிதும் சளைக்காமல் ஏறிச் சென்றுகொண்டிருந்தான்.

காலையிலிருந்து மத்தியானம் வரையில் இவ்விதம் ஏறி மிகவும் களைத்துப்போன பொன்னன் கடைசியாக ஒரு பாறையின் மீது உட்கார்ந்தான். ''இனிமே இறங்கிப் போகவேண்டியதுதான். வேறு வழியில்லை. இராத்திரியில் இந்த வனப் பிரதேசத்துக்குள் அகப்பட்டுக் கொண்டால் காட்டு மிருகங்களுக்கு இரையாக நேரலாம்'' என்று அவன் எண்ணிக்கொண்டிருந்த போது, திடீரென்று மனிதப் பேச்சுக் குரல் கேட்டது. அந்த நிர்மானுஷ்யமான காட்டில் மனிதக் குரலை திடீரென்று கேட்டதில், பொன்னனுக்கு ஒரு பக்கம் திகிலுண்டாயிற்று. இன்னொரு பக்கத்தில் ஒருவேளை நாம் தேடி வந்த காரியம் சித்தியாகப் போகிறதோ என்ற எண்ணத்தினால் ஆவலும் பரபரப்பும் அளவில்லாமல் பொங்கின. எதற்கும் ஜாக்கிரதையாயிருக்கலாம் என்று பொன்னன் பக்கத்தில் நீட்டிக்கொண்டிருந்த ஒரு பாறைக்குக் கீழே சரேலென்று ஒளிந்து கொண்டான்.

சற்றுநேரத்துக்கெல்லாம் மேலேயிருந்து இரண்டு மனிதர்கள் இறங்கி வருவது தெரிந்தது. ஆனால் எப்பேர்ப்பட்ட மனிதர்கள்? அவர்கள் மனிதர்கள் தானா? ஒருவன் மனிதன்தான், சந்தேகமில்லை. ஆனால், அவ்வளவு பயங்கரத் தோற்றங்கொண்ட மனிதனை அதற்கு முன்னால் பொன்னன் பார்த்ததேயில்லை. அவனுக்கு அந்தப் பயங்கரத் தோற்றத்தை அளித்தவை முக்கியமாக, அவனுடைய உருட்டி விழிக்கும் பார்வையுடைய சிவந்த கண்கள்தான். இன்னும், அவனது உயர்ந்து வளர்ந்த உடலின் ஆகிருதி, நீண்ட பெரிய மீசை, தலையில் அடர்த்தியாக வளர்ந்து சுருட்டை சுருட்டையாகத் தொங்கிய செம்பட்டை மயிர், நெற்றியில் அப்பியிருந்த செஞ்சந்தனம், அதன் மத்தியில் இரத்தச் சிவப்பான குங்குமப் பொட்டு, இவையெல்லாம் அவனுடைய தோற்றத்தின் பயங்கரத்தை அதிகமாக்கின. அவன் ஒரு கரிய கம்பளிப் போர்வையைப் போர்த்தியிருந்தான். ஒரு பாறையிலிருந்து இன்னொரு பாறைக்குத்தாண்டியபோது அந்தப் போர்வை நழுவிற்று. அப்போது பொன்னன் ''ஹோ!'' என்று கதறிவிட்டிருப்பான். ஆனால், பயத்தினாலேயே அவனுடைய தொண்டையி



விருந்து சப்தம் வரவில்லை. பொன்னனுக்கு அவ்வளவு ஆச்சரியத்தையும், பயத்தையும் உண்டாக்கிய காட்சி என்னவென்றால், அந்த மனிதனுக்கு ஒரு கை இல்லாமலிருந்ததுதான்! அதாவது வலது தோளுக்குக் கீழே முழங்கைக்கு மேலே அவனுடைய கை துண்டிக்கப்பட்டு முண்டமாக நின்றது.

'அருள்மொழி ராணியைத் தூக்கிச் சென்றதாக வள்ளியும் திருவெண்காட்டு அம்மையும் கூறியவன் இவன்தான்! 'கபால ருத்திர பைரவன்' என்று சிவனடியார் கூறியவனும் இவன்தான்!' என்று பொன்னனுக்கு உடனே தெரிந்து போய்விட்டது.

அந்த இருண்ட மண்டபத்துக்கு வெளியே யாரோ இருவர் பேசிக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டது!

கபால பைரவனின் தோற்றம் மட்டுமல்ல, அவனுடன் இருந்த இன்னொரு மனிதனின் தோற்றமும் பொன்னனுக்குத் திகைப்பை அளித்தது. ஆமாம்; அவனும் மனிதன்தான் என்பது அருகில் வந்தபோது தெரிந்தது. ஆனால், அவன் விபரீதமான குள்ள வடிவமுள்ள மனிதன். பத்து வயதுப் பையனின் உயரத்துடன், நாற்பது வயது மனிதனின் முதிர்ந்த முகமுடையவனாயிருந்தான். அவ்வளவு குள்ளனாயிருந்தும் அவன் கபால பைரவனைப் பின்பற்றி அந்த மலைப் பாறைகளில் அதிவிரைவாகத் தாவித் தாவிச் சென்றது, பொன்னனுடைய வியப்புடன் கலந்த திகிலை அதிகரிப்பதாயிருந்தது.



பொன்னன் கூறிய வரலாற்றில் மேற்கண்ட இடத்துக்கு வந்ததும், விக்கிரமனும் அளவில்லாத ஆவலைக் காட்டினான். அந்தக் குள்ளனை நன்றாக விவரிக்கும்படி சொன்னான். பொன்னன் அவ்விதமே விவரித்துவிட்டு, ''மகாராஜா! என்ன விசேஷம்? இம்மாதிரி யாரையாவது நீங்கள் வழியில் பார்த்தீர்களா, என்ன?'' என்று கேட்டதற்கு, விக்கிரமன், ''ஆமாம்; பொன்னா, அதைப் பற்றி பிறகு சொல்கிறேன். உன்னுடைய வரலாற்றைச் சொல்லி முடி'' என்றான்.

''இனிமேல் அதிகம் ஒன்றுமில்லை மகாராஜா! அருவிப் பாதையில் அவர்கள் இருவரும் வெகுதூரம் இறங்கிப் போய்விட்டார்கள் என்று தெரிந்துகொண்டு, நான் மேலே வந்தேன். அவர்கள் இருப்பிடத்தையும் காளி கோயிலையும் கண்டுபிடித்துவிடலாம்; ஒருவேளை மகாராணியையே பார்த்தாலும் பார்த்துவிடுவோம் என்ற ஆசையுடன் அந்த அருவிப் பாதையைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறினேன். ஆனால், சிறிது நேரத்துக்கெல்லாம் என் ஆசை பாழாகிவிட்டது. ஏனென்றால், மேலே கொஞ்ச தூரம் போனதும் அருவியானது மூன்று ஆள் உயரத்திலிருந்து செங்குத்தாக விழுந்தது. பாறையும் அங்கே செங்குத்தாக

இருந்தது. அவ்விடத்தில் பாறையின் மேலே ஏறுவதோ, மேலே இருந்து கீழே இறங்குவதோ மனிதர்களால் முடியாத காரியம். அப்படியானால், இவர்கள் எப்படி வந்தார்கள்? மேலேயிருந்து யாராவது கயிறு அல்லது நூலேணி தொங்கவிட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், அந்த இடத்துக்கும் நான் ஒளிந்திருந்த இடத்துக்கும் மத்தியில் எங்கேயாவது இரகசிய வழி இருக்க வேண்டும். ஆன மட்டும் தேடிப் பார்த்தேன் மகாராஜா, பிரயோஜனப்படவில்லை. எப்படியும் போனவர்கள் திரும்பி வருவார்களென்று நினைத்து, மலை அடிவாரத்துக்கு வந்து மூன்று தினங்கள் காத்திருந்தேன். போனவர்கள் திரும்பி வரவில்லை. அதன் மேல் சிவனடியாரிடம் தெரிவித்து யோசனை கேட்கலாமென்று கிளம்பி வந்தேன். நல்ல சமயத்திலே வந்தேன் மகாராஜா!'' என்று பொன்னன் முடித்தான்.

''ஆமாம், நல்ல சமயத்தில்தான் வந்தாய், பொன்னா! இல்லாவிட்டால் இத்தனை நேரம் நான் ஒருவேளை என் தந்தையிருக்குமிடம் போய்ச் சேர்ந்திருப்பேன்'' என்றான் விக்கிரமன்.

''எனக்கும் ஒரு வேளை அந்தக் கதி தான் நேர்ந்திருக்கும், மகாராஜா! எப்படிப் பெருகி வந்தது பெருவெள்ளம்! அவ்வளவும் அந்த மலையிலிருந்துதானே வந்திருக்கிறது? மழை பிடித்தபோது அங்கே நான் அகப்பட்டுக் கொண்டிருந்தேனேயானால்... தங்களை எங்கே பார்த்திருக்கப் போகிறேன்! மகாராணியைத்தான் எப்படித் தேடப் போகிறேன்?''



''மகாராணி அந்த மலையில் இருக்கிறார் என்று உனக்கு நம்பிக்கை இருக்கிறதா பொன்னா?'' என்று கேட்டான் விக்கிரமன்.

''ஆமாம், மகாராஜா! முன்னே, சிவனடியார் சொன்னபோதுகூட எனக்கு அவ்வளவு நம்பிக்கைப்படவில்லை. ஆனால், அந்த ஒற்றைக் கை பைரவனைப் பார்த்த பிறகு, நிச்சயமாக மகாராணி பிழைத்துத்தான் இருக்கிறார் என்ற நம்பிக்கை உண்டாகிறது.''

''எப்படியோ என் உள்ளத்திலும் அந்த நம்பிக்கை இருக்கிறது பொன்னா! என்னைப் பார்க்காமல் அம்மா இறந்து போயிருப்பார் என்று என்னால் நினைக்க முடியவேயில்லை. சென்ற ஆறு மாதமாக மகாராணி என் கனவில் அடிக்கடி தோன்றி வருகிறார். தை அமாவாசையன்று என் பெயரைக் கூவிக்கொண்டு கடலில் பாய்ந்ததாகச் சொன்னாயே, கிட்டத்தட்ட அந்த நாளிலிருந்துதான் அடிக்கடி அவர் கனவில் வந்து என்னை அழைக்கிறார். அவர் உயிரோடுதானிருக்க வேண்டும். ஐயோ, இந்த நிமிஷத்தில் கூவி, அவர் என்னைக் கூடி அழைக்கிறார் பொன்னா! அம்மா! அம்மா...!'' என்று அலறினான் விக்கிரமன்.

அப்போது பொன்னன் சட்டென்று விக்கிரமனுடைய வாயைப் பொத்தி, ''மகாராஜா! பொறுங்கள்!'' என்றான். பிறகு, ''அதோ கேளுங்கள், ஏதோ சப்தம் கேட்கிறது, மனிதக் குரல்!'' என்று காதோடு கூறினான்.

உண்மையிலேயே அந்த இருண்ட மண்டபத்துக்கு வெளியே யாரோ இருவர் பேசிக்கொண்டிருக்கும் சப்தம் கேட்டது.

(தொடரும்)

"இதயம் தொடும் இயக்குநர்கள்!"

–உருகுகிறார் தமனா



'கல்லூரி' யில் முதல் இடம் கிடைத்ததில் திக்குமுக்காடிப் போயிருக்கிறார் தமனா. இது இவருடைய மூன்றாவது தமிழ்ப் படம். என்றாலும் இதில்தான் தமனாவுக்குப் பரவலான கவனம் கிடைத்திருக்கிறது. வாழ்த்துகளுக்கு மத்தியில் நம்மிடம் பேசினார்.

கல்லூரி க்ளைமாக்ஸ் முன்பே தெரியுமா?

''இல்லை. அடுத்த நாள் எடுக்கப் போகிற காட்சி கூட யாருக்கும் தெரியாது. அப்பப்போ காட்சிகளைச் சொல்லி நடிக்க வைச்சார் பாலாஜி சக்திவேல். ஆனாலும் காதல் மாதிரி கல்லூரி க்ளைமாக்ஸ¯ம் பரபரப்பா இருக்கும்னு முதல்லயே நான் நினைச்சேன்.''


* பாலாஜி சக்திவேல்

பாலாஜி சக்திவேல்?

''அவர் ஒரு நல்ல நடிகர். எந்தக் காட்சியா இருந்தாலும் அபாரமா நடிச்சுக் காட்டுவார். அதனால எங்களுக்கும் நடிக்க சுலபமா இருந்துச்சு. அவர் அடிப்பார், திட்டுவார்னு நிறைய பேர் பயமுறுத்தினாங்க. ஆனா, அவர் அப்படி எதுவும் கிடையாது. யாரா இருந்தாலும் அவங்களை அழகா நடிக்க வைச்சிடுவார். நிறைய மெனக்கெடுவார். அவரோட உழைப்பைப் பார்த்தா நமக்கும் படத்து மேல ஈடுபாடு அதிகமாகும்.''

கல்லூரி ஹீரோ அகில்?

''ரொம்பக் கூச்ச சுபாவம் உடையவர். அவருக்குப் பேசும் கண்கள்.''

யதார்த்த படங்கள்ல இனி அதிகம் பார்க்கலாமா?

''என்னோட சமீபத்திய தெலுங்குப் படமான 'ஹேப்பி டேஸ்'கூட யதார்த்தமான படம்தான். கண்டிப்பா இதுமாதிரி படங்கள் செய்யும்போது ஒரு புது உணர்வு கிடைக்குது. அதேசமயம் கமர்ஷியல் படங்களையும் தவறவிடக் கூடாது. ரசிகர்கள் ரெண்டு விதமான படங்களையும் ரசிக்குறாங்க.''

உடைகள் கவனம்?

''நல்லவேளை இப்போ உள்ள இயக்குநர்கள் இதயம் தொடுற விதமா நடந்துக்கறாங்க; நடிகைகளை யதார்த்தமா காண்பிக்க ஆசைப்படறாங்க. அதனால விதவிதமான காஸ்ட்டியூம்களை அணிய முடியுது. கஜோல், கரிஷ்மா கபூர் ரெண்டு பேரோட உடைகளை அப்பப்போ கவனிச்சுட்டே இருப்பேன். உடைகள் கவனம் பத்தி அவங்க ரெண்டு பேர்கிட்டயும் நிறைய கத்துக்கலாம். எனக்கு ஜீன்ஸ் பிடிச்சாலும் புடைவை மேலேயும் ஒருவித

மயக்கம் இருக்கு. நிறைய புடைவை விளம்பரங்கள்ல நடிச்சிருக்கேன் இல்லையா!''

தமிழ்நாடு, தமிழ் சினிமா பழகிடுச்சா?

''தமிழ் மக்கள் அடுத்தவருக்குக் கொடுக்கிற மரியாதை ரொம்பவே ஆச்சர்யப்பட வைக்குது. குறிப்பா, பெண்களுக்கு அவங்க ரொம்ப மரியாதை தர்றாங்க. இப்போதைக்கு தமிழ், தெலுங்குல நடிச்சுட்டு இருந்தாலும் என் கனவு ஹிந்தியில நடிச்சு பெரிய பேர் வாங்கறதுதான். ஒரு மொழியில மட்டும் நடிச்சா நம்ம வட்டம் ரொம்பச் சுருங்கிடும். இந்தியா முழுக்கப் பேசப்படணும்னா சர்வ மொழிகளிலும் நடிக்கணும். பதினஞ்சு வயசுல நான் இந்தத் துறைக்கு வந்தபோதே இப்படியொரு முடிவுலதான் நடிக்க ஆரம்பிச்சேன்.''

தமிழ்ல பிடிச்ச ஹீரோ?

''சூர்யா. அவரோட இணைஞ்சு அடுத்து ஏவி.எம். தயாரிப்புல, கே.வி.ஆனந்த் இயக்கத்துல ஒரு படம் பண்றேன். அவர் நடிச்ச 'முன்பே வா' பாடல், என்னைக்கும் என்னோட ஃபேவரிட்.''

ரோல் மாடல்?

''மாதுரி தீட்சித். இன்னைக்கும் அவரோட புகழ் குறையல. ஒரு நடிகைன்னா எவ்வளவு சக்தி வாய்ந்தவரா இருக்கணும்னு காண்பிச்சுட்டுப் போயிட்டார். அவரைப் பின்பற்றினாலே நல்ல நிலைமைக்கு வர முடியும்.''

கல்லூரிக்கு அடுத்து?

''கல்லூரியில் நான் எதிர்பார்க்காத பாராட்டுகள் கிடைச்சிருக்கு. இனி என்னால வழக்கம்போல படங்கள் பண்ண முடியாது. கல்லூரியில கிடைச்ச நல்ல பெயரைத் தக்க வைச்சுக்கணும். சூர்யாவோட ஏவி.எம். படம், சித்தார்த்தோட ஆனந்தத் தாண்டவம், ரவிகிருஷ்ணாவோட நேற்று இன்று நாளைன்னு அடுத்த வருஷம் என்னோட நல்ல நல்ல படங்கள் வெளிவரும். தமிழ்ல எனக்குன்னு ஒரு இடம் கொடுத்த ரசிகர்களை ஏமாத்தாத படங்களா இருக்கும்.''

- பப்பி



சினிமா ஸ்பெஷல்



தீர்வல்ல... சீர்குலைவு!

தமிழ்நாட்டின் முதல் எய்ட்ஸ் நோயாளி, அவனது முந்தைய, பிந்தைய வாழ்க்கை முறை, நோய் குறித்த கிராம மக்களின் அறியாமை... இப்படி ஓர் அருமையான கதைக் களத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள், திரைக்கதையை ரணகளம் செய்திருக்கிறார்கள்.

முதல் பாதிவரை இருக்கையில் அமர முடியாத வகையில் நெளிய வைக்கும் காட்சிகள். குடும்பத்துடன் வந்தவர்கள் 'போன ஜென்மத்தில் ஏதாவது பாவம் செய்துவிட்டோமோ?' எனச் சங்கடப்பட்டிருப்பது உறுதி. ஒரு மோசமான மனிதனின் யதார்த்த வாழ்க்கை என்கிற பெயரில் பாலியல் காட்சிகளை வாரி இறைத்துள்ளார்கள். இது போதாதென்று காமெடி என்கிற பெயரில் கஞ்சா கருப்பு செய்கிற சேஷ்டைகள் குமட்டல்! படம் முழுவதும் அவருக்குத் தமது ஆண்மை பற்றியே கவலை.


சமூகத்தின் ஒரு பகுதியில் நடக்கும் அவலத்தைக் காட்டுவது எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம் காட்டுகிற விதம். ஒரு பிரச்னையை மிருகத்தின் பார்வையிலேயே பார்த்து, மிருகமாகவே சிந்தித்து, மிருகத்தின் வழியிலேயே சென்று, மிருகமாகவே முடிப்பதற்குப் பெயர் தீர்வல்ல. அப்படிச் செய்வது ரசிகர்களின் ரசனையை மேலும் சீர்குலைக்குமே தவிர, உயர்த்தாது. இந்தப் படத்தின் மிருகத்தனமான முதல் பாதிக்கு அவ்வப்போது எழுகிற கைத்தட்டலும் விசிலுமே இதற்கு சாட்சி!

திரைப்படம் எடுப்போர், தேவதூதர்களாக மாறி உபதேசம் செய்ய வேண்டும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை. ஆனால், குறைந்தபட்சம் மக்களை மிருகங்களாக்காமலிருக்க வேண்டும். சமுதாயத்திடமிருந்து மிக அதிக லாபம் சம்பாதிக்கும் துறை, அதனை மிக அதிகமாகச் சீரழிப்பது என்ன நியாயம்!

ஒரு நல்ல கதைக் களத்தை எவ்வளவு மோசமாகக் கொடுக்க முடியும் என்பதற்கு உதாரணம்தான் மிருகம். இந்தப் படத்துக்காக நாயகி அறை வாங்கியுள்ளார்; இயக்குநர் ஓராண்டு தடை பெற்றுள்ளார்; ஏதோ காட்சி நீக்கப்பட்டதற்கு தயாரிப்பாளர் உண்ணாவிரதம் இருந்துள்ளார். அத்தனையும் வீண்!

– ஆரணி யுவராஜ்

எஸ்.பி.முத்துராமன்



மீண்டும் கமல் - ரஜினி!


'ஆடு புலி ஆட்டம்' படத்தின் கதை மகேந்திரனுடையது. எனக்குக் கிடைத்த மிகச் சிறந்த படைப்பாளிகளில் மகேந்திரனும் ஒருவர். படத்தில் கமலஹாசனுக்கு மூன்று நண்பர்கள். வேலை எதுவும் கிடையாது. சின்னச் சின்னக் குற்றங்களில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிப்பதுதான் அவர்களுடைய தொழில். 'இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படி சின்னச் சின்னக் குற்றங்கள் செய்துகொண்டிருப்பது? பெரிசாக ஏதாவது செய்து, நிறைய பணம் சம்பாதித்து, வசதியாக வாழ வேண்டும்' என்று நினைக்கிறார்கள். ஆனால் கமல் ஒரு கட்டத்தில், 'போதும் இந்த மாதிரியான வாழ்க்கை. இனிமேல் திருந்தி ஒழுங்காக வாழலாம்' என்று முடிவு செய்வார். மற்ற நண்பர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதன் காரணமாக கமலுக்கும், மற்ற மூவருக்கும் இடையில் மோதல் ஏற்படும். வளர்ந்து வரும் வில்லனாக இருந்த ரஜினியை அந்த மூவரில் ஒருவராக நடிக்க வைத்தோம்.

'புவனா ஒரு கேள்விக்குறி'யில் ரஜினிக்கு பாசிடிவ் ரோல் கொடுத்திருந்தாலும், 'ஆடு புலி ஆட்டம்' படத்தில் அவரை வில்லனாகவே நாங்கள் நடிக்க வைத்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கமலுடன் மோதுவதற்கு ஒரு புதிய, பவர்ஃபுல் வில்லன் தேவைப்பட்டார். ரஜினியின் ஆக்ஷன் அந்த கேரக்டரில் பளிச்சிடும் என்று நாங்கள் நினைத்தோம்; நினைப்பு நிஜமானது.



அந்தப் படத்தின் உச்சகட்ட காட்சிகளை, சென்னையின் உயரமான கட்டடங்களில் படம் பிடித்தோம். கமல் மிகவும் உயரமான ஒரு கட்டடத்திலிருந்து, இன்னொரு கட்டடத்துக்குத்தாவி குதிக்க வேண்டிய காட்சி. அவரிடம், 'அந்த பில்டிங்கிலிருந்து நீங்கள் ஓடி வந்தால் போதும். உயரமான கட்டடங்களில் தாவிக் குதிப்பது மிகவும் ஆபத்தானது. எனவே, நீங்கள் குதிப்பது போல ஒரு க்ளோஸ் அப் எடுத்துக்கொள்கிறேன். உங்களுக்குப் பதிலாக டூப் போட்டு, குதிக்க வைத்துக் கொள்கிறேன்' என்று முதலிலேயே கமலிடம் சொல்லி எச்சரித்துவிட்டேன்.

நான் 'ஸ்டார்ட்' சொன்னதும் கேமரா ஓட ஆரம்பித்தது. கமலும் பாய்ந்து ஓடிவர



அங்கிருந்து, இங்கே எந்தவிதமான ஆபத்துமில்லாமல் நிச்சயம் குதிக்க முடியும் என்ற தைரியத்தில்தான் இப் படிச் செய்தேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

ரஜினியும் அப்படிப் பாய்வது போல ஒரு காட்சி. அப்போது அவர் தவறிக் கீழே விழுந்து, கம்பி கண்ணில் குத்திவிடுவதுபோல் எடுக்கவிருந்தோம். அவரது தவறு களுக்குக் கிடைக்கிற தண்டனை அது. அந்தக் காட்சியில் ரஜினி, நாங்கள் சொன்னபடி நடித்துக் கொடுக்க, க்ளைமேக்ஸ் மிகவும் ஆக்‌ஷன் நிறைந்த ஒன்றாக அமைந்து, அனைவராலும் பாராட்டப்பட்டது. 'புவனா ஒரு கேள்விக் குறி', 'ஆடு புலி ஆட்டம்' இரண்டு படங் களும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் எடுத்து முடிக்கப்பட்டு, ஒரு மாதத்துக்கும் குறைந்த இடைவெளியில் ரிலீஸ் ஆயின. முதலில் வெளியான 'புவனா ஒரு கேள்விக் குறி'யில், ரஜினியின் வித்தியாச மான நடிப்பைப் பார்த்து ரசித்த பலரும், அதனை அடுத்து வெளியான 'ஆடு புலி ஆட்டம்' படத்தில் ரஜினியை வில்லனா கப் பார்த்துவிட்டு, 'ஏன் இப்படிச் செய்தீர் கள்?' என்று கேட்டார்கள். நான் அவர்கள் அனைவருக்கும், 'ஒரு நடிகன் எல்லாவித மான கேரக்டர்களையும் ஏற்று, தன்னு டைய திறமையை வெளிப்படுத்த

ஆரம்பித்தார். அந்தக் கட்ட டத்தின் நுனிவரை வந்தவர், அப் படியே ஒரே தாவாகத் தாவி, அடுத்த கட்டடத்தில் பாய்ந்து விட்டார். அந்தக் காட்சியைக் கண்ட என்னுடைய இதயம் ஒரு சில வினாடிகள் அப்படியே உறைந்து போனது. ''என்ன கமல், உங்களைத்தான் ரிஸ்க் எடுக்க வேண்டாம். நான் டூப் போட்டுக்கொள்கிறேன் என்று சொன் னேனே! எதற்காக இப்படித் திடீரெனப் பாய்ந்து குதித்தீர்கள்?'' என்று உரிமை யுடன் கோபித்துக்கொண்டேன். கமல், ''சார்! நான் இங்கே இருந்து போகிற போதே, கேமரா கோணத்தில் எப்படித் தாவ வேண்டும், எந்த இடத்தில் வந்து குதிக்க வேண்டும் என்றெல்லாம் பார்த் துக்கொண்டுதான் போனேன். என்னால்

வேண்டும். ரஜினியின் திறமை, இந்த இரண்டு படங்களிலும் மாறுபட்ட பாத்திரங்கள் மூலம் வெளிப்பட்டிருப் பதைப் பாருங்கள்' என்று விளக்கம் அளித்தேன்.

'ஆடு புலி ஆட்டம்' வர்த்தக ரீதியில் நல்ல வெற்றி பெற்ற படம். தயாரிப் பாளரான சாந்தி நாராயணன், படம் வெளியாகி சில வருடங்கள் வரை, என்னைப் பார்க்கிற போதெல்லாம், 'ஆடு புலி ஆட்டம் படம் எடுத்ததில் எனக்கு ரொம்பச் சந்தோஷம். அந்தப் படம் எங்கேயாவது மாறி, மாறி ஓடிக் கொண்டி ருக்கிறது. படத்தின் விநியோகஸ்தரான ஏவி.எம். லிமிடெட் நிறுவனம் கரெக் டாக எனக்குரிய பணத்தை அனுப்பி வைத்து விடுகிறார்கள்' என்று சொல்வார். தயாரிப்பாளர் - விநியோகஸ்தர் உறவு அப்படி இருக்க வேண்டும்.

கமல் - ரஜினி என்ற இரண்டு திறமை சாலிகள் இணைந்து நடித்த ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்பது பெருமைக்குரிய விஷயம். அதற் குப் பிறகு கே.பாலசந்தர், ஸ்ரீதர் ஆகிய இரு மாபெரும் இயக்குநர்களின் இயக் கத்தில் அவர்கள் நடித்தார்கள். அவர்கள் இருவருக்கும் இடையிலான நட்பு மிக நெருக்கமாக இருந்தாலும்கூட, அதன் பின் இருவரும் சேர்ந்து நடித்துப் படம் வெளியாகவில்லை. ரஜினியும், கமலும் அகில உலகப் புகழ் பெற்று விளங்கும் இன்றைய கால கட்டத்தில், மீண்டும் இணைந்து நடித்தால், அது உண்மையி லேயே உலகத் தரமான படமாக அமை யும்.

இருவரது ரசிகர்கள் மத்தியிலும் மிகுந்த வரவேற்பினை அந்தப் படம் பெறும் என்பதிலும் சந்தேகமில்லை. நான் இப்படிச் சொல்வதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அந்தக் காலத்தில் சினிமா ரசிகர்கள் மத்தியில் விரோத மனப்பான்மை நிலவியது. ஒரு நடிகரது ரசிகர்கள் தங்கள் ஹீரோவின் படம் வெளியானால், தோரணம் கட்டிக் கொண் டாடுவதும், வேறு ஹீரோவின் படம் வெளியாகும்போது போஸ்டரில் சாணி அடிப்பதுமாக இருந்த காலகட்டம் அது. ஆனால், இன்று சினிமா ரசிகர்கள் விரோ தம் பாராட்டாமல், தங்கள் ஹீரோக்களின் படங்கள் வெளியாகிறபோது விமரிசை யாகக் கொண்டாடுவதுடன், ஆக்கபூர்வ மாக பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக, கமலும் ரஜினியும் தங்கள் ரசிகர் மன்றங்களை நற்பணி மன்றங்களாகவே மாற்றிவிட் டார்கள். அது பாராட்ட வேண்டிய பணி.

ஹாங்காங்கில் நான் சந்தித்த ரஜினி என்ற உழைப்பாளியைப் பற்றி அடுத்த வாரம் சொல்கிறேன்.

(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம்: **எஸ்.சந்திர மெளலி**



பிளைட்!

கேமரா கதை 2

பாலுசத்யா

அன்றைக்குக் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. டாக்டர் இன்னும் வந்திருக்கவில்லை. வழக்க மாக அவர் ஏழு மணிக்குத்தான் வரு வார். முதல் ஆளாகப் போய்விட்டால், சீக்கிரம் பார்த்துவிடலாம் என்று வந்தி ருந்தோம்.

கிளினிக்கில் உட்காருவதற்குக்கூட இடமில்லை. அது ஒரு சிறிய கிளினிக். ஒரு கடையை கிளினிக்காக ஆக்கியிருந் தார்கள். ஷட்டருடன் கூடிய, ஜன்னல் கள் இல்லாத கடை. முன் பாதி நோயாளிகள் அமர்வதற்கு. நடுவே கதவு வைத்த ஒரு மரத்தடுப்பு. அதற்கு அந்தப் பக்கம் இருக்கும் பகுதியில், டாக்டர் நோயாளிகளைப் பரிசோதிப்பார். நோயாளிகள் அமர்வதற்காக இரண்டு மர பெஞ்சுகளும், மூன்று நாற்காலி களும் போடப்பட்டிருந்தன. மொத்தம் பதினோருபேர் அமரலாம். மற்றவர்கள் ரோட்டில்தான் நிற்க வேண்டும். நாங்கள் ரோட்டைப் பார்த்தபடி நின்றிருந்தோம்.

அந்த கிளினிக்கில் டோக்கன் சிஸ் டம் கிடையாது. அங்கே ஒரு வயதான அம்மாள் இருந்தார். ரிசப்ஷனிஸ்ட், கிளினிக்கைக் கூட்டிப் பெருக்குபவர், பியூன், வாட்ச்மேன்... எல்லாம் அங்கே அவர்தான்.

''அம்மா! நாங்க எத்தினியாவது ஆளு?''

''தோ! இந்தப் பாப்பாவுக்கு அடுத்து நீங்கதான்.'' ஒரு பன்னிரண்டு வயசுச் சிறுமியைச் சுட்டிக் காட்டினார் அந்த அம்மாள்.

வினோதினி, சுசீலாவின் பிடியி லிருந்து நழுவி, கீழே இறங்க முயற்சி செய்துகொண்டிருந்தாள். சுசீலா, அவளை மறுபடியும் இடுப்பில் ஏற்ற, அழுதாள். நான் குழந்தையை வாங்கிக்கொண்டேன். இப் போது வினோதினி யின் உடம்பில் சூடு தெரியவில்லை. லேசாக வியர்த் திருந்தது.

தெருவில் மணி யடித்தபடி போன ஒரு தள்ளு வண்டியைக் காட்டினாள். சிறிய பெட்ரோமாக்ஸ் விளக்கு வண்டி யின் நடுவே வைக்கப்பட்டி ருக்க, சுற்றிலும் அலு மினியத் தட்டுகளில் மிட்டாய்கள். அவல் உருண்டை, ரவா லட்டு, பல் வலிக்கக் கடித்துச் சுவைக் கும் கமர்கட். இந்தக் காலத்திலும் இவற்றை வாங்கிச் சாப்பிடக் குழந்தை கள் இருக்கிறார்கள்.

''பாப்பாவுக்கு உடம்பு சரியாகட்டும். வாங்கித் தரேன். என்ன?''

வினோதினி சிணுங்கினாள். அப் போதுதான் அவன் வந்தான். கோட்டும் டையும் அணிந்திருந்தான். கால்களில் பாலீஷ் போட்ட ஷூ பளபளத்தது. கையில் ஒரு சூட்கேஸ். 'விற்பனைப் பிரதிநிதி' என்பது அவன் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. டாக்டருக்காகக் காத்திருந்தவர்கள் அவனைப் பார்த்த பார்வையில் விரோதம் தெரிந்தது.

அவன் பளிச்சென்றிருந்தான். வினோதினியைப் பார்த்து 'ஹாய்' சொன்னான். வினோதினி மிட்டாய் கிடைக்காத கோபத்தில் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

''என்ன சார்! குழந்தைக்கு ஜுரமா?''

''ஆமா.''

''குளிர் காலம்ல... அப்படித்தான் இருக்கும்.''



அவன் ஒவ்வொரு நோயாளியாக நோட்டம்விட ஆரம்பித்தான். எனக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. என்ன, டி.ஃபார்ம் படிப்புப் படித்திருப்பானா? ஏதோ ஒரு மருந்து கம்பெனி, அவனுக்குச் சில ஆயிரங்களைச் சம்பளமாகக் கொடுத்துத் தெருத் தெருவாகச் சுற்ற விட்டிருக்கிறது.

எப்போதும் ஒட்ட வைத்த மாதிரி ஒரு சிரிப்பு நிரந்தரமாக இருக்க வேண்டும். கொளுத்துகிற வெயிலாக இருந்தாலும், கோட், ஷூ, டை அணிய வேண்டும். தினமும் ஷேவ் செய்து, கன்னங்களை வழுவழுவென்று வைத்திருக்க வேண்டும். இப்படியெல்லாம் கட்டளை போட்டிருக்கும் அவனுடைய நிறுவனம்.

எல்லா அபார்ட்மெண்ட்களிலும், விற்பனைப் பிரதிநிதிகளுக்கென்றே போர்டுகளைக் கட்டித் தொங்க விட்டிருக்கிறார்கள். 'வெளி வாகனங்களை உள்ளே நிறுத்த அனுமதி இல்லை', 'நாய்கள் ஜாக்கிரதை!' போர்டுகளுக்கு அடுத்தபடியாக, 'விற்பனைப் பிரதிநிதிகள், வியாபாரிகள் உள்ளே வரக்கூடாது!' போர்டுகள் தொங்கிக்கொண்டு இருக்கின்றன. வீடுகளில் இப்படி. அலுவலகங்களுக்குப் போனால், வாசலில் வைத்தே வாட்ச்மேன் திருப்பி அனுப்பிவிடுகிறார். விற்பனைப் பிரதிநிதிகள் எங்கேதான் போவார்கள்?

இந்த மருந்து கம்பெனி பிரதிநிதி எவ்வளவோ பரவாயில்லை. இன்னமும் கிளினிக்குகள் இவன் போன்ற ஆட்களை உள்ளே நுழைய அனுமதித்து வருகின்றன.

ஒரு நாள், ஒரு மதியப் பொழுதில் பெண்கள் கூட்டமொன்றைப் பார்த்தேன். எல்லோரும் விதவிதமான வர்ணங்களில் புடைவை கட்டியிருந்தாலும், யூனிஃபார்மாக ஒரே நிறத்தில் தொப்பி அணிந்திருந்தார்கள். ஒவ்வொரு பெண்ணின் தோளிலும் நீல நிறத்தில் பேக் ஒன்று

தொங்கிக் கொண்டிருந்தது.

''சார்! ஊதுபத்தி, சோப் வேணுமா சார்? கம்பெனி விளம்பரத்துக்காக கன்சஷன்ல தர்றோம்.'' இப்படிக் கேட்ட பெண்ணுக்கு நாற்பது வயது இருக்கும். முகத்தில் பூசியிருந்த மஞ்சளையும் மீறிக் கொண்டு, துயர ரேகைகள் தெரிந்தன.

''வேணாங்க.''

நான் அப்படிச் சொன்னதில் அந்தப் பெண் கொஞ்சமும் ஏமாற்றம் அடைந்த தாகத் தெரியவில்லை. என்னிடமிருந்து அந்தப் பதிலைத்தான் எதிர்பார்த்திருப் பாள் என்று தோன்றியது. அவள் சிரித்த படி நகர்ந்தாள். நடுரோட்டில், சாக்பீ ஸால் அம்புக்குறி ஒன்றை வரைந்தாள்.

''இது எதுக்குங்க?''

''பின்னால எங்களை மாதிரியே குரூப் ஒண்ணு வருது. அவங்களுக்கு வழி தெரியணும் இல்ல? அதுக்குத் தான்.''

விற்பனைப் பிரதிநிதிகளின் உலகம் பிரத்யேகமானது. அவர்களுக்கு வரு டாந்திர, மாதாந்திர, வாராந்திர, தினசரி டார்கெட்டுகள் உண்டு. அதை முடிக்க வில்லை என்றால் விற்பனை மேலாளர் சவட்டி எடுத்துவிடுவார். ஒவ்வொரு பிரதிநிதியும், பொருட்களை வாங்குகிற புண்ணியவான்களைத் தேடி ஓடிய படியே இருக்கிறார்கள். விற்பனை செய்வதற்குச் சாமர்த்தியம் வேண்டும். தந்திரம் கற்றிருக்க வேண்டும். இருப்பதிலேயே கடினமான வேலை என்றாலும் இதற்கும் ஆட்கள் இருக்கத் தான் செய்கிறார்கள்.

டாக்டர் வந்தார். காரிலி ருந்து இறங்கியதுமே இவ னைப் பார்த்துச் சிரித்தார். உள்ளே போய்விட்டார். ஐந்து நிமிடங்கள் கழித்து அழைப்பு மணி ஒலித்தது. முதல் ஆள், தன் சால்வை யைச் சரி செய்துகொண்டு, எழுந்து உள்ளே போனார். அவன் இரண்டு அடிகள் எடுத்து வைத்து முன்னால் வந்தான்.

''அடுத்தது யாருங்க?'' என்று கேட் டான்.

''நான்தான், ஏன்?'' என்று கேட்டாள் ஒரு குண்டுப் பெண்மணி.

''இல்ல... அவசரமாப் போகணும். ஒரு அஞ்சு நிமிஷம்... டாக்டரைப் பாத் துட்டுப் போயிடறேனே...!''

''இப்பத்தானே வந்தீங்க? உடம்பு முடியாதவங்களே காத்துக்கிட்டு இருக் கோம். உங்களுக்கு என்ன? கொஞ்சம் வெயிட் பண்ணுங்க.''

அவன் என்னைப் பார்த்துச் சிரித் தான். அந்தச் சிரிப்பில் கொஞ்சமும் ஏமாற்றம் தெரியவில்லை. இன்னும் எத் தனை இடங்களுக்கு அவன் போக வேண்டுமோ!

எனக்கு அப்பாவின் நினைவு வந் தது. அப்போது நாங்கள், கும்பகோணத் துக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் இருந்தோம். நான் கிராமத்துப் பள்ளியில் ஐந்தாவது படித்துக்கொண்டிருந்தேன். அப்பா, வயல் வேலை இல்லாத கோடை காலங்களில், என்னை மூங்கில் தோப்புக்கு அழைத்துப் போவார். ஒல்லி

ஹாய்!
ஐ'யம் பிரசன்னா.
நான் ஹீரோவா நடிக்குற 'சாது மிரண்டால்' படத்து ஸ்டில்தான் இந்த வார கேமரா கதைக்கான படம். கம்புக் கட்டோடு அழகா இருக்கேனா! இந்தப் படத்துக்குச் சிறுகதை எழுதுறது சவாலான விஷயம். ஆனா எழுத்தாளர் பின்னி மேய்ஞ்சுட்டார். சேல்ஸ் ரெப் பத்தி உங்களுக்கு உள்ள எண்ணம் இந்தக் கதை படிச்சப்புறம் நிச்சயம் மாறும். 'சாது மிரண்டால்' படத்துல எனக்கு ஜோடியா நடிக்கற காவ்யா மாதவன், கதை கேட்டுட்டு ரொம்ப ஃபீலிங்காய்ட்டாங்க!

யான மூங்கில் குச்சிகளாகப் பார்த்துப் பார்த்து வெட்டுவார். பதினைந்து, இருபது நீளமான குச்சிகளை வெட்டி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வருவார். தேங்காய் நார்களைப் பிரித்தெடுத்து, சமமாக வெட்டி, கொத்துக் கொத்தாக மூங்கில் குச்சிகளில் வைத்துக் கட்டு வார். ஒட்டடைக் கம்புகள் தயார்!

அப்பா ஒட்டடைக் கம்புகளை விற்கப் போகும்போது நானும் கூடப் போவேன். பக்கத்து ஊர்களில், கிராமங்களில் தெருத் தெருவாகச் சுற்றி வருவார்.

''ஒட்ரைக் கொம்பு! ஒட்ரைக் கொம்பு!''

நானும் அப்பாவோடு சேர்ந்து கொண்டு, கீச்சுக் குரலில் உற்சாகமாகக் கத்துவேன். அப்பா தன் ஒரு கையால், என்னுடைய கையைப் பற்றியிருப்பார். அவருடைய மற்றொரு கை ஒட்டடைக் கொம்புக் கட்டைப் பிடித்திருக்கும்.

அப்பா கொண்டு போகும் ஒட்டடைக் கொம்புகள் பெரும்பாலும் பாப நாசத்திலேயே விற்றுப் போகும். அன்றைக்கு விற்கவில்லை. இரண்டு மூன்று பேர் ''பிளாஸ்டிக் குச்சி இல்லியா?'' என்று கேட்டுவிட்டுப் போனார்கள். பகல் பன்னிரண்டு மணி வரைக்கும் ஒரு குச்சியைக்கூட விற்க முடியவில்லை. அப்பா என்னை இன்னொரு கிராமத் துக்கு நடத்தியே அழைத்துக்கொண்டு போனார்.

ஊர் எல்லையைக்கூடத் தாண்டியிருக்க மாட்டோம். கூட்டமாக வந்தன அந்த நாய்கள். மொத்தம் ஐந்து நாய்கள். பற்களைக் காட்டி, முறைத்தபடி குரைத்தன. அப்பா என்னை இறுகப் பிடித்துக்கொண்டார். ''சூ! சூ!'' என்று அதட்டுப் போட்டார். வயலில் வேலை பார்த்துக்கொண்டிருந்த இரண்டு பேர் ஓடி வந்து நாய்களை விரட்டினார்கள். நாங்கள் அந்த கிராமத் துக்குள் நுழையாமலேயே ஊர் திரும்பினோம்.



நான் அவனைப் பார்த்தேன். புன்னகை மாறாமல் அடுத்த நோயாளியைப் பார்த்துக்கொண்டிருந்தான். யாரும் அவனை உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. என் முறை வந்தபோது அவனை அனுமதிக்கலாமா என்று பார்த்தேன். எனக்குப் பின்னால் நிறைய பேர் நின்றிருந்தார்கள். என்ன சொல்வார்களோ என்று பயமாக இருந்தது.

வினோதினியைப் பரிசோதித்த டாக்டர் 'பயமில்லை' என்றார். ஊசிகூட வேண்டாம் என்று சொல்லிவிட்டு, மாத்திரை மட்டும் எழுதிக் கொடுத்தார். நான் விடைபெறும்போது, தயக்கத்துடன் சொன்னேன்.

''சார்! வெளியில் ஒரு மெடிக்கல் ரெப் ரொம்ப நேரமா காத்துக்கிட்டு இருக்கார்.''

''ரெப்புதானே! காத்திருக்கட்டும். நீங்க அடுத்த பேஷண்ட்டை வரச் சொல்லுங்க'' என்றார், உணர்ச்சியற்ற குரலில் டாக்டர்.

நான் கதவைத் திறந்து வெளியே வந்தேன். அடுத்து உள்ளே நுழைய விருந்த பெண்ணை கையால் அமர்த்தி விட்டு, அந்த விற்பனைப் பிரதிநிதியை அழைத்தேன்.

''சார்! டாக்டர் உங்களைக் கூப்பிடுறார்'' என்றேன்.

''ரொம்ப தேங்க்ஸ் சார்!'' அவன் மலர்ந்த முகத்தோடு டாக்டர் அறையின் கதவைத் திறந்தான். அவன் தலையில் ஒட்டடைக் கம்புகள் இருப்பது போலவே எனக்குத் தோன்றியது. ●

சினிமா ஸ்பெஷல்

பழனியப்பா கல்லூரி!

அனைத்து கரம்மசாலாக்களும் கலந்துகட்டிக் கிடக்கும் கல்லூரியைக் கதைக் களனாகக் கொண்ட மற்றுமொரு படம். கதையிலோ, கதை சொன்ன விதத்திலோ அதே பழைய ஸ்டைல். இளமை ததும்பச் சொல்லியிருக்கிறார்கள், அவ்வளவுதான்.

இறந்துபோன அப்பாவின் அரசாங்க வேலையை வாங்கிவிட வேண்டும் என்ற முனைப்போடு நல்லபிள்ளையாக கல்லூரிக்குள் காலடி வைக்கும் ஹீரோ, அங்கு நடக்கும் அடிதடியாலும், லோக்கல் ரவுடியின் தலையீட்டாலும் பாதிக்கப்படுகிறார். பிறகு அந்த ரவுடியிசத்தை முறியடித்து எப்படிப் படிப்பை முடிக்கிறார்; அப்பாவின் வேலையை வாங்குகிறார் என்பதுதான் மீதிக் கதை.

ஹீரோ புதுமுகம். அப்பாவியாகக் கல்லூரிக்குள் நுழையும்போதும், தம் புத்தகத்தை எரித்த ரவுடியை எதிர்த்துச் சிலிர்த்து எழும்போதும் 'அட' போட வைக்கிறார். ஆனால், எதற்கெடுத்தாலும் ஒரே முகபாவத்தோடு வளைய வருவதுதான் சகிக்கவில்லை. இட்லி வியாபாரம் செய்து, மகனைப் படிக்க வைக்கும் ஏழைத் தாயாக ரோஹிணி. பாசத்தையும் கோபத்தையும் சரிவிகிதத்தில் தாய்மை குழைத்துக் கொடுத்திருக்கிறார். ஹீரோவைச் சுற்றிச் சுற்றி வளைய வரும் மல்லி கேரக்டர் சரியான இளமை ராக்கெட். யாருங்க அந்த வில்லன் மாணவர்? தன்னுடைய தெனாவட்டு நடிப்பால் ஹீரோவைவிட அதிகம் ஸ்கோர் பண்ணுகிறார். ஹீரோயின் சும்மா ஊறுகாய் போல அவ்வப்போது வருகிறார்; போகிறார். கல்லூரி வளாகத்துக்குள் நடக்கும் அத்தனை ரகளைகளையும் ரசிக்கும்படிச் சொல்லியிருக்கிறார் இயக்குநர். குறிப்பாக சரக்கு கேரக்டர் படுசுவாரஸ்யம். காமெடி என்ற பெயரில் கஞ்சா கருப்பு கடுப்பேற்றுகிறார்.

கிருஷ்ணா டாவின்ஸியின் வசனங்கள் கல்லூரி வளாகத்துக்குள் நம்மைக் குடியிருக்க வைக்கின்றன. ஷகிலா தோன்றும் காட்சிகளைத் தவிர்த்திருக்கலாம். ஏற்கெனவே பார்த்த படங்களைப் போன்ற காட்சியமைப்பு சுத்த போர்! 'மீசை முளைத்த சூரியன்' பாடல் மட்டும் ஆறுதல். கண்ணுக்குக் கவிதையாக ஒளிப்பதிவு. இளமை ததும்பும் கதையைத் தேர்ந்தெடுத்த இயக்குநர், திரைக்கதையில் கவனம் செலுத்தியிருந்தால் பழனியப்பா கல்லூரியில் பசுமை பூத்திருக்கும்!



– கமலி

• கலகம் பிறந்தது எனக்காக - 2

அத்வானி மீதெழுந்த சந்தேகம்!

அழகு ததும்பும் அலங்கார வளைவுகள். பளபளவென பாலீஷ் செய்யப்பட்ட தரை தளம். உள்ளே நுழைந்தால் தென்றல் தொட்டுப் போவது போன்ற ஜிலீர் உணர்வு. கொஞ்சம் எட்டிப் பார்த்தால், கண்ணுக்குக் குளிர்ச்சியாக பச்சைப் பசேல் பூங்கா. பாகிஸ்தானில் இருக்கும் முகமது அலி ஜின்னாவின் இந்த நினைவகம்தான் அத்வானியை பலத்த சர்ச்சைக்குள்ளாக்கியது.

ஜூன் 4, 2005. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அத்வானி, பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் சென்றிருந்தார். முக்கியமான இடங்களுக்குச் சென்றவர், ஜின்னாவின் நினைவிடத்துக்கும் ஒரு நடை போய் விட்டு வர, அரை மணி நேரம் ஒதுக்கிக் கொண்டார்.

ஆனால், அந்த இடம் தந்த பிரமிப்பு அவரை அங்கேயே சுமார் இரண்டு மணி நேரத்துக்குக் கட்டிப்போட்டுவிட்டது. ஒவ்வொரு அங்குலத்தைப் பற்றியும் ஆர்வத்துடன் விசாரித்தார். ஜின்னா அணிந்த தொப்பி மற்றும் ஆடைகள் பற்றி அங்கிருந்தவர்களிடம் கேட்டார். அங்கிருக்கும் குறிப்புகளைப் படித்தார். நேரம் போனதே தெரியவில்லை. இறுதியாக பார்வையாளர் குறிப்பேடு கண்ணில்பட, விதி அங்குதான் தன்னுடைய கடமையை ஆற்றியது.


'வரலாற்றில் பலர் தம்முடைய முத்திரையை அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்துள்ளனர். ஆனால், வெகு சிலரே புதிய வரலாற்றைப் படைக்கின்றனர். அப்படிப் பட்ட உயர்ந்த மனிதர்களுள் ஒருவர் முகமது அலி ஜின்னா. ஆகஸ்ட் 11, 1947 அன்று பாகிஸ்தான் அரசியலமைப்புச் சட்ட சபையில் ஆற்றிய உரையில், 'ஓர் அரசு தன்னுடைய குடிமக்களிடையே மத அடிப்படையில் வேறுபாடு காட்டக்கூடாது' என்று உரைத்த அந்த மாமனிதருக்கு என்னுடைய மரியாதைகள்.'

மனத்தில் பட்டதை உணர்ச்சி வேகத்துக்கு அணை போடாமல் அத்வானி எழுதிவிட, தம்முடைய பதவியையே அது காவு கேட்கும் என்று கொஞ்சமும் அவர் நினைத்திருக்கவில்லை. விஷயம் இந்தியாவுக்குள் கசியவில்லை, கிட்டத்தட்ட காற்றைவிட வேகமாகக் கடத்தப் பட்டது; கட்சிக்குள் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தியது.

ஜின்னாவை எப்படிச் சொல்லலாம்? அதுவும் பாகிஸ்தானில் வைத்து? அதுவும் மாமனிதர், மதச்சார்பற்றவர் என்று? அதுவும் அத்வானி? எப்படிப் பேசலாம் என்று வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிக்கத் தொடங்கினர் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள்.

'ஜின்னா ஒரு துரோகி, ஆகவே அவரைப் புகழ்பவர்களும் துரோகிகளே' என்றார் வி.ஹெச்.பி.யின் பிரவீன் தொகாடியா. 'இந்துக்களை ஏமாற்றிய அத்வானி நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்' என்றார் அசோக் சிங்கால். தவிரவும், முரளி மனோகர் ஜோஷி, மதன்லால் குரானா உள்ளிட்ட சக தலைவர்களும் அத்வானியை வறுத்தெடுக்கத் தொடங்கினர். புகைச்சல் அதிகமாகிக்கொண்டே போனது.

'இப்படி என்னை வார்த்தைகளால் வதைப்பதற்குப் பதிலாக பதவியை ராஜினாமா செய்துவிடுகிறேன்' என்றார் அத்வானி. கிட்டத்தட்ட சங்கப் பரிவாரங்களும் அதையே விரும்பின. ஆனால், அதைத் தடுக்கும் முயற்சியில் அத்வானிக்கு நெருக்கமான தலைவர்கள் ஈடுபட்டதை அடுத்து, 'பா.ஜ.க.வின் வெள்ளிவிழாவின் போது ராஜினாமா செய்கிறார் அத்வானி' என்கிற அறிவிப்போடு அந்தச் சர்ச்சை



உடம்பு எப்படி இருக்கு?
''என்ன சார், உடம்பு எப்படி இருக்கு?''
''ரிலீசாகும்போதும் பார்க்கல, போன வாரம் டி.வி.யில போட்டப்பவும் நான் அந்தப் படத்தைப் பார்க்கல சார்!''
- பெ. கலாசாமி
''படத்துக்கு ச.த.உ.ம.ன்னு சர்ட்டிஃபிகேட் தந்திருக்கீங்களே, என்ன அர்த்தம்?''
''சகிப்புத்தன்மை உள்ளவர்களுக்கு மட்டும்னு அர்த்தம்!''
- உ.ராஜாஜி
''அவர் ரொம்ப சினிமாப் பைத்தியம்னு எப்படிச் சொல்ற?''
'' 'பள்ளிக்கூடத்துக்கும் போயிட்டு வந்துட்டேன். கல்லூரியும் பாத்தாச்சு. மறுபடியும் எவனோ ஒருவன் என்னை கெட்டவன்னு சொன்னா பொல்லாதவனாயிடுவான் இந்த பில்லா'ன்னு சொல்றாரே.''
- பா. ராஜா
''சினிமா தியேட்டர் முதலாளியா கரண் நடிச்சா என்ன டைட்டில் வைப்பாரு!''
''கருப்பசாமி கொட்டகைக்காரர்.''
- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்

முடிவுக்கு வந்தாலும், ஜின்னா விவகாரம் அத்வானியை சுலபத்தில் விடுவதாயில்லை. உடனடியாக அடுத்த இம்சை ஆரம்பித்தது.

'ஜின்னாவைக் கொலை செய்ய சதி செய்ததாக அத்வானி உள்ளிட்ட பதினேழு பேர்மீது செப்டம்பர் 10, 1947 அன்று கராச்சியில் உள்ள ஜம்ஷெட் குவார்ட்டர்ஸ் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது' என்கிற செய்தி காட்டுத் தீபோல் பரவியது. லாலு பிரசாத் யாதவ் உள்ளிட்ட சிலர், 'இந்த விவகாரத்தில் அத்வானி தன்னை நிரபராதி என்று நிரூபித்துவிட்டு, ஜின்னாவைப் பற்றிப் பேசட்டும்' என்றனர். ஆனால், 'அப்படி ஒரு வழக்கு இருப்பதே தங்களுக்குத் தெரியாது'



'இப்படி என்னை வார்த்தைகளால் வதைப்பதற்குப் பதிலாக பதவியை ராஜினாமா செய்துவிடுகிறேன்' என்றார் அத்வானி.

ஆர். முத்துக்குமார்

என்று மறுத்துவிட்டனர் பாகிஸ்தான் அதிகாரிகள்.

'எது எப்படியோ... என்னுடைய இந்த பாகிஸ்தான் பிரவேசம் இரு நாடுகளுக்கிடையேயான நல்லுறவில் முக்கியமான மைல்கல்' என்று கூறிய அத்வானிக்கும் கட்சிக்கும் இடையேயான உறவில் பலத்த சேதம் ஏற்பட்டது என்பது மட்டும் உண்மை.

கட்சியின் பிரதான அதிகார மையமாக விளங்கிக்கொண்டிருக்கும் அத்வானி, சமீபத்தில்கூட தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்து சர்ச்சையை தொடர்ந்து மெயின்டெயின் செய்து வருகிறார். 'நாடாளுமன்ற ஜனநாயகத்தின்படி தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர்தான் வருகின்ற தேர்தலில் பிரதமர் பதவிக்கான வேட்பாளர்' என்று அத்வானி தடாலடியாகக் கூறியவுடன், 'கட்சியை அவர் மதிக்கவில்லை, விதிமுறைகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார்' என்று ஆட்சேபங்கள் எழுந்தன.

'குஜராத்தில் இந்துத்வா சக்தியாக வளர்ந்துவிட்ட நரேந்திரமோடியால் தாம் புறக்கணிக்கப்பட்டுவிடுவோமோ என்கிற அச்சத்தில்தான் அத்வானி தம்மை பிரதமர் வேட்பாளராக அவசர அவசரமாக முன்னிறுத்திக்கொண்டார்' என்று பலர் சந்தேகம் எழுப்பினர். அதை ஊர்ஜிதம் செய்வதுபோல், குஜராத் தேர்தலுக்கு முந்தைய நாள், அத்வானி அதிகாரபூர்வ பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதுவும்கூட கட்சிக்குள் புகைச்சலைக் கிளப்பியிருக்கிறது. அத்வானிக்கும் சர்ச்சைக்கும் அதிக தூரமில்லை என்பது அடிக்கடி நிரூபிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. தொடர்ந்து நிரூபணமாகும்.

(அடுத்த இதழில்... குஷ்பு)

11



மல்லியப்பூ நல்லாப் பூக்கணும்னா மருந்து மாயங்கள் அடிச்சு மாளாது. ஆளுக பெறக்குத கூலி, பஸ்கல வந்து போற செலவு எல்லாம் விவசாயிகளை அமுக்குது. கடைல என்னன்னா, ஒத்த ரூவா, ரெண்டு ரூவான்னு ஒண்ணு ரெண்டு எண்ணுதாங்க. பூக்களுக்குக் குறிப்பிட்ட வெலை வெக்கணும்னு மொனங்குதாங்க சம்சாரிங்க. அப்பைக்கு அப்பம் சின்னச் சின்ன வாக்குவாதங்கள் கிளம்பின.

பெருங்கோட்டங்கற ஊர்ல காந்தியடிகள்னு ஒரு சம்சாரி இருந்தாரு. அவுக அய்யா சுதந்திரப் போராட்டத்துக்காரர். அதனால மகனுக்கு இந்தப் பேரை விட்ருக்காரு. காந்தி நாயக்கரும் ஒரு பூக் கடைல பூப்போட்டுக்கிட்டு வந்தாரு. ஒரு தடவை அவரு கடைக்காரன்ட்ட ஆயிரம் ரூபா கடன் வாங்கிருக்காரு, பூப்போட்டு அதைக் கழிச்சிருதமின்னுட்டு. ஆனாப் பாருங்க, கடன் கழியுறதுக்குள்ளயும் அவரு மல்லிகைத் தோட்டத்தில் பூச்சி விழுந்திருச்சு. இலைகள்லாம் சுருண்டு மஞ்ச கலராயிருச்சு. பிறவு பூ எங்குட்டுக் கூடி பூக்கும்? சரின்ட்டு அவரும் செடிகளைக் கத்திரிச்சு விட்டு, நல்ல மொறைக்கா மம்பட்டிக் களை வெட்டி, ஆட்டுப்புழுக்கை களை உரமாப் போட்டு பண்டுவம் பாத்துக்கிட்டு வந்தாரு. பூப்பூத்ததும் கடனை நேர் செய்யலாமின்ட்டு அவரும் கடைப் பக்கமே போகலை.

கடைக்காரன் இவரைத் தேடி ஊருக்கே வந்து வையுதான். மக்கள்லாம் வேடிக்கை பாக்காங்க. கடைக்காரன் இவரோட காளை மாட்ல இடத்தங்காளையப் பிடிச்சுக்கிட்டுப் போயிட்டான். அப்பமும் காந்தியார் ஒண்ணும் பேசாம சும்னு இருந்தார்.

இந்தத் தாக்கல் மத்த சம்சாரிகளுக்குத் தெரிஞ்சதும் கொதிச்சுப் போயிட்டாங்க. பூ மார்க்கெட்டே ‘குசுகுசு’ன்னு பேசுது.

மல்லிகையே மல்லிகையே

செவக்காட்டுச் சித்திரங்கள்

வே. இராமசாமி

ரெண்டு மூணு நாள் சத்தமேயில்லாம கடை நடக்கு. சம்சாரிக அமைதியா இருக்காங்களேன்னு கடைக்காரன் மறுநாள் மாட்டைக் கொண்ணாந்து கட்டுதான். அம்புட்டுத்தான், காந்தி நாயக்கர் வேட்டிய மடிச்சுக் கோமணம் கட்டிட்டாரு. 'அவுத்தததுதான் அவுத்திட்ட. உன் கடன் கழிஞ்சது, மாட்டை நீயே வச்சுக்கோ. நான் வேற காளை வாங்குதன், இல்லாட்டி பொண்டாட்டிய மோக்கால்ல கட்டி உழவடிக்கேன். மாட்டைப் பத்திட்டுப்போ. இல்லைன்னா, உன் உசிரு எங்கைலதான் போகும்'னு நிக்கார். கடைக்காரனும் பயந்தடிச்சு மாட்டை இழுத்திட்டுப் போயிட்டான்.

ஐப்பசி மாசம் நல்ல மழை பேஞ்சு, காந்தி நாயக்கர் மல்லிகைச் செடில்லாம் 'தளதள'ன்னு தழைஞ்சிருச்சு. செத்த நாள் போனதும் செடிகள் அரும்பெடுத்து 'கொய் கொய்'னு மொட்டுவிட்டது. பூ விரியக் குள்ளயும் பறிக்கணும், நேரஞ்சென்னா விரிஞ்சிடும். இதழ் விரிஞ்சபூவ கடைல வாங்கமாட்டாங்க. காந்தியார் ஒரு ஐடியா பண்ணினார். நாலஞ்சு ஆளுகளை விடிய முன்னே காப்பித் தண்ணி தந்து, பூவெடுக்கக் கூட்டிப் போனாரு. பழைய சைக்கிள் டயர்களைக் கொளுத்திவிட்டு, தீப்பந்தம் தயாரிச்சு, அந்த வெளிச்சத்துல பூவெடுத்தார். அப்பிடி எடுத்துங்கூட நேரமானது.

ஒரு எடை எடுக்க ஒரு மணி நேரம் ஆவும். இருபது எடை, முப்பது எடை பூத்தா என்ன செய்ய? மத்தியானம் வரை கஞ்சித் தண்ணிகூடக் குடிக்காம எடுத்தாரு. ஆளுங்களுக்கு முழு வேலை நேரத்துச் சம்பளம் குடுத்தாரு. ரேடியோப் பெட்டியக் கொண்டுபோய் மரத்துல தொங்கவிட்டாரு. ஆளுக பாட்டுக் கேக்கட்டுமின்னு. மத்த சம்சாரிகள், 'காந்தியாருக்கு பூவு நல்ல குடுப்பு குடுத்திருச்சிப்பா'ன்னு சிரிச்சிக்கிட்டே பேசுவாங்க. சண்டை போட்ட பிறகு, அவுரு வேற கடைல கணக்கு வைக்காரு.

கடைக்கும் ஊருக்குமா 'சங்கான் சங்கான்'னு அலைதாரு காந்தி. ஒரு மத்தியானம் ஒரு குட்டிச்சாக்கு நிமுற பூ சேந்திருச்சு. இவரு பஸ்சு ஏறி கடைக்குப் போனாரு. கூட்டம் அப்பமும் நிமுதி முன்னுருக்கு. காலைல சாப்பிடாம கண்ணெல்லாம் இருளுது. கடைக்காரன் எடை போடுதான். ஒரு எடை ரெண்டு ரூவா. காந்தியாருக்கு இன்ன மானிக்குத் தானில்லை. கோபம்னா கோபம் அப்பேர்ப்பட்ட கோபம்.

''என்னல சிறுக்கி வில்ளைய எடை போடுதிய, ரெண்டு கொருவாயாம் கொருவாய்''னு சொல்லிட்டு கடைக்காரன் செவிட்டுல ஒண்ணுவிட்டாரு. அவன் தெகைச்சுப் போய் முழிக்கான். அவ்வளவுதான், இம்புட்டு நாளும் சேத்து வச்ச கோபத்தையெல்லாம் எல்லோருமாச் சேந்து வெளியே விட்டுட்டாங்க. எல்லா விவசாயிகளுமாச்

சேந்து யாவாரிகளை அடி கொளுத்திட்டாங்க. கையில அம்புட்டவனுக்கெல்லாம் அடி சமட்டி எடுத்திட்டாங்க. தராசு ஒரு பக்கம், சாக்கு ஒரு பக்கம், மேசை ஒரு பக்கம் எல்லாம் பறக்கு. பூவெல்லாம் சாக்கோட கவுத்துப்போட்டு மிதிச்சு நாசமாக்கிட்டாங்க. கணக்கு எழுதுதவங்கள்லாம் 'எங்களுக்கு ஒண்ணும் தெரியாது, சாமி'ன்னு ஒதுங்கிட்டாங்க. அவங்களுக்கும் ரெண்டு மூணு இழுப்பு பிடதில விழுது.

சிலபேரு நல்ல பிள்ளையாப் பதுங்கினாங்க. எல்லாத்துக்கும் பிடிச்சு இழுத்தாந்து 'சாப்பாடு' போடுதாங்க. 'கயமுயா கயமுய'ன்னு அவயக்காடு கேக்கு. பூக்கடை முன்னாடி பெருங்கொண்ட கூட்டம் கூடிருச்சு. யாவாரிக விழுந்தடிச்சு ஓடுதாங்க. காந்தி நாயக்கரு ஆவேசமா விரட்டி விரட்டி அடிக்காரு. அண்ட்ராய ரோடு சில பேரு ஓடுதாங்க. 'விடாத! அறைங்கல அவனை'ன்னு யாரோ போடுத சத்தம் கோயிலுக்குள்ள கேக்கு. 'யாத்தே அம்மா'ன்னு கூப்பாடு வேற.

கோயிலுக்கு உள்ளது மாதிரியே பூக்கடைக்கும் பெரிய கதவுகள் இருக்கு. எல்லோரையும் வெளியே தள்ளி காந்தி நாயக்கரு கதவாலை இழுத்தாரு. அவரு கூடமாட இன்னுஞ் சில சம்சாரிகளும் சேந்து கதவை இழுத்துச் சாத்திட்டாங்க. 'இன்னிமேல கடையுங் கிடையாது. கிடையுங் கிடையாது'ன்னு கத்துதாரு காந்தி.

பிறகு பத்து நாளைக்கு எல்லோரும் ராஜபாளையம் பூ மார்க்கெட்டுக்குப் போனாங்க. பத்து நாள்தான் சம்சாரிகள் ஒற்றுமை. மெல்ல ஒண்ணு ரெண்டு பேரு பழைய கடைக்கு வந்திட்டாங்க. அங்க கொண்டு போக நேரம் ஆவுது. பஸ்க திக்கெட்டும் அதியமாவுது. விலையும் கிடைக்கலை. காந்தியார் மட்டும் விடாமல் ராஜபாளையத்துக்கே போயிட்டு வந்தாரு. மத்த விவசாயிகளால் தாக்குப் பிடிக்க முடியலை. ஆனா, அவரால ஒரு நன்மை நடந்தது. என்னன்னா, பூவு எதுவா இருந்தாலும் குறைஞ்சது பத்து ரூவா வெலை வச்சாங்க. மயிலே மயிலே இறகு போடுன்னா போடுதாங்களா? அதுக்குத் தர வேண்டியதத் தந்தாத்தான், நியாயத்துக்குக் கட்டுப்படுதாங்க.

(மண் வாசம் வீசும்)



கடலில் விழுந்த கதாநாயகி!

தமிழின் மெகா பட்ஜெட் படங்களுக்கு மத்தியில், சிம்பிளாகத் தயாராகி வரும் படம் 'தாரு'. "சராசரியான, நம்ம கேள்விப்பட்ட ஒரு காதல் கதையைத்தான் ஜனரஞ்சகமா கொடுத்திருக்கேன். இந்தப் பட ஹீரோ - ஹீரோயின் உட்பட எனக்குமே இதுதான் முதல் படம். ஆனா நல்ல படமாகத் தருவோம்னு மனம் முழுக்க நம்பிக்கை இருக்கு" என்று சொல்லும் படத்தின் இயக்குநர் கலாநிதி, பாடல்கள் ஷூட்டிங்கின்போது நிகழ்ந்த மறக்க முடியாத சம்பவங்களையும் நினைவு கூர்ந்தார்.

"கடல்ல வாட்டர் ஸ்கூட்டர்ல வர்ற ஹீரோயின் ஸ்லிப்பாகி விழுந்துட்டாங்க. காப்பாத்தி கரை சேக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுச்சு. நைட்ல கல்லறையில் ஒரு சீன். ஆனா ஹீரோயினுக்கு கடைசியில தான் அது தெரியும். 'நைட்ல என்னால கல்லறையில நடிக்கவே முடியாது'ன்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிட்டாங்க. இந்த ரெண்டுமே என்னால மறக்க முடியாத அனுபவங்கள்" என்கிறார் கலாநிதி.

- கமலி

பிரியாத...



'ஒன்பது ரூபாய் நோட்டு' படத்தில் வில்லனாக நடித்ததன் மூலம் பலரின் பாராட்டுகளை அள்ளிச் சென்றிருக்கிறார் நடன இயக்குநர் சிவசங்கர்.

''ஏற்கெனவே பல படங்களில் தலை காட்டியிருந்தாலும், 'தண்டபாணி' பாத்திரத்தில் கோவணம் கட்டி வாழ்ந்த அனுபவம் என்னை மிக உயரத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறது'' என்றவரிடம், 'நடிக்க வேண்டுமென்ற எண்ணம் எப்போது தோன்றியது?' என்றோம்.

''நடிகர் நாசர் என்னைப் பார்க்கும் போதெல்லாம் 'நவரசங்களையும் அழகாய் முகத்தில் பிரதிபலிக்கிறீர்கள். நீங்கள் கண்டிப்பாக நடிக்கலாம்' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். 'பாப்கார்ன்' படத்திலும் ஒரு சோலோ டான்ஸ் கொடுத்தார். பிறகு பல படங்களில் சின்னச் சின்ன வேடங்களில் நடிக்க ஆரம்பித்தேன். 'ஜேம்ஸ்பாண்ட்' படத்தில் வில்லனாக நடித்தேன். 'வரலாறு' படம் எனக்கு மிகப்பெரிய திருப்புமுனையைக் கொடுத்தது'' என்றவர், 'ஒன்பது ரூபாய் நோட்டு' அனுபவத்தையும் நமக்குக் கூறினார்.

''பல வருடங்களுக்கு முன் தங்கர் பச்சான் என்னிடம், 'மாஸ்டர், நீங்க நடிக்கக் கூப்பிட்டா போவீங்களா?'ன்னு கேட்டார். 'ம்' என்றேன். உடனே, 'படம் முழுக்கக் கோவணம் கட்டிக்கிட்டு நடிப்பீங்களா?' என்றார். 'முடியும்' என்றேன். அதை மனதில் வைத்துத் தான் தண்டபாணி பாத்திரத்தை எனக்கு அவர் தந்தார். அவரும் சத்யராஜும் என்னை ஊக்கப்படுத்தியதால்தான் இந்தளவு என்னால் நடிக்க முடிந்தது. பண்ருட்டி, ஆம்பூர் பகுதிகளில் ஷூட்டிங் நடந்தபோது, என் நடிப்பைப் பார்த்த பொது மக்கள், இதுபோன்ற சைலண்ட் வில்லன்கள் அவர்கள் கிராமங்களில் நிறைய பேர் இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்'' என்றார்.

''விஜய் - அஜய்னு எனக்கு இரண்டு மகன்கள். என்னுடனேயே என் படங்களுக்கு உதவியாளர்களாக டான்ஸ் கம்போசிங் செய்துகொண்டு வருகிறார்கள். மிக விரைவில் இருவரும் பெரிய ஹீரோ படத்தில் மாஸ்டராகப் பணிபுரியப் போகிறார்கள். சினிமாதான் என் மூச்சு. அடுத்த பிறவியிலும் சினிமாவைப் பிரியாத வரம் வேண்டும்'' என்று நெகிழ்ச்சியோடு கூறுகிறார் சிவசங்கர்.

– சுந்தரி

...வரம் வேண்டும்!



பாட்டிலுக்குள் மனித முகம்!

கண்ணாடி பாட்டிலுக்குள் வண்ணத்துப்பூச்சியை அடைக்க முடியும். மனித முகத்தை நுழைக்க முடியுமா? முடியும் என்பதைக் கடந்த வாரம் சென்னை லலித்கலா அகாடமியில் நடைபெற்ற ஓவியக் காட்சியில் உணர முடிந்தது. வெகு அழகான, தத்ரூபமான, இயல்பான ஓவியங்கள். கண்களை வேறு பக்கம் திருப்ப விடாமல், சிந்தனைகளைக் கிளறிவிட்டு மனத்தைப் பூத்துக் குலுங்கச் செய்த இந்தக் கண்காட்சியை நடத்தியது சாந்திவனம் ஆர்ட் ஃபவுண்டேஷன்.

திருச்சியை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சாந்திவனம், மனநலம் குன்றியோரின் மறுவாழ்வுக்கான சேவைகளைச் செய்து வருகிறது. மனநலம் பாதிக்கப்பட்ட முந்நூறு பேர் இவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிப்பதுடன், நல்ல நலத்துடன் அவர்களைக் குடும்பத்தோடு இணைப்பதே சாந்திவனத்தின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. தொடர்ந்து பொதுமக்களிடம் உதவி பெற்று வரும் நிலையில், மனநல சிகிச்சைக்கு மாதம் ரூ.4 லட்சம் செலவாகிறது. நிதி திரட்டும் ஒரு பணியாகத்தான் இந்தக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. கண்காட்சியில் தென்னிந்தியாவின் புகழ்பெற்ற, இளம் ஓவியர்களின் படைப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

தனித்த அழகியலோடு விளங்கிய ஓவியங்களுடன் சம்பந்தப்பட்ட ஓவியர்களும் கலந்துகொண்டது கூடுதல் சிறப்பு. 'புரியாத மாடர்ன் ஆர்ட்டுகளை, எப்படிப் புரிந்துகொள்வது' என்கிற விவாதத்தில் கண்காட்சிக்கு வந்த ஒரு சாரார் ஈடுபட்டது சுவாரஸ்ய நிகழ்வு. ஒரு பெண்மணி ஆர்வமாகப் படங்களைப் பார்வையிட்டுக்கொண்டு வர, அவர் இடுப்பில் இருந்த குழந்தை சிணுங்கிக் கொண்டே இருந்தது. குழந்தையை வாங்கிய கணவன், மனைவி ரசித்து முடிக்கும்வரை வெளியே வைத்திருந்ததை ஆணாதிக்கப் பார்வையுடனான சில 'நல்ல' உள்ளங்களை உறுத்தியதுதான், கண்காட்சியின் ஒரே உறுத்தல்!

– மதுமிதா

பதற வைத்த பக்னர்!

பக்னர் சொன்னதைக் கேட்டு பக்கென்று சிரித்துவிட்டார்கள் இரண்டு பேரும். 'ம், தொடர்ந்து ஆடுங்கள்' என்று பக்னர் கூறியதும் ஆச்சர்யப்பட்டுப் போனார்கள். மைதானத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது சீண்டல்கள் அல்ல. தீவிரமான பலப்பரீட்சை. ஆஸ்திரேலியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையேயான உலகக் கோப்பை இறுதிப் போட்டி. ஆட்டம் முடியும் தருணத்தில் மைதானம் முழுக்க இருட்டு நிரம்பியிருந்தது. யாருக்கும் கண்ணே தெரியவில்லை. நேரம் காலம் தெரியாமல் மழைத்துளிகள் எல்லோர் மீதும் விழுந்து கொண்டிருந்தன. ரிக்கி பாண்டிங்கும் ஜெயவர்தனேவும் ஆட்டம் முடிந்தது என்று மட்டுமல்ல, உலகக் கோப்பையே முடிந்துவிட்டது என்று எண்ணினார்கள். ஆனால், வானம் இருண்டு மேகமூட்டத்துடன் இருந்தது. நடுவர் ஸ்டீவ் பக்னர் முகத்தில் விஷமத்தனமான புன்னகை படர்ந்தபோதுதான் பேச்சின் தீவிரம் புரிந்தது. நடுவர்கள் அன்றைய தருணத்தில் காண்பித்தது மௌனப் பிடிவாதம். உரிமை வலியுறுத்தல்.

விளைவு? அசிரத்தையாக நடந்து கொண்டார்கள். விதிமுறைகளைச் சரியாக ஊர்ஜிதம் செய்துகொள்ளாமல் ஐ.சி.சி.யின் மதிப்புக்குக் குந்தகம் விளைவித்து விட்டார்கள் என்று கூறி உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் பணியாற்றிய ஐந்து நடுவர்களையும் ஐ.சி.சி. சஸ்பெண்ட் செய்தது. பக்னர் இல்லாமல் 20-20 உலகக் கோப்பை இனிதே நடந்து முடிந்தது.

சிட்னி டெஸ்டில் மீண்டும் தம் வேலையைக் காண்பித்துவிட்டார் பக்னர். சென்ற வாரம் முழுக்க யாரும் வேறு எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை. எல்லோருக்கும் பக்னரை டி.வி.யில் பார்க்கும் போதும் நினைக்கும்போதும் பற்றிக் கொண்டு வருகிறது. என்.டி. டி.வி.யில் பக்னரை துவைத்துக் காயப்போடுகிறார் நவ்ஜோத்சிங் சித்து. அவரைப் பாடையில் ஏற்றி ஊர்வலம் ஒன்று கிளம்புகிறது. எங்கு பார்த்தாலும் பக்னர், பக்னர், பக்னர். நூற்றியிருபது டெஸ்ட் மேட்சுகளிலும் 167 ஒரு நாள் போட்டிகளிலும் நடுவராகப் பணியாற்றிய பழுத்த அனுபவஸ்தர், இன்று கொடூர வில்லனாகக் காட்சியளிக்கிறார்.

1946ல் பிறந்தவர் ஸ்டீவ் பக்னர். ஜமைக்காவைச் சேர்ந்தவர். 61 வயது. 1992 முதல் ஐந்து உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளில் பணியாற்றிய பெருமையும் இவருக்கு உண்டு. இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. மேற்கிந்திய தீவு இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தால் இவரால் நடுவராகப் பணியாற்றியிருக்க முடியாது என்பதும் உண்மை. யார் அப்பீல் செய்தாலும் இரண்டு மூன்று

ச.ந.கண்ணன்





தென் ஆப்ரிக்கா-இங்கிலாந்து தொடரின்போது பக்னருக்குக் கொலை மிரட்டல் வந்தது.

விநாடிகள் அவகாசம் எடுத்துக் கொண்டு கையை உயர்த்துவார். அல்லது தலையாட்டி மறுப்பு கொடுப்பார். ஆனால் சனி, சிட்னியில் அவருக்குக் காத்து இருந்தது. இந்தியர்கள் என்ன கேட்டாலும் உடனுக்குடன் தலையாட்டினார். ஆஸ்திரேலியர்கள் கேட்டதை வாரி வழங்கினார். அவ்வளவுதான், நூறு கோடி கொண்ட தேசம் கொதித்தெழுந்துவிட்டது.

பக்னருக்கு இந்த எதிர்ப்புகளெல்லாம் புதிதல்ல. 2005ஆம் வருடம் தென் ஆப்பிரிக்கா-இங்கிலாந்து தொடரின்போது பக்னருக்குக் கொலை மிரட்டல் வந்தது. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராகச் செயல்படுகிறார் என்று அவருக்குத் தொல்லைகள் ஏற்பட்டன. '2011 உலகக் கோப்பை வரைக்கும் நடுவராகப் பணியாற்றப்போகிறேன். யாருக்கும் நான் பயப்படமாட்டேன்' என்று அப்போது பேட்டி கொடுத்தார். ஆரம்பத்தில் கால்பந்து நடுவராகத்தான் பணியாற்றினார் பக்னர். ஆனால் 45 வயதுக்கு மேல் நடுவர்கள் பணியாற்ற முடியாததால், இவர் கிரிக்கெட்டுக்கு மாறிவிட்டார். பக்னருக்கும் இந்தியாவுக்கும் எப்போதும் ஆகாது. 2003 ஆஸ்திரேலிய டூரில் சச்சினுக்கு எதிராக மோசமான ஒரு எல்.பி.டபிள்யூ கொடுத்தார் பக்னர். டிராவிடை மிமிக்ரி செய்ததாக ஒரு குற்றச்சாட்டிலும் மாட்டிக்கொண்டார். பக்னர் என்கிற பேரைக் கேட்டாலே இந்திய வீரர்கள் அலறுவார்கள். 'அவரால் நிறைய தொல்லைகள் ஏற்படலாம் என்று ஏற்கெனவே நினைத்தோம்' என்கிறார் இந்திய டீமின் வீடியோ அனலிஸ்ட். 2003 தொடரின்போது பக்னருக்கு எதிராக ரிப்போர்ட் எழுதினார் கங்குலி. முணுமுணுப்பாக இருந்த விவகாரம்தான் இன்று பேரிரைச்சலாக மாறியிருக்கிறது.

கிரிக்கெட் விதிமுறைகளை ஒன்றுவிடாமல் கட்டி மேய்ப்பது கடினமான காரியம்தான். கிரிக்கெட் விதிமுறைகளில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. பல மேடுபள்ளங்கள் சமதளமாக்கப்பட்டுள்ளன. பல பள்ளங்கள் மூடப்பட்டுள்ளன. 2006ஆம் வருடம் இங்கிலாந்தில் உள்ள ஓவல் மைதானத்தில், பாகிஸ்தான் வீரர்கள் பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டை முன்வைத்து பெரிய களேபரம் நடந்து, நடுவர் டேர்ல் ஹேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பாதிப்புகள் ஆறுவதற்குள் அடுத்த தவறுகள், தண்டனைகள், கண்டனங்கள். இனிமேல் மூன்றாவது அம்பயரிடம் மூன்று முறை அப்பீல் செய்யலாம் என்கிற புது விதிமுறையைக் கொண்டு வந்திருக்கிறது ஐ.சி.சி. கூடவே இந்தியத் தொடரிலிருந்து பக்னரை வெளியேற்றியிருக்கிறது. இனிமேல் அவர் முன்வந்து நடுவராகப் பணியாற்றுவாரா என்பது சந்தேகத்துக்கிடமாகிவிட்டது.

ஐ.சி.சி. இப்போது எறிந்திருப்பது பூப்பந்துகள் அல்ல. பாணங்கள். நடுவர்களால் ஏற்படுகிற குற்றம் குறைகளை முழுவதுமாகச் செப்பனிட ஐ.சி.சி. முயல்கிறது. நடுவர்கள் நியாயத்தை வலியுறுத்த வேண்டும் என்று ஒவ்வொரு ரசிகனும் விரும்புகிறான். கடமையுணர்வு, நேர்மை, கட்டுப்பாடு போன்றவற்றில் வீரர்கள் தடுமாறலாம். ஆனால், தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் கலகலத்துப் போனால் நிறுவனமும் சரிந்துபோகும், நிம்மதியும் குலைந்துபோகும்.

குருவாயூர் கோயிலில் எம்.ஆர்.ராதா!

நடிகவேள் எம்.ஆர். ராதாவின் ஆஸ்தான ஒப்பனையாளராக இருந்த கஜபதி, கடைசி காலம் வரையில் அவருடன் பணியாற்றியவர். ராதாவின் நினைவுகளை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்:

"நல்ல இடத்து சம்பந்தம் படத்துக்காக அவுட்டோர் ஷூட்டிங் போனாங்க. ராதா அண்ணனும் போனார். நான் இன்னொரு படத்துக்காக சிவாஜி சாருக்கும் சௌகார் ஜானகிக்கும் மேக்-அப் போடப் போயிட்டேன். ராதா அண்ணனுக்கு என்னை வழியற முகம். அவுட்டோர்ல இன்னொருத்தர் அவருக்கு மேக்-அப் போட்டார். அது சரியா நிக்கலை. அதனால அன்னிக்கு ஷூட்டிங்கே ரத்தாக இருந்துச்சு. உடனே ராதா அண்ணன் என்னை வரச் சொல்லி ஆளனுப்ப, நான் போய் மேக்-அப் போட்டதும்தான் திருப்தியானார்.

'கைராசி' படத்துல அப்பா வேஷம். ஒரு நாள் நைட் ஷூட்டிங். அப்பத்தான் நாள் முழுவதும் நடிச்சுட்டு, அந்த



★ கஜபதி

ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு ரொம்பக் களைப்பா போனார் ராதா அண்ணன். ஷாட் எடுத்தாங்க. ஷூட்டிங் முடிஞ்சது. அப்ப ராத்திரி மணி ஒண்ணு. டைரக்டர் கே.சங்கர் என்னைக் கூப்பிட்டார். 'ஸீன் சரியா வரலை. பரவாயில்லை'னு சொன்னார். நான் மறுநாள் விஷயத்தை அண்ணன்கிட்ட சொன்னேன். உடனே அவர், படத்தோட புரொடியூசர் வாகவைக் கூப்பிடச் சொன்னார். 'நேத்து எடுத்த ஸீன் திருப்தி இல்லைன்னு டைரக்டர் சொன்னாராம். நாளைக்கு ஷூட்டிங் ஏற்பாடு பண்ணுங்க. திரும்ப எடுத்துடலாம். ஆகுற செலவை நான் ஏத்துக்கிறேன்'னு சொன்னார். சொன்ன மாதிரியே மறுநாள் சங்கரே கண் கலங்குற அளவுக்கு நடிச்சுக் கொடுத்தார்; செலவையும் கொடுத்துட்டார்.

அவர் நாத்திகம் பேசுவாரே தவிர, மத்தபடி நான் கோயிலுக்குப் போனா தடுக்க மாட்டார். ஒருமுறை கோயம்புத்தூருக்கு அவுட்டோர் போனப்ப, குருவாயூர் கோயிலுக்கு என்கூட வந்தார்.




என்னை சாமி கும்பிட்டு வரச் சொல்லிட்டு, அவர் அமைதியா வெளிய நின்னு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தார்.

'மேடையில் நடிக்கும்போதே செத்துடணும்'னு அடிக்கடி சொன்ன ராதா அண்ணன், கடைசியில 1979ல் உடல்நிலை சரியில்லாத நேரத்துலயும், 'இரத்தக் கண்ணீர்' நாடகம் ஒத்துக்கிட்டிருந்ததால, அதை நடத்துறதுக்காகத்தான் திருச்சிக்குப் போனார். முடியாமப் படுத்துட்டார்.

ராதா அண்ணன் பல பேரோட பார்வையில பழகவே முடியாத ஆளாத் தெரியலாம். நெருங்கிப் பழகினவங்களுக்குத்தான் தெரியும், உண்மையில் அவர் குழந்தை மாதிரின்னு''

– ஆவின் நம்பி


ஸ்ரீ பெரிய நாயகி அம்மன்
தேவிகாபுரம்

திருமலை நாயக மன்னன், நீலகண்ட தீக்ஷிதருடைய பிரபாவத்தைக் கேட்டு விட்டு, அவர் தமக்கு அமைச்சராக இருக்கவேண்டும் என்று அழைத்துக் கொண்டுபோய், பதவியில் அமர்த்தினான். அந்தப் பரம்பரையிலேயே அவர் நிறைய பேருக்கு அமைச்சராக இருந்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் மஹால் கட்டினார்கள். அப்போதெல்லாம் மதுரை நாயக்கர்களும் சரி, செஞ்சி நாயகர்களாக இருந்தாலும் சரி. கோயில் ஏதாவது கட்டி னால், அல்லது மஹால் கட்டினால், அங் கெல்லாம் அரசர் - அரச பத்தினியுடைய வடிவம் இருக்கும்படி செய்தார்கள்.

தீக்ஷிதருக்கு வந்த சோதனை!

அப்படி ஒரு முறை அரசர் - அரசி சிலையைப் பார்த்துவிட்டு நீல கண்ட தீக்ஷிதர் சொல்கிறார் : ''அதெல் லாம் ஒன்றுமில்லை. மூத்த அரசியாக இருக்கக்கூடியவளுக்கு அந்த இடத் தில் ஒரு மச்சம் இருக்கிறது. அதனால் தான் கல் தெறிக்கிறது. அதனால் அதை அப்படியே விட்டுவிடு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். சிற்பியும் அப்படியே விட்டுவிட்டார்.

அன்று மாலை அரசர் வந்து சிற் யை விசாரித்தார். சிற்பியும் அவரிடம் தீக்ஷிதர் சொன்னதைக் கூற, அங்கே என்ன மாதிரியான சிக்கல் உண்டாகி யிருக்கும் என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ளலாம். தனக்கு மட்டுமே தெரிந்திருக்கக்கூடிய ஒன்று, தனக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய ஒன்று, வேறொரு ஆடவனுக்குத் தெரிந்திருக்கிறதே! அரசருக்கு என்ன

ஆயிரம் பெயர்களுக்கு அப்பால்...

சுதா சேஷய்யன்

19

வடிவத்தைச் சிற்பி செதுக்கிக்கொண்டே வருகிறபோது, பட்ட மஹிஷியாக இருக்கக்கூடிய மூத்த அரசியின் வடிவத்தைச் செதுக்குகிறார். ஒவ்வொரு நாள் செதுக்குகிறபோதும் ஏதோ ஒன்று தெறித்துப் போகிறது! கால் பகுதியில், தொடைப் பகுதியில் செதுக்கு கிறபோது தெறித்துத் தெறித்துப் போகிறது. சிற்பிக்குத் திருப்தியே இல்லை... வேலை யெல்லாம் முடிந்துவிட்டதா என்று பார்க்க, நீலகண்ட தீக்ஷிதர் அங்கே வருகிறார். அவர்தானே மந்திரி பிரதானி! அதனால் மேற்பார்வை பார்ப்பதற்காகப் போகிறார். அப்போது சிற்பி அவரிடம் சொல்கிறார்: ''என்னவோ தெரியவில்லை; இந்த இடம் அப்படியே தெறித்துத் தெறித்துப் போகிறது. எனக்கு பகவானுடைய அனுக் கிரஹம் இல்லை போலிருக்கிறது! திரும் பத் திரும்ப மூளி ஆகிக்கொண்டே இருக் கிறது'' என்கிறார்.

பண்ணுவது என்று தெரியவில்லை. நீல கண்ட தீக்ஷிதர் மேல் மரியாதையும் இருக்கிறது; அதே நேரத்தில் இந்த மாதிரி சிக்கலும் உண்டாகிவிட்டது! தீக்ஷிதர் பேரில் கோபம் வந்தது மன்னனுக்கு. அவருடைய கண் பார்வையைப் பறித்துவிடவேண்டும் என்று திட்டம் போட்டான்.

வழக்கமாக, அரச சபைக்கு தீக்ஷிதரை அழைத்து வர அரண்மனை ரதம் போகும். அதே மாதிரி அன்றும் ஆட்கள் போனார்கள். அரசர் அழைத் துக்கொண்டு வரச்சொன்னார் என நீலகண்ட தீக்ஷிதரிடம் சொன்னார்கள். சொன்னதுமே, அம்பாள் பூஜையில் அமர்ந்திருந்தவருக்கு விஷயம் ஞான திருஷ்டியில் தெரிந்து போயிற்று. அரசர் எதற்காக வரச் சொல்கிறார்,

என்ன செய்யப் போகிறார் என்பது புரிந்து போயிற்று.

அரசரிடம் போய் அந்தத் தண்டனையை வாங்கிக்கொள்வதைவிட, தனக்குத் தானே அத்தண்டனையைத் தந்து கொள்ளலாம் என்று, கற்பூர தீபத்தைக் கொண்டே தன் கண் பார்வையைப் போக்கடித்துக்கொள்கிறார் நீலகண்ட தீக்ஷிதர். அதற்குப் பிறகுதான் அவர் எல்லா பெண்களையும் அம்பாளாகப் பார்த்தார் என்பது அரசனுக்குத் தெரிய வருகிறது; அவருக்கு ஒரு கிராமமே கொடுக்கப்படுகிறது. அந்தக் கிராமத்தில் கோழியே கூவக்கூடாது என்று அவர் கேட்டுக்கொண்டார். தாழையூத்துக்கு அருகே பாலாமடை என்றொரு கிராமம் இருக்கிறது. அங்கேதான் அவர் கடைசி காலத்தில் தங்கியிருந்தார். அப்போது கேட்டாராம்- 'தியானத்திலிருக்கும்போது கோழி கூவும் ஒலிகூட என்னை இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும்' என்று. தாமிரபரணி கரைக்கு அருகே அவர் கேட்ட படிக்கு ஒரு கிராமத்தை மன்னன் தருகிறான். அம்பாளை நினைத்துக்கொண்டு ஆனந்த ஸாகரஸ்தவம் பாடுகிறார். அதைப் பாடி முடிக்கிறபோது, அவருக்குக் கண் பார்வை திரும்புகிறது.

ஆனந்த ஸாகர ஸ்தவம்

அந்த ஆனந்த ஸாகர ஸ்தவத்தில் அவர் என்ன சொல்கிறார், ''அம்மா, உன் திருவடிகளைக் கொண்டுவந்து என் தலை மீது வை!'' என்கிறார்! அபிராமி பட்டர் கேட்டாரே, ''அம்மா, அந்தரி! என் மனத்தில் வந்து தங்கு; என் ஹ்ருதய கமலத்தில் வந்து தங்கு'' என்றாரே... அப்படிச் சொல்கிறபோது அபிராமி பட்டர் கூடவே வேறு இரண்டு விஷயங்கள் சொல்கிறார் :

''என் மனம் கல்லாயிற்றே அம்மா! அந்தக் கல் மனத்தில் மென்மையான உன் பாதங்களை வைத்தால் நோகுமோ என்னவோ?'' என்று கேட்கிறார். கேட்டுவிட்டுக் கூடவே சொல்கிறார் : ''உன் கல்யாணத்தின்போது அம்மி மிதித்தாயே... அப்போது அம்மிக் கல் மீது கால் வைத்தாயல்லவா - அந்த மாதிரி நினைத்துக்கொண்டு, என் மனம் கல்லாக இருந்தால் பொறுத்துக் கொள் தாயே!''

என் சிரஸில் உன் பாதங்களை வை என்று கேட்கிற நீலகண்ட தீக்ஷிதர் என்ன சொல்கிறார். 'உபநிஷதம் ஆகமங்கள் இவையெல்லாம் எவ்வளவு கரடு முரடாக இருக்கிற விஷயம். அவற்றின் மீது உன் திருவடிகளை வைத்தாயாமே! அதைவிட என் சிரஸ ஒன்றும் கரடு முரடாக இல்லை. அதனால் உன் திருவடிகளைக் கொண்டுவந்து என் சிரஸின்மீது வை!' என்கிறார்.

ஆகவே, அம்பாளுடைய திருவடிகள் எங்கே இருக்கின்றன என்றால், வேத மாதாவுடைய தலையிலே இருக்கின்றன. அவள் சீமந்த சிந்தூரமே அம்பாளுடைய பாதத்திலிருந்து கிடைக்கக்கூடியதான பாதாப்ஜ தூளிகாதான்! அம்பாளுடைய பாத அப்ஜம் - பாத தாமரையிலிருந்து வந்ததாகச் சொல்லக்கூடிய துகள்கள். இதைத்தான் **ஸ்ருதி ஸீமந்த ஸிந்தூரி க்ருத பாதாப்ஜ தூளிகா** என்ற நாமம் உணர்த்துகிறது.

ஆயிரம் திருநாமங்களுக்குள்ளும் கட்டுப்படாதவள்; ஆனால், அந்த ஆயிரம் ரூபங்களையும் நாமங்களையும் கொண்டவளாக இருக்கக் கூடியவள் ஸ்ரீ லலிதாம்பிகை.

இப்படிப்பட்ட அம்பாள் எங்கே இருக்கிறாள் என்றால் வேதமாகிற கரடு முரடான சம்புடத்துக்குள்ளே முத்தாக இருக்கிறாள்.

பெயர்களுக்குள் அடங்காத பெருமை!

அடுத்து வரக்கூடிய திருநாமங்கள் அம்பிகாவாக இருக்கக்கூடியவளைக்

குறித்து வருபவை.


புருஷார்த்தப் பிரதா - நான்கு புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைத் தருபவள்.

பூர்ணா - முழுமை, நிறைவாக நிறைந்திருப்பவள்.

போகினி - போக்யங்களை - நல்ல உலக அனுபவங்களைத் தரக்கூடியவள்.

புவனேஸ்வரி - இந்த புவனத்துக்கே ஈசுவரியாக இருக்கக்கூடியவள்.

அம்பிகா - உலகத்துக்கே தாயாக இருக்கக்கூடியவள். அம்பிகா என்றால் 'அம்மா'



என்று அர்த்தம்.

அநாதி நிதநா - அவளுக்கு ஆதியும் இல்லை; அந்தமும் இல்லை. நிதநம் என்றால் முடிவு என்று பொருள். தொடக்கமும் முடிவும் இல்லாதவளாக இருக்கக்கூடியவள் அம்பாள்.

ஹரி பிரம்மேந்திர ஸேவிதா - ஹரி, மஹா தேவர்களுக்குத் தலைவனாக இருக்கக்கூடிய இந்திரனும் எல்லா தேவர்களும் வந்து அம்பாளை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வணங்கப்படுபவள் **நாராயணி**, அவளே நாத ரூபா. அதாவது நாத வடிவமாக இருப்பவள்.

நாமரூப விவர்ஜிதா - 'இதுதான் அவளுடைய ரூபம்' என்று எந்தவொரு நாமத்தினாலும் வர்ணிக்கப் படமுடியாதவள்; நாமத்துக்குள் கட்டுப்படாதவள்; நாமமும் ரூபமும் இல்லாதவள்.

அம்பாளுக்கு என்னென்ன பெயர்கள் உண்டு என்று ஆயிரம் நாமங்களைச் சொல்கிறோமே... அப்படிச் சொன்ன பிறகு, அம்பாளுடைய எல்லா குணங்களையும் சொல்லி முடித்தாயிற்றா? என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவோம்...? ஆயிரம் திருநாமங்களைச் சொல்லியும் அம்பாளை முழுதும் வர்ணித்துவிட முடியாது என்றுதான் சொல்லுவோம்.

இப்படி ஆயிரம் நாமங்களுக்குள்ளும் கட்டுப்படாதவள்; ஆனால், அந்த ஆயிரம் ரூபங்களையும் நாமங்களையும் கொண்டவளாக இருக்கக்கூடியவள் அம்பாள் ஸ்ரீ லலிதாம்பிகை.

(வளரும்)



* 'காதலில் விழுந்தேன்'

● அருண்விஜய் நடிக்கும் 'வேதா' படத்தின் க்ளைமேக்ஸ், வழக்கத்துக்கு மாறாக சென்டிமெண்ட் டச்சோடு அமைக்கப்பட்டிருக்கிறது. இக்காட்சி படமாக்கப்பட்டபோது, அதில் நடித்த கலைஞர்கள், சுமார் முந்நூறு துணை நடிகர்கள் என்று மொத்த படக்குழுவுமே கண்ணீர் விட்டு அழுதிருக்கிறது.

● நாஞ்சில் பி.சி.அன்பழகன் இயக்கத்தில் உருவாகி வரும் 'அய்யா வழி', வைகுண்டசாமி என்கிற மகானின் பெருமையைச் சொல்லும் படம். தமிழகம் முழுவதும் மழை இருந்த நேரத்திலும், இப்படத்தின் படப்பிடிப்பு நடந்த போது, ஐந்து கருடன்கள் வட்டமிட்டு, வானில் சூழ்ந்திருந்த கருமேகங்கள் விலகிச் சென்ற அதிசயத்தைப் பார்த்து 'அய்யா வழி' குழுவே வியந்து போயிருக்கிறது.

● ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்துள்ள ஆச்சி மனோரமா, சோலைக் குயில் ராஜன் இயக்கும் 'ஜான்' படத்தில் முதன் முறையாக நர்த்தகியாக நடிக்கிறார். அண்மையில், ஒன்பது நர்த்தகிகள் அகல் விளக்கு ஏந்தி வர, இப்படத்தின் தொடக்க விழா நடைபெற்றது. நர்த்தகிகளுடன் பழகி அவர்களைப் பற்றி உள்ளும் புறமும் அறிந்து இந்த கேரக்டரில் நடிக்கவிருக்கிறார் ஆச்சி.

● காதலில் விழுந்தேன் - நடிகை தேவயானியின் தம்பி நகுலன் கதாநாயகனாக நடிக்கும்



* 'தலைநகரம்'



பிட்ட

படம். 'பாய்ஸ்' படத்தில் அத்தனை குண்டாக வளைய வந்த நகுலன், அதி சயிக்கத்தக்க விதத்தில் ஸ்லிம்மாகியிருக் கிறார். அண்ணா சாலையில் உள்ள சுரங் கப்பாதையில் படப்பிடிப்பு நடந்த போது, டூப் போடாமல் நடித்து விபத்தில் சிக்கிய சில நாட்களிலேயே தம் மனவலிமையால் மீண்டெழுந்து, மறுபடியும் ஷூட்டிங்கில் கலந்து கொண்டிருக்கிறார்.

● பிரபல இந்தி நடிகர்களான ஜாக்கி ஷெராஃப், ராகுல்தேவ் இருவரும் முதல்முறையாக தமிழில் அறிமுகமாகி றார்கள். புனே திரைப்படக் கல்லூரி மாணவரான அருண்குமார் இயக்கும் இப்படத்துக்கு 'வங்கி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 32 நாட்கள் தொடர்ந்து கால்ஷீட் கொடுத்துள்ள ஜாக்கி ஷெராஃப், தமிழில் சொந்தக் குரலில் டப்பிங் பேசியுள்ளார். ஒரு வங்கியிலிருந்து நூறு கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்படுவதுதான் படத்தின் மையக்கரு.

● 'சித்திரம் பேசுதடி' படத்துக்குப் பிறகு 'அஞ்சாதே' படத்தை இயக்கி வரும் மிஷ்கின், பல புதுமைகளை கையாள்வதாகக் கூறுகிறார். 'முதல் படத்துக்கும் இந்தப் படத்துக்கும் சிறிதும் சம்பந்தமிருக்காது. 'வாளமீன்' பாடல் போல் இதிலும் சூப்பர் சாங் ஒன்று வைத்திருக்கிறேன். ஆக்ஷன் தூக்கலாக இருந்தாலும் நெகிழ்ச்சியும் படத்தின் ஹைலைட்டாக இருக்கும்' என்கிறார்.

● படுகர் இன மக்களின் கலாசாரத் தால் ஈர்க்கப்பட்டு படம் தயாரிக்க வந்துள்ளார் சிவாஜிராஜா. அவர் எடுக் கும் 'ஹொாச முங்காரு' என்கிற முதல் படுகு மொழித் திரைப்படம், படுகர் களின் வாழ்வைச் சித்திரிக்கும் விதத்தில் தயாராகி வருகிறது.

● புதுமுகங்கள் நடிக்கும் 'தலைகீழ்' படத்தின் படப்பிடிப்பில் பல சுவாரஸ் யங்கள் நடந்துள்ளன. சண்டைக் காட்சியின்போது ஆட்டோ சேசிங்கில்



* 'வங்கி'



* 'அய்யா வழி'

பயிற்சியாளர் ஒருவர் அடிபட, ரத்தம் வழிந்ததைக் கண்டு படத்தின் நாயகி தேஜஸ்மை மயக்கம் அடைந்துவிட்டார். காட்டில் ஹீரோவைத் தேடும் காட்சி யில், பாம்பு ஒன்று திடீரென்று பட மெடுக்க, தேஜஸ்மை பயந்து ஓட்ட மெடுக்க, மொத்த படக்குழுவுமே பதறி ஓடியிருக்கிறது.

– ரேவதி

பிடிங்க!



* பலிகொண்ட தீர்ப்பு!

● சு.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? பத்தொன்பதே வயதான பேனசிரின் மகன் பிலாவல் கட்சித் தலைவராகியுள்ளாரே - முஷாரஃபை எதிர்த்து இந்தப் பிஞ்சு அரசியல் பண்ண முடியுமா?

! முஷாரஃபை எதிர்ப்பது இருக்கட்டும்; கட்சித் தலைமைக்கான முதிர்ச்சியேகூட பெற்றிருக்க மாட்டார். அனுதாப அலைக்கு ஆசைப்பட்டு, அதற்குள் குருவித் தலை பனங்காயாகப் பொறுப்பைத் தூக்கி வைத்துவிட்டார்கள்!

● எச்.ஆன்டனி தமிழரசன், மும்பை - 17

? சிமெண்ட் விலை தொடர்பான அரசின் முடிவுக்கு ராமதாஸ் பாராட்டு தெரிவித்துள்ளாரே?

! ஆலைகளை நாட்டுடைமை ஆக்குதல் என்பது, தவறான, விபரீதமான முடிவு. அதை ராமதாஸ் ஆதரித்தால் பிற்பாடு வருந்துவார். இறக்குமதி செய்து நியாய விலைக் கடைகள் மூலம் சிமெண்ட் விற்க ஏற்பாடு செய்வதும் ஊழலுக்கே வழி செய்யும். உற்பத்திப் பெருக்கமும் வரிச்சுமை குறைப்புமே தீர்வு.

● வாசுதேவன், நவி மும்பை

? புள்ளி வைத்த மாக்கோலம் - ரங்கோலி - ஒப்பிடுக!

! முன்னது கறுப்பு - வெள்ளை கிளாஸிக்; பின்னது மாடர்ன் டெக்னிக் கலர் ரிலீஸ்.

● ஜி.எஸ்.ராஜன், சென்னை - 42

? மோடியின் நிர்வாகத் திறன்தான் பா.ஜ.க.வின் குஜராத் வெற்றிக்குக் காரணமா?

! ஆமாம், ஆமாம்! நேர் மாறாக, ஹிமாசல பிரதேசத்தில் காங்கிரஸின் படுதோல்விக்கு, மோசமான நிர்வாகமே காரணம்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? தவறு செய்யும் அமைச்சர்கள், அதிகாரிகள் வீடுகளின் முன்பு, தே.மு.தி.க. தொண்டர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்த வேண்டும் என்று விஜயகாந்த் கூறுகிறாரே?

! அவர்கள் 'தவறு செய்ததற்கான ஆதாரம், சாட்சியம் என்ன?' என்கிற கேள்வி எழும். ஒரு சந்தேகத்தின் அடிப்படையில் போராட்டம் நடத்த முடியாது. நேரத்தை இது போன்ற முயற்சிகளில் வீணடிக்காமல், ஆக்கபூர்வமாகச் செலவிட முயற்சி செய்வது நல்லது.

● என். பாலகிருஷ்ணன், மதுரை

? புத்திசாலிகூட தோற்கும் இடம் எது?

! 'நான் புத்திசாலி; எனவே தோற்க மாட்டேன்' என்ற கர்வத்தில் தவறான பாதையில் அடியெடுத்து வைக்

* பனங்காய் பொறுப்பு!



மது அருந்தினால்தான் புத்தாண்டு கொண்டாட முடியுமா?

கும்போது.

● கவி.மா.ஷண்முகராஜா

? 'மாடு இளைச்சாலும் கொம்பு இளைக்காது' - இன்றைய அரசியல் சூழலுக்கு ஒப்பிடுங்கள்...?



● சி.என்.ரமாதேவி,
கோவை

? 'புத்தாண்டு பார்ட்டிகளில் இனி பெண் ஊழியர்கள் மது சப்ளை செய்யலாம்' என்று உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதால் குற்றங்கள் அதிகரிக்கத்தானே செய்யும்?

! நீதிமன்றம், சட்ட மீறல், சம உரிமை மீறல் இல்லாமல் இருக்கிறதா என்பதை மட்டும்தான் ஆராய முடியுமேயொழிய, பண்பாடு காக்கப்படுகிறதா? பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறதா என்றெல்லாம் பார்க்கச் சட்டத்தில் இடமில்லை. பெண்களை இப்பணிக்கு அமர்த்த விரும்புவோர், முற்படுவோரின் நோக்கம் என்ன என்பது தெளிவு. இதனால் ரகளைகள் அதிகரிக்கும். வழக்குகள் பெருகும். அப்போது நீதிமன்றம் தண்டிக்கும்! வருமுன் காக்க, அரசுதான் திருத்தச் சட்டங்களை இயற்ற வேண்டும்.



* பாலிடிக் வெற்றி!

● இரா.சாந்தகுமார்,
திருவள்ளூர்

? சமீபத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில், பூரண மதுவிலக்கை அமலாக்க 68.3 சதவிகிதம் பேர் விரும்புவதை கவனத்தில் கொண்டு, தமிழக அரசு மதுக் கடைகளை மூட முன் வருமா?

! வராது. ஆனால், அப்படிச் செய்தால் மூன்று விதங்களில் ஆதாயம்:

1. அந்த 68.3 சதவிகிதத்தினர் வாழ்த்துவார்கள்.

2. மீதமுள்ள 31.7 சதவிகிதம் பேரின் ஆரோக்கியம் காக்கப்படும்.

3. ராமதாஸுக்கு செக் மேட் வைத்ததாகவும் இருக்கும்!

● எ.டபிள்யூ. ரபீ அஹமத், சிதம்பரம்

? மது அருந்தினால்தான் புத்தாண்டு கொண்டாட முடியுமா?

! புத்தாண்டு மட்டுமென்ன... எதைக் கொண்டாடு

* தவறான ஆதரவு!





* விபரீத யோசனை!



* பூச்சாண்டி அறிவிப்பு!

வதானாலும் மது விலக்கப்படவே வேண்டும். மதுவுடன் கூடிய எந்தக் கொண்டாட்டமும் முடிவில் திண்டாட்டமே!

● க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

? தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை ஏற்பட அ.தி.மு.க. ஆட்சி காரணமா? தி.மு.க. ஆட்சி காரணமா?

! மாறி மாறி தமிழகத்தை ஆண்ட இந்த இரண்டு கட்சிகளுமே இது குறித்துத் தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தாததுதான் காரணம்.

● ஆர்.ராஜலட்சுமி, விழுப்புரம் ❑

? அரசும் அரசியல் கட்சிகளும் வாரி வழங்கும் இலவசங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மனப்பாங்கு மக்களுக்கு எப்போது வரும்?

! அவர்களுடைய பொருளாதார தரம் உயரும்போது. ஆனால், அது நடக்காமல் கவனமாக நமது அரசியல்வாதிகள் பார்த்துக்கொள்வார்கள். அப்போதுதானே ஓ.சி. கொடுத்து ஈஸியா வோட்டுகளைப் பிடிக்க முடியும்!

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? 'காங்கிரஸ் தலைமையில் புதுக் கூட்டணியை உருவாக்குவோம்' என்று மத்திய அமைச்சர் இளங்கோவன் அறிவித்துள்ளாரே?

! இவர் என்ன பூச்சாண்டி காட்டி என்ன பிரயோஜனம்? சாவி சோனியாவிடம் தானே இருக்கிறது! அவர் நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளையொட்டிதான் தமிழகம் பற்றிய முடிவெடுப்பார்.

● வீ.சிவசங்கர், கள்ளக்குறிச்சி ★

? திரைப்படங்களில் தீய பழக்க வழக்கங்களைக் காட்டாமல் எப்படி வில்லனை வில்லனாகச் சித்திரிப்பது?

! வில்லனாகச் சித்திரிக்க, தீய பழக்கங்களைக் காட்சிப்படுத்த வேண்டியதுதான். ஆனால், அதை நியாயப்படுத்தும்போதுதான் நோக்கம் தவறாகிறது. இங்கே பெரும்பாலான படங்களில் நடப்பது அதுதான்!

● வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி

? ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் இந்திய கிரிக்கெட் வீரர்கள் அவுட்டாகி வருகிறார்களே?

! அவர்களின் பந்து வீச்சைக்கூட சமாளித்துவிடலாம். நடுவர்களின் தீர்ப்பு வீச்சுகளிலிருந்து தப்புவது பெரும்பாடாக இருப்பதை சிட்னி டெஸ்ட் உணர்த்தியுள்ளதே!

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:
ஆர்.ராஜலட்சுமி,
விழுப்புரம்

★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
வீ.சிவசங்கர்,
கள்ளக்குறிச்சி

● வி.எம்.செய்யது புகாரி, அதிராம்பட்டினம்

? தமிழ் வார இதழ்களை 'வண்ணமய மோகம்' பிடித்து ஆட்டுகிறதே...?

! தொலைக்காட்சி, இன்டர்நெட் வளர்ச்சியுடன் போட்டியிட்டு ஜெயிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால்தான். அத்துடன் நில்லாது, ஆபாசத்திலும் வன்முறை கோரத்திலும்கூட போட்டியில் ஈடுபடுவதுதான் வருத்தமளிக்கிறது. ●

சினிமா ஸ்பெஷல்



திரையுலகம் காணாத அப்பா!

மிக அழகாக நடந்து வருகிறது 'சந்தோஷ் சுப்ரமணியம்' படப்பிடிப்பு. தெலுங்கில் சூப்பர் ஹிட்டான 'பொம்மரிலு'தான் தமிழில் - 'சந்தோஷ் சுப்ரமணியம்' ஆகியிருக்கிறது. ஜெயம் ரவி, ஜெனிலியா, பிரகாஷ்ராஜ் என்று கலாட்டா கேந்திரமாகக் காட்சியளித்தது ஷூட்டிங் ஸ்பாட். ரவி, ஜெனிலியா பங்குபெற்ற காதல் காட்சியை இயக்கி முடித்து ரிலாக்ஸ்டான டைரக்டர் ராஜாவை ஓரங்கட்டி வாயைக் கிளறினோம்.


''இந்த முயற்சியை ரீமேக் என்று எளிதில் கூறிவிட முடியாது. ஒரு பிரசவத்தைப் போல அணுஅணுவாக உருவாகி வருகிறது படம். இந்தப் படத்தின் தமிழ் உரிமையை பிரகாஷ்ராஜ் சார் வாங்கி வைத்திருந்தார். படம் விரைவில் உருவாகும் நோக்கத்துக்காக, நல்ல மனதுடன் எங்களுக்கு விட்டுக் கொடுத்ததை என்றும் மறக்க மாட்டோம்.

தயாரிப்பாளர் அகோரம் சாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். படத்தின் முக்கிய இடமாக ஒரு வீடுதான் உள்ளது. இதற்காக ஐம்பது லட்ச ரூபாய் செட் போட உடனே அனுமதி கொடுத்தார். மூன்று மாதங்களை பாடல்களுக்காகவே செலவிட்டிருக்கிறோம். ஒரே ஒரு சண்டைக் காட்சி. நெத்தியடியாக வந்திருக்கிறது. கிரிக்கெட் வீரர் சடகோபன் ரமேஷ் சிறப்புத் தோற்றத்தில் நடித்திருக்கிறார். கதையின் மூன்று தூண்களான ஜெயம் ரவி, ஜெனிலியா, பிரகாஷ்ராஜ் மூவருக்கும் நடிப்பில் பயங்கர போட்டா போட்டி. ஒவ்வொரு முறையும் மூவரும் ஜெயிப்பதுதான் ஹைலைட். படத்தில் வரும் அப்பா கேரக்டர் தமிழ்த் திரையுலகம் இதுவரை காணாதது; இனியும் காணப் போகாதது'' என்றார் டைரக்டர் ராஜா.

ரவி, ஜெனிலியாவை அணுகினால், ''டைரக்டர் சொல்றதுதான் நாங்க சொல்றது. நாங்க சொல்ல நினைச்சதைத் தான் டைரக்டர் சொன்னார்'' என்று ஒப்பித்தார்கள்.

''நல்ல டீம்'' என்றுவிட்டுப் புறப்பட்டோம்.

- நிதர்ஸனா



தற்கொலை செய்துகொள்ள நினைத்தேன்...

மலையாள ஸ்டார்களில் குறிப்பிடத்தக்கவர் சுரேஷ் கோபி. இன்று அவர் பெரிய நடிகராயிருந்தாலும் சினிமாவுக்கு வர அவர் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நம்மைச் சந்தித்தபோது மனம் திறந்து பேசினார்:

''கமல்ஹாசனின் நடிப்புதான் என்னை சினிமாவுக்கு ஈர்த்தது. கமல் நடித்த பல படங்களுக்கு என்னுடைய அப்பா கேரள விநியோகஸ்தராக இருந்தார். கல்லூரி நாட்களில், வகுப்புக்கு மட்டம் போட்டுவிட்டு சினிமாவுக்குப் போய்விடுவேன். நிறைய கமல் படங்கள் பார்த்து, 'நடிப்பு என்பது மிகச் சிறந்த ஒரு தொழில். நாமும் நடிகராகி, கமல் மாதிரி அபாரமாக நடித்து முத்திரை பதிக்க வேண்டும்' என்கிற வெறி எனக்குள் ஏற்பட்டுவிட்டது.

நான் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாகவோ அல்லது ஐ.பி.எஸ். அதிகாரியாகவோ வர வேண்டும் என்பதுதான் என் அப்பாவின் விருப்பம். இருந்தும் என் பிடிவாதத்தின் பலனாக, 'உனக்கு இரண்டு வருடங்கள் அவகாசம் தருகிறேன். அதற்குள் உன் சினிமா முயற்சி வெற்றி பெற்றால் சரி. இல்லையெனில் சினிமா ஆசைக்கு முழுக்குப் போட்டுவிட வேண்டும்' என்று சொன்னார். நானும் ஒப்புக்கொண்டு சென்னை வந்து, தமிழ் சினிமாவில் சான்ஸ் தேடும் முயற்சியில் இறங்கினேன்.

இந்த இரண்டு வருட காலத்தில் எத்தனை தயாரிப்பாளர்கள், டைரக்டர்களின் ஆபீஸ் படி ஏறி இறங்கினேன் தெரியுமா! ஓரிரு சமயங்களில் தற்கொலை செய்துகொண்டு விடலாமா என்ற எண்ணம்கூட எனக்குள் எட்டிப் பார்த்தது. ஒருவழியாக, எனக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு வருட கெடு முடிந்து, ஒரு மாதமாகி இருக்கும்போது, மோகன்லால் நடித்த 'ராஜாவிண்டே மகன்' என்ற படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது.

1986ல் கொச்சியில் படத்தின் ஷூட்டிங் முடிந்தது. படத்தில் மோகன்லாலும், நானும் இடம் பெறும் ஒரு காட்சியின் ஸ்டில்லை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நேரே திருவனந்தபுரம் சென்றேன். அப்பாவிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் முயற்சிகளுக்கு வெற்றி கிடைத்ததைப் பாராட்டினார். இன்றைக்கு நான் மிகப் பிரபலமான ஒரு நடிகராக இருப்பதில் அவருக்கு மகிழ்ச்சி என்றாலும், 'நம் வீட்டு வாசலில் ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியின் சைரன் பொருத்திய கார் நிற்கவில்லையே; நீ காக்கிச் சீருடை அணிந்து இந்த வீட்டில் வளைய வரவில்லையே!'



என்கிற மனக்குறை எனக்கு அடி மனதில் உண்டு' என்று சொல்லுவார்.

நானும் ஒரு நடிகனாக வருவேன்; சினிமாவில் சம்பாதிப்பதை வைத்துக்கொண்டு சௌகரியமான வாழ்க்கை வாழ்வேன் என்று சராசரியாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், இறைவன் அருளால் இன்று பெரிய பேரும், புகழும், பணமும் கிடைத்திருக்கிறது.

என் அம்மா, சகோதரன் இருவரும் அளித்த சப்போர்ட்டை நான் மறக்க முடியாது. கொல்லத்தில் பிசினஸ் செய்துகொண்டிருக்கும் எனது மிக நெருங்கிய நண்பனும், வழிகாட்டியுமான நிஜாமுதீனுக்கும் என் ஆயுசுக்கும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்லாண்டுகளாக இந்திய சினிமாவிலேயே மலையாளப் படங்கள் தரத்தில் தனித்து நிற்க அடிப்படைக் காரணம் ரசிகர்கள். பொதுவாகவே, ரசிகர்களின் விருப்பம், ரசனை இவற்றின் பிரதிபலிப்பாகத்தான் படங்கள் இருக்கும். மலையாளப் படங்களைப் போன்றே வங்காளப் படங்களும்கூடத் தனிச் சிறப்பானவைதாம்.

விருது, வெற்றி இரண்டுமே நடிகனுக்கு சந்தோஷம் தருபவை. இரண்டுமே அவனுக்கு அவசியம். 1997 வரை எனக்கு சிறந்த நடிகருக்கான மாநில அரசின் விருதுகூட கிடைக்கவில்லை. இத்தனைக்கும் நான் அந்த பீரியடில் மலையாளத்தில் முன்னணி நடிகர்களுள் ஒருவனாக இருந்தேன். பத்திரிகைகளும், விமர்சகர்களும் 'எனக்கு நடிப்பு வராது; துப்பாக்கி மட்டும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால், சுரேஷ் கோபி என்ற நடிகரே சினிமாவுக்குக் கிடைத்திருக்க மாட்டார்' என்று கடுமையாக விமர்சனம் செய்வார்கள். எனக்கு இது மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. இனியும் இப்படி ஒரு விமர்சனத்துக்கு இடம் தரக்கூடாது



என்று தீர்மானித்தேன். ஒரு தயாரிப்பாளருடன் கூட்டு சேர்ந்து, 'களியாட்டம்' என்ற படத்தைத் தயாரித்து, அதில் நானே நடித்தேன். அதற்காக எனக்கு சிறந்த நடிகருக்கான மாநில அரசின் விருது மட்டுமில்லை, தேசிய விருதும் கிடைத்தது.''

- எஸ்.சந்திரமௌலி



ஆசிரியர் பக்கம்

தலையெழுத்து வாசகம்!?

அரையிருட்டில், அடையாறு பால மருகே சாலையைக் கடந்த இளைஞனின் டீ ஷர்ட் வாசகத்தை, வாகன விளக்குகள் பளிச்சென்று எடுத்துக் காட்டின: I think better when I am drunk. (குடித்துவிட்டு போதையில் இருக்கிறபோது நான் மேலும் சிறப்பாகச் சிந்திக்கிறேன்). ஆச்சரியக் குறியற்ற இந்த அதிர்ச்சி வாசக டீ ஷர்ட்டை அணிந்திருந்தவனுக்கு பதினைந்து - பதினாறு வயதுக்கு மேல் இராது.

வாலிபம் என்பது அனைத்து விதிகளையும் கேள்விக்கு உட்படுத்தும் பருவம்; மீறத் துடிக்கும் வயது. புதிய சூத்திரங்களைப் படைக்க விரும்பும் காலகட்டம். அவை அனைத்துமே ஆரோக்கியமானவையாக இருந்துவிடுவதில்லை. சில 'புரட்சிகள்' வாலிபத்தோடு உதிர்ந்துவிடுகின்றன. வேறு சில விஷப் பரீட்சைகள் வாழ்க்கையையே பலி கொள்கின்றன.

காலந்தோறும் இந்தச் சுழற்சி நிகழ்ந்து கொண்டிருந்தாலும், இன்று அது எடுத்திருக்கும் விபரீத வேகமும் திசையறியா மூர்க்கமும் கவலையுடன் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன.

ரகசியமாக, குற்ற உணர்வுடன் எப்போதேனும் ஒரு முறை மது அருந்துவது என்பது மாறி, பகிரங்கமாக (சில சமயம் பெற்றோருடன் கூடவே) அருந்துவதும், அருந்தியதைப் பெருமிதத்துடன் பிரகடனப்படுத்துவதும் நடைமுறையாகியிருக்கிறது. 'திருட்டுத்தனமாகத் தப்பு செய்வதைக் காட்டிலும் ஊரறிய ஊற்றிக் குடிப்பது நாணயமானது' என்று வாதிடும் பெற்றோர்கூட இருக்கிறார்கள். மது விலக்கு அற்ற சூழலில் வளர்ந்த முந்தைய தலைமுறை, குடிப்பதற்கு இன்றைய தலைமுறை காட்டும் அவசரத்தை ஏற்று, நியாயப்படுத்தவும் முன்வருகிறது.

குடித்து உடம்பைக் கெடுத்துக் கொள்வது தனி மனித சுதந்திரம் என்று வாதிடலாம்.

குடித்தால் உற்சாகமாக இருக்கிறது என்று சத்தியம் செய்யலாம்.

'என் குழந்தைகள் தனியே நியூ இயர் பார்ட்டிக்குப் போக அனுமதிப்பதைக் காட்டிலும், நானே அவர்களை அழைத்துப் போவது மேல்' என்று பெற்றோர் ஐ.டி. யுகத்தின் புது தர்மம் பேசலாம்...

ஆனால், மது மனிதனை மிருகமாக்குவதை யாரும் மறுக்க முடியாது. கூட்டமாகச் சேர்ந்து குடிக்கிறபோது, ஆட்டு மந்தை புத்தி படைத்த ஓநாய்களாகி, சமுதாயத்தில் ஆறாத ரணங்கள் ஏற்படுத்துகிறார்கள் இளைஞர்கள்.

இந்தப் புத்தாண்டில் நாடெங்கும் அத்தகைய ரணங்கள்! மது அருந்துவதால் பாலுணர்ச்சி உள்பட பலவிதமான உணர்வுகள் மிதமிஞ்சித் தூண்டப்படுகின்றன.

ஒவ்வொரு துளி மதுவும் மூளையின் சீரான இயக்கத்துக்கு நிரந்தர நாசம் விளைவிக்கிறது.

இந்த நாட்டின் தலைசிறந்த வளம், அதன் இளைஞர்கள். மேற்கத்திய நாகரிகம் என்ற பெயரில் அந்த வளம் சிதைக்கப்படவும் அழிக்கப்படவும் அனுமதிப்பது தேசத் துரோகம். அரசு வேடிக்கை பார்ப்பது அநீதி; பெற்றோர் துணை போவது மகா பாவம்!

ஒரு இளைஞனின் டீ ஷர்ட் வாசகம் இந்த நாட்டின் தலையெழுத்து வாசகமாகி விடக் கூடாது!

ஆறுதல் கவிதை எழுதுங்க!

ஆஸ்திரேலிய டெஸ்ட்டில் டிராவிடுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு பொங்காதவர்கள் இருக்க மாட்டோம். உங்கள் இதய வரிகளை ஆறுதல் வார்த்தைகளாக்கி, எழுதுங்கள் டிராவிடுக்கு ஓர் ஆறுதல் கவிதை. ஏழே வரிகள், போஸ்ட் கார்டில் மட்டும், கடைசி தேதி 20.01.2008 என்பதுதான் விதிமுறைகள்.

ரெடி ஜூட்!



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

ஸ்ரீவித்யா துணை